


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:206 | 10-02-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

10.02.2026 தை 27
செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
அஷ்டமி காலை 9.09 வரை
பிறகு நவமி

நட்சத்திரம்:
விசாகம் காலை 9.35 வரை
பிறகு அனுஷம்

யோகம் :
மரண/சித்தயோகம்

நல்ல நேரம்
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி
இராகு காலம்
பிற்பகல் 3.00–4.30 மணி
எமகண்டம்
காலை 9.00 10.30 மணி.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# டாடா மோட்டார்ஸ் ஆலையை திறந்து வைத்தார் முதல்வர்

**இராணிப்பேட்டை, பிப்.10:** பனப்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள டாடா மோட்டார்ஸ் கார் உற்பத்தி தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்து வைத்தார்.

தமிழக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வாத்தகத் சாரபில், ராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் துறை தொழிற்பூங்காவில் ரூ.9,000 கோடி முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைக்க 28.09.2024 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்ட நிலையில். டாடா தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்து வைத்தார்.



டாடா நிறுவன கார் ஆலையை தொடங்கிவைத்து ரேஞ்ச் ரோவர் காரை முதல்வர் ஸ்டாலின் ஓட்டினார். காரை முதல்வர் ஓட்டிய நிலையில் டாடா குழும தலைவர் சந்திரசேகரன் முன் சீட்டில் அமர்ந்திருந்தார்.

நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, எம்.பி.க்கள், எம்எல்ஏ-க்கள் பங்கேற்றுள்ளனர். இந்த தொழிற்சாலையில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 2 லட்சம் கார்களை தயாரிக்க டாடா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# குரூப் 2, 2ஏ தேர்வுகள் மார்ச் 15-ல் நடைபெறும்

**சென்னை, பிப்.10:** தொழில்நுட்பக் காரணங்களால் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த குரூப் 2 மற்றும் 2ஏ போட்டித் தேர்வுகள் திடீரென ரத்து செய்யப்பட்ட நிலையில், அந்த தேர்வுகள் மார்ச் 15-ஆம் தேதி நடைபெறும் என டிஎன்பிஎஸ் அறிவித்துள்ளது.

ரத்து செய்யப்பட்ட குரூப் 2 மற்றும் 2ஏ போட்டித் தேர்வுகள் வரும் மார்ச் மாதம் 15ஆம் தேதி நடைபெறும் என்றும், அந்த தேர்வுக்கான நுழைவுச் சீட்டு பிப்ரவரி 28ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யப்படும் என்றும், தேர்வர்கள் வழக்கமான முறையில் ஓடிஆர் எண்ணைப் பயன்படுத்தி நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.


தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக (டிஎன்பிஎஸ்சி) ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி 2 (குரூப் 2, குரூப் 2ஏ) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சென்னை அரும்பாக்கத்தில் உள்ள ஒரு தேர்வு மையத்துக்கு தேர்வு எழுதச் சென்றவர்கள் பலரின் பதிவு எண் இல்லாததால் குழப்பம் ஏற்பட்டது. இதனால், அங்கு தேர்வர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதை அடுத்து, தமிழகம் முழுவதும் குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ தேர்வு ரத்து செய்யப்படுவதாக தேர்வாணையம் அறிவித்தது. இதனால் மாநிலத்தின் பல்வேறு தேர்வு மையங்களில் ஆர்வமுடன் தேர்வு எழுதிக்கொண்டு இருந்த தேர்வர்கள் திடீரென தேர்வு ரத்து செய்யப்பட்டதாகக்கூறி அறையை விட்டு வெளியேற அறிவுறுத்தப்பட்டனர். இதனால், தேர்வு எழுதியவர்கள் கடும் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தனர்.

### குரூப் 2 மற்றும் 2ஏ

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், தனிப்பிரிவு உதவியாளர், வனவர் உள்பட அரசுத் துறைகளில் காலியாக உள்ள 828 பணியிடங்களை நிரப்பும் வகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில், குரூப்-2 மற்றும் 2 ஏ முதன்மைத் தேர்வுகள் நடத்தப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

# லெபனான் கட்டடம் இடிந்து விபத்து; 15 பேர் பலி, 8 பேர் மீட்பு



**பெய்ரூட், பிப்.10:** மேற்காசிய நாடான லெபனானில் ஏராளமான பழைய கட்டடங்கள் உள்ளன. போதிய பராமரிப்பு இல்லாததால் அங்கு கட்டட விபத்து என்பது வாடிக்கையான ஒன்றாகவே உள்ளது. இந்நிலையில், வடக்கு மாகாணமான திரிப்போலியில், பாப் அல் தபானே என்ற பகுதியில்,நேற்று முன்தினம் மாலை குடியிருப்பு கட்டடம் ஒன்று திடீரென இடிந்து தரைமட்டமானது.

இந்த விபத்து நிகழ்ந்தபோது 20க்கும் மேற்பட்டோர் கட்டடத்தில் இருந்துள்ளனர். இதில் 15 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்; எட்டு பேர் காயங்களுடன் மீட்கப் பட்டனர்.

# எந்தவொரு தடையும் ஏற்படுத்த அனுமதிக்க மாட்டோம்: SIR விவகாரத்தில் மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

**புதுடில்லி, பிப்.10:** SIR விவகாரம் தொடர்பாக மேற்கு வங்க மாநிலம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக வழக்கு விசாரணை இன்று தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான ஜாய்மல்யா பாக்சி, என்.வி. அஞ்சாரியா நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது ஆவணங்களை சமர்ப்பிக்க ஒருவாரம் காலஅவகாசம் வழங்கப்படுகிறது. வருகிற 14-ந்தேதி வரை காலக்கெடு கொடுக்கப்பட்ட நிலையில், மேலும் ஒருவாரம் நீட்டிக்கப்படுகிறது. இந்த விவகாரத்தில் எந்தவொரு உத்தரவு அல்லது விளக்கம் தேவைப்படும் என்றால், அது பிறப்பிக்கப்படும்.

SIR செயல்முறையில் எந்தவொரு தடையும் ஏற்பட நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இது மாநிலங்களுக்கு தெளிவாக தெரியவேண்டும்.இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேற்கு வங்காளத்தில் SIR பயிற்சியை தடம்புரளச்செய்யவும், முடக்கவும், விரக்தியடையவும் வேண்டுமென்றே மற்றும் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் தனது கூடுதல் பிரமாணப் பத்திரத்தில் சமர்ப்பித்திருந்தது.

மேலும் சமூக விரோதிகள் அறிவிப்பு நோட்டீஸ்களை தீவைத்து எரித்ததாக தெரிவித்ததுடன், இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யவில்லை என மம்தா அரசு மீது குற்றம்சாட்டியிருந்தது.

இதற்கு, மேற்கு வங்க டிஜிபி இது தொடர்பாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

# வேட்பாளர் தேர்வு: மாவட்ட செயலாளர்களுடன் த.வெ.க. தலைவர் விஜய் நாளை ஆலோசனை

**சென்னை, பிப்.10:** த.வெ.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் விருப்பமனு பெற்றுக்கொள்ளலாம் என த.வெ.க. அறிவித்தது, விருப்பமனு விநியோகம் செய்யப்பட்ட அன்று 1.30 மணி நேரத்திற்குள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் விநியோகம் செய்யப்பட்டன. அதிகமான கூட்டம் வந்ததால் ஆன்லைன் மூலம் விருப்பமனு பெற்றுக்கொள்ளலாம் என கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.



தொடர்ந்து விருப்ப மனு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நாளை மாவட்ட செயலாளர்களுடன் தலைவர் விஜய் ஆலோசனை நடத்துவார் என ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தேர்வு குறித்து மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை நடத்துவார் எனத் தெரிகிறது. இந்த கூட்டம் Zoom Meeting மூலம் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

# திருப்பரங்குன்றம் தர்காவில் பக்ரீத், ரமலானில் மட்டுமே தொழுகை : உச்சநீதிமன்றம்

**புதுடில்லி, பிப்.10:** திருப்பரங்குன்றம் மலைமீதுள்ள தர்காவில் அனைத்து நாள்களிலும் தொழுகை நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் இன்று (பிப். 9) தள்ளுபடி செய்தது.

மேலும், பக்ரீத், ரமலான் போன்ற சிறப்பு நாள்களில் மட்டும் தொழுகை நடத்த வரையறுக்கப்பட்ட உரிமைகள் உள்ளதாக உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.

மேலும், விலங்குகளை பலியிட உத்தரவிட முடியாது என்ற உத்தரவையும் உறுதிப்படுத்தி மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

திருப்பரங்குன்றம் முருகன் கோயில் அருகே நெல்லித்தோப்பு பகுதியில் உள்ள தர்காவில் பக்ரீத், ரலமான் பண்டிகைகள் மட்டுமின்றி அனைத்து நாள்களிலும் தொழுகை நடத்த அனுமதி கோரி உச்சநீதிமன்றத்தில் எம். இமாம் உசேன் என்பவர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.



இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், அரவிந்த் குமார் மற்றும் பி.பி வரலே அடங்கிய அமர்வு, உயர்நீதிமன்றம் முன்பு பிறப்பித்த உத்தரவை உறுதி செய்து மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் பிரஷாந்த் பூஷண், "நெல்லித்தோப்பு பகுதி இஸ்லாமியர்களுக்குச் சொந்தமானதாகஇருக்கும்போது, அங்கு தொழுகை நடத்த அனுமதி மறுப்பது ஏற்புடையதல்ல. தொழுகை நடத்துவதால் அங்கு சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டதில்லை" என வாதிட்டார்.

வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சமநிலையாக உள்ளதாகவும், இதில் தலையிட விரும்பவில்லை எனக் குறிப்பிட்டு மனுவை தள்ளுபடி செய்தனர்.

இதன்மூலம், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, ரமலான், பக்ரீத் போன்ற பண்டிகை நாள்களில் மட்டும் தர்காவில் தொழுகைநடத்திக்கொள்ளலாம். விலங்குகள் பலியிட அனுமதி இல்லை என்ற உயர்நீதிமன்ற உத்தரவை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.






# பாஜக மாநில அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகம் மாற்றம்!

**சென்னை, பிப்.10:** தமிழக பாஜக அமைப்பு பொதுச் செயலாளர் கேசவ விநாயகம் மாற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இருந்து கேசவ விநாயகத்துக்கு வேறு பதவி வழங்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னை சேத்துப்பட்டில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் பி.எல். சந்தோஷ் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அண்ணாமலை தரப்பில் இருந்து புகார் கூறப்பட்டு வந்த நிலையில் பாஜக பொறுப்பில் இருந்து கேசவ விநாயகம் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் தமிழக பாஜக அமைப்பு பொதுச் செயலாளராக கேசவ விநாயகம் பொறுப்பு வகித்து வந்தார். 10 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பொறுப்பில் இருந்துவந்த



நிலையில், தற்போது அதிரடியாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழக பாஜக முன்னாள் தலைவராக இருந்த அண்ணாமலை தரப்புக்கும் கேசவ விநாயகம் தரப்புக்கும் இடையே மோதல்போக்கு நீடித்து வந்ததாகக் கூறப்பட்ட நிலையில், இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. விரைவில் பாஜக அமைப்பு பொதுச் செயலாளர் பொறுப்பில் வேறு நபர் நியமிக்கப்படவுள்ளார்.




## திருக்குறள் குறள்-526

**பெருங்கொடையான் பேணான் வெகுளி
அவனின் மருங்குடையார் மாநிலத் தில்**



பெரிய கொடையாளியாகவும்
சினமற்றவனாகவும்
ஒருவன் இருந்தால்
அவனைப் போல்
சுற்றத்தாரை உடையவர்
உலகத்தில் யாரும் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



கோபத்தை
கேடயமாக
பயன்படுத்தலாமே
தவிர ஆயுதமாக
பயன்படுத்த கூடாது

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

# இன்று உலக குடை தினம்




ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 10 உலக குடை தினம் கடைபிடிக்கப்படுகிறது.

குடை கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்தில் உள்ளது. முதலில் மேற்கு ஆசியாவில் உள்ள வரலாற்று புகழ் வாய்ந்த மெசபடோமியா பகுதியில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

முதலில் இது பனை இலையைக் கொண்டும் பாப்பிரஸ் மற்றும் மயில் இறகினாலும் செய்யப்பட்டது.

சைனாவில் மூங்கில்களை குச்சியாக்கி, அதன் மேல் இலைகளையும் , இறகினாலும் மறைக்கப்பட்டு, பயன்படுத்தி வந்தார்கள். பிரஞ்ச் மொழியில் *parapluie* என்றால் குடை என்று பெயர்.

அதாவது, *para* என்றால் பாதுகாப்பு என்று பொருள் . ஈரோப்பில் கருங்காலி மற்றும் கரும்புகளில் அழகாக செதுக்கியும் குடைகளை உபயோகப்படுத்தி வந்தனர்.

குடை அதிகமாக எகிப்து, கிரீஸ் மற்றும் சீனாவில் தான் அதிகமாக புழக்கத்தில் இருந்தது. அவர்கள் மழை மற்றும் வெயில்களிலிருந்து தங்களை காத்துக் கொள்வதற்காக பயன்படுத்தினர்.

இந்தியாவில் குடை பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாக, நம் முன்னோரகள், கோணிகளையும், அடர்த்தி மிகுந்த துணிகளை பயன்படுத்தினர். பின்னர் நாகரீகம் மாற மாற இந்தியாவில் குடை பயன்பாட்டிற்கு வந்தது.

பின்னர் குடை அந்தஸ்தின் அடையாளாமாகக் கருதப் பட்டது. பேருந்து மற்றும் போக்குவரத்து அதிகம் பயன்படுத்தாத நாட்களில் மக்கள் தங்களின் நீண்ட பயணத்திற்கு பாதுகாப்பாக குடைகளை பயன்படுத்தி வந்தனர்.



19 நூற்றாண்டில், நவீன குடைகள் கண்டுபிடிக்கப் பட்டன. அதன் பிறகு குடைகளில் பலவகை வகைகள் வடிவமக்கப்பட்டன. சிறிய மடக்கு குடை , மரத்துண்டுகளான நீண்ட பெரிய குடை என்றும், பல வண்ணங்களிலும் வடிவமக்கப்பட்டன. குழந்தை களை கவரும் வகையில் சிறிய, வண்ணங்களைக் கொண்டு அழகிய வேலைப்பாட்டுடன் கூடியதாக குடைகள் தற்பொழுது சந்தைப்படுத்தப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, குடைகள் பலதரப்பட்ட நோக்கங் களுக்காகப் பயன்படுத்தக்கூடிய பல்துறை மற்றும் நடைமுறைக் கருவிகள், அவை பலருக்கு இன்றியமையாத பொருளாக இருக்கிறது. சர்வதேச குடை நாளான இன்று நாம் ஒரு குடையை வாங்கி தேவையுள்ளவர்க்கு பரிசாக தரலாமே.

**தொகுப்பு: பா.சீனிவாசன், வந்தவாசி.**

## தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் வழங்கும் நிகழ்ச்சி



**சென்னை, பிப்.10:**
சென்னை திருவள்ளூர் மாவட்டம் 9.2.2026 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தூய்மை பணியாளர்களுக்கு உணவு திட்டம் விரிவாக்கத்தை திருவள்ளூர் மாவட்டம் போளி வாக்கத்தில் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு பன் நோக்கு அரங்கத்தில் மாண்புமிகு. சட்டமன்றத்துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் தொடங்கி வைத்தார். உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள், மாநகராட்சி மேயர் நிர்மலா கார்த்திவேல் மாறன் அவர்கள் துறை சார்ந்த அனைத்து அரசு அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தீயணைப்பு அடிப்படை பயிற்சி



**வாடிப்பட்டி, பிப்.10:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்புகள் பணிகள்துறை சார்பாக தனியார் பாதுகாவலர்களுக்கு தீயணைப்பு அடிப்படை பயிற்சி தீயணைப்பு நிலையத்தில் நடந்தது. இந்த பயிற்சிக்கு நிலைய அதிகாரி பாலசந்திரன் தலைமை தாங்கி தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள், கல்லூரி நிறுவனங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற கட்டிடங்களில் தீ விபத்து ஏற்படும்போது அங்கே பணிபுரியும் பாதுகாவலர்கள் உடனடியாக தீயணைப்பு பணியில் ஈடுபட்டு அதிக அளவில் பொருள் சேதம் மற்றும் உயிரிழப்புகளை தடுப்பது சம்பந்தமாக விரைந்து எளிய முறையில் தீயணைக்கும் அடிப்படை பயிற்சியளித்தார். இதில் வாடிப்பட்டி பகுதி சேர்ந்த ஏராளமான தனியார் பாதுகாவலர்கள் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை, பிப்.10:**
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் குறை தீர்வு நாள் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் அனைவரும் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## செய்யாறு கலைஞர் சிலை அருகே தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாட்டில் அன்னதானம் !



**செய்யாறு, பிப். 10 :**
செய்யாறு கலைஞர் சிலை அருகே 39ம் நாளான நேற்று செய்யாறு தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்களான மகேஷ், உலகநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது. செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி, ஒன்றிய செயலாளர்களான ஞானவேல், ஜே.சி.கே. சீனுவாசன், தினகரன், ஆகியோர் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். முன்னாள் எம்.எல்.ஏ., அன்பழகன், நகர செயலாளர் விஸ்வநாதன், புரிசை சிவக்குமார், கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதையடுத்து தி.மு.க., பொறுப்பாளர்களான சந்துரு, பாண்டியன், செல்லி, கல்பட்டு பிரகாஷ், ராகேஷ், சீனு, சிலம்பரசன், கருணாமூர்த்தி கவுன்சிலர்கள் கோவேந்தன், ரமேஷ், சூரிய பிரகாஷ் , தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கி மகிழ்ந்தனர்.

## செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கௌரவ விரிவுரையாளர் கூட்டமைப்பு சார்பில் காலவரையற்ற வகுப்பு புறக்கணிப்பு போராட்டம்



**செய்யாறு பிப்.10:**
செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் கௌரவ விதிவிலையாளர்கள் சங்க கூட்டமைப்பு சார்பில் ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் சுமார் 8ஆயிரத்திறகும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். கல்லூரியில் 163 கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது.

தமிழ்நாடு அரசு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றததால் அரசு கலைக் கல்லூரி கௌரவ பேராசிரியர்கள் காலவரையற்ற வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் மாநில முழுவதும் நடத்தி வருவதாக தெரிய வருகிறது. கௌரவ பேராசிரியர்களின் 5 அம்ச கோரிக்கைகளான 12 மாத ஊதியம், யுஜிசி நிர்ணயம் செய்த ரூ 57,700, கௌரவ விரிவிரையாளர்களுக்கு வழங்க வேண்டும். அனைத்து அரசு கல்லூரி கௌரவிரிவுரையாளர்களுக்கு 12 மாதம் சம்பளம் வழங்க வேண்டும். ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும். அனைத்து அரசு கல்லூரி கௌரவிளாளர்களுக்கு பிஎப் ,இ பி எப் வழங்க வேண்டும் . உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைத்து போராட்டம் நடைபெற்றது இப் போராட்டம் தொடர் போராட்டமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கிளை தலைவர் எஸ் ராஜேந்திர குமார் தலைமை தாங்கினார் பொருளாளர் எம் நூர்முகமது துணைத்தலைவர் ராஜி துணை செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆ. அரங்கநாதன், எ. அன்பரசு, ரா. கஜேந்திரன், ஏ. மீனாட்சி, எஸ். லீனஸ் ஆகியோர் கருதுரை வழங்கினர்.

வி. சிவகுமார், பி. பிரகாஷ், வி .ஜோதிமணி, எஸ். பார்த்தசாரதி, டி. குணாநிதி, உள்ளிட்ட 120க்கும் மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர் பொறுப்பாளர் த. சுப்பிரமணியன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தார்.

**எறும்பூர் கை. செல்வகுமார், செய்யாறு.**

## பார் கவுன்சில் தேர்தல் வாக்கு சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களில் பார் கவுன்சில் தேர்தலை முன்னிட்டு பிரச்சாரம் மேற்கொண்டு திரு. பாலு கலியபெருமாள் அவர்கள் வழக்கறிஞர்களிடம் வாக்கு சேகரித்தார். வழக்கறிஞர்கள் அனைவரும் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மானிய விலையில் உணவகம்



புதுச்சேரி அரசுடன் இணைந்து ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மானிய விலையில் உணவகத்தை முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்தார்.

## தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள்



சென்னை மெரினா நீலக்கொடி கடற்கரை பகுதியில் மாநகராட்சி சார்பில் நடந்த கலைவிழாவில், தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

## தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம்



கள்ளக்குறிச்சியில் நேற்று தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்து, அவர்களுடன் அமர்ந்து கலெக்டர் பிரசாந்த் சாப்பிட்டார்.

## மாணவர்கள் குழுவாக இணைந்து கைமுறை கிளைடர்களை வடிவமைத்து சாதனை




தஞ்சை பெரியார் மணியம்மை அறிவியல், தொழில் நுட்ப நிறுவனம், தஞ்சாவூர் ஆரா ஏரோஸ்பேஸ் நிறுவனத்துடன் இணைந்து ஆயிரம் கனவுகளின் விமானம் என்ற விண்வெளி சார்ந்த நிகழ்ச்சி நடத்தி, இந்தியா புத்தக சாதனை மற்றும் ஆசியா புத்தக சாதனையில் இடம் பிடித்தது. மாணவர்கள் குழுவாக இணைந்து கைமுறை கிளைடர்களை வடிவமைத்து சாதனை படைத்தனர்.

## புதுப்பாளையம் பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் துவக்க விழா



**திருவண்ணாமலை, பிப்.10:**
திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் பேரூராட்சியில் மாண்புமிகு மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்களின் வழிகாட்டுதலின்படி கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் அவர்கள் புதுப்பாளையம் பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். மற்றும் துறையைச் சார்ந்த அலுவலர்கள், புதுப்பாளையம் பேரூராட்சி தலைவர் செல்வ பாரதி மனோஜ்குமார் அவர்கள், கழகத் தோழர்கள், தூய்மை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## கனமழையின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த 3 பேர் குடும்பத்துக்கு ரூ.30 லட்சம் நிதி

கடலூர், பிப்.10:

கடலூர் மாவட்டம், சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் கனமழையின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த 3 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியாகதலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.30 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

சிதம்பரம் வட்டம், ஒரத்தூர் குறுவட்டம், சி.சாத்தமங்கலம் கிராமம் மேட்டுத்தெருவைச் சேர்ந்த 70 வயதுடைய வனதாஸ்மேரி (கணவர் பெயர் ரோசாப்பூ), 70 வயதுடைய மரியசூசை (தந்தை பெயர் அந்தோணி), 65 வயதுடைய பிலோன்மேரி (கணவர் பெயர் மரியசூசை) ஆகிய மூன்று நபர்கள் கனமழையின் காரணமாக நெஞ்சாலையின் ஓரத்தில் இருந்த புளியமரம் வேரோடு சாய்ந்ததில் மின்சார கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி 23.11.2025 அன்று இறந்துவிட்டனர். இறந்துவிட்ட குடும்பத்தினருக்கு தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் மூலம் தலா ரூ.10 இலட்சம் வழங்க ஆவணம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வனதாஸ்மேரி, மரியசூசை, பிலோன்மேரி ஆகிய மூன்று நபர்களின் வாரிசுதாரர்களான புனிதா, ஆரோக்கியதாஸ், சுகன்யா ஆகியோர்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.30 லட்சத்திற்கான காசோலையினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தில் ரூ.3 கோடி கையாடல்: தலைமை செயல் அதிகாரி கைது

சென்னை, பிப்.10:

சென்னை மாதவரம் பால்பண்ணை யில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில், செங்குன்றம் அடுத்த ஆட்டந்தாங்கல், பாலகணேசன் நகரைச் சேர்ந்த வடிவேல் (வயது 37) என்பவர் 2021-ம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்துக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வாங்கும் தலைமை செயல் அதிகாரியாக (சி.இ.ஓ.) பணியாற்றி வந்தார். கடந்த 2004-ம் ஆண்டு பல்கலைக் கழகத்தில் தேர்வு கட்டுப்பாட்டாளராக பொறுப்பேற்ற டாக்டர் கார்த்திகேயன், பல்கலைக்கழகத்தில் கணக்கு வழக்குகளை ஆய்வு செய்தார். அப்போது பல்கலைக்கழகத்தில் மருந்து, மாத்திரைகள் வாங்கியதில் கோடிக் கணக்கில் பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இது குறித்த விசாரணையில், தலைமை செயல் அதிகாரியான வடிவேல், தான் பணியில் சேர்ந்த நாள் முதல் பல்கலைக்கழகத்துக்கு வாங்கப்பட்ட பொருட்களுக்கு கணக்குகளை இயக்கு னரிடம் காண்பித்து கையெழுத்து வாங்கி பணம் பெற்று வந்தார். கையாடல் செய்த பணத்தை வைத்து புதிதாக இடம், கார் உள்ளிட்டவை வடிவேல் வாங்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து வடிவேல் பணியில் இருந்து நீக்கப்பட்டார். கணக்குகளை சரிபார்த்த போது வடிவேல் சிறுக சிறுக ரூ.1 கோடியே 85 லட்சத்து 38 ஆயிரம் வரை பல்கலைக்கழகத்தின் பணத்தை கையாடல் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் தேர்வு கட்டுப்பாட்டாளர் கார்த்திகேயன் அளித்த புகாரின்பேரில் வடிவேலுவை கைது செய்து விசாரித்து வருகிறார்.

## 1.8 கிலோ கஞ்சா பறிமுதல்: 3 பேர் கைது

சென்னை, பிப்.10:

திருநெல்வேலி மாவட்டம், திருக்குறுங்குடி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ஏர்வாடி (பொறுப்பு) சப்-இன்ஸ்பெக்டர் சுபாஷினி தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், ராஜபுதூர் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நம்பிதலைவன்பட்டயத்தை சேர்ந்த சண்முகசுந்தரம் (வயது 32), நம்பிராஜா(23), இசக்கிராஜா(28) ஆகிய 3 பேரையும் போலீசார் சோதனை செய்து பார்த்தனர்.

அப்போது அவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய 1 கிலோ 800 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து மேற்சொன்ன சப்-இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சண்முகசுந்தரம், நம்பிராஜா, இசக்கிராஜா ஆகிய 3 பேரையும் கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். மேலும் அவர்களிடமிருந்து 1 கிலோ 800 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர்.

## மத்திய கைலாஷ் சந்திப்பில் ரூ.61 கோடியில் “எல்” வடிவ மேம்பாலம்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

சென்னை, பிப்.10:



சென்னை மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் ரூ.61 கோடியில் கட்டப்பட்டுள்ள “எல்” வடிவ மேம்பாலத்தை முதலமைச்சர் ஸ்டாலின் வருகிற 16ந் தேதி திறந்து வைக்க உள்ளார்.

மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள “எல்” வடிவ இருவழிச் சாலை மேம்பாலம் கட்டுமானப் பணி நிறைவுபெற்று, முதலமைச்சரால் திறக்கப்படவுள்ளதை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:

யாதெனில், மத்திய கைலாஷ் பகுதியில் சர்தார் பட்டேல் சாலையிலிருந்து துவங்குகிறது. இந்த இரண்டு சாலைகளும் சந்திக்கும் இடம் “T” வடிவிலானதாகும். இச்சாலை சந்திப்பில், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, மிகுந்த சிரமத்துடனும் கால விரயத்துடன் கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, இந்தச் சாலைச்சந்திப்பில் வாகனங்கள் சிரமமின்றி கடந்து செல்வதற்கு வாகனச்செறிவுகளின் அடிப்படையில், சர்தார் பட்டேல் சாலையிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்குச் செல்லும் வாகனங்கள் இம்மேம்பாலத்தினை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், அடையாறு பகுதியிலிருந்து, கிண்டி நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும், கிண்டி பகுதியில் இருந்து அடையாறு செல்லும் வாகனங்களும் மற்றும் ஓ.எம்.ஆர். சாலையிலிருந்து கிண்டிக்கும் செல்லும் வாகனங்களும் தங்குதடையின்றிச் செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

இச்சாலைச் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து சமிக்ஞையும் விலக்கிக் கொள்ளப்படும். மேலும், இருவழிச்சாலை மேம்பாலத்தினை செயல்படுத்துவதற்கு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ரூ.61 கோடி மதிப்பீட்டில் பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பாலம் இருவழித்தடம் அகலம் கொண்டதாகவும், ஒருவழி வாகனப் போக்குவரத்து கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 652 மீட்டர் ஆகும் (அணுகு சாலை உட்பட).

சர்தார் பட்டேல் சாலையிலிருந்து, ராஜீவ் காந்தி சாலைக்குப் பிரிந்து செல்லும் இடத்தில் பாலம் வளைவாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளைவானது 30 கி.மீ. வேகத்தில் வாகனங்கள் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வளைவுப் பகுதியில் பாலத்தின் அகலம் கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பாதுகாப்புக்காக பாலத்தின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவரின் உயரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வளைவுப் பகுதியில் எவ்வித பயமின்றி பயணிக்கலாம். இருப்பினும், பாலத்தின் மீதான பயணத்திற்கு வேக கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வேக கட்டுப்பாட்டிற்கான எச்சரிக்கை பலகைகள் பாலத்தின் தடுப்புச்சுவரில் பொருத்தப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் பாதுகாப்பான பயணத்திற்கு மின்விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த “எல்” வடிவ இருவழிச்சாலை மேம்பாலத்தின் பணிகள் முடிவுற்றுள்ள நிலையில், முதலமைச்சரால் வரும் 16ந் தேதி அன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

## 23 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு 16ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்: தூத்துக்குடி கலெக்டர்

திருவள்ளூர், பிப்.10:




தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்கு றிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, வட்டார இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள 23 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்பிட விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கான தகுதி மற்றும் விண்ணப்ப படிவம் thoothukudi.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளின் நகல்களுடன் தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், இரண்டாவது தளம், கோரம்பள்ளம் - 628101, தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 16.2.2026 (திங்கட்கிழமை) மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் வல்லம், நொளம்பூரில் கிராமம் தோறும் புத்தொழில் திட்டம்

விழுப்புரம், பிப்.10:

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் விழுப்புரம் மாவட்டத்தின் இரண்டு ஸ்டார்ட்அப் கிராமங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லம் மற்றும் நொளம்பூர் ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு அரசின் சார்பில் ”கிராமம் தோறும் புத்தொழில் திட்டத்தினை துவக்கி வைத்தார். பின்னர் கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்ததாவது: இந்த திட்டமானது கிராமப்புறங்களில் உள்ள தொழில் முனை வோர்களை ஊக்குவித்து எல்லாவற்றையும் உள்ளடக்கிய தொழில் முனைவு ஊரக புதுமை நிலைகத்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

புதிய தொழில்கள் கொண்டு ஊரக பகுதிகளில் உள்ளூர் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, உற்பத்தித்திறனை மேம்படுத்த கிராமங்களில் புதுமை சார்ந்த வளர்ச்சிக்காக கிராம பஞ்சாயத்துக்களை செயல்படுத்த இந்தத் திட்டமானது செயல்படுத்தப்படுகிறது.

மேலும், இந்த திட்டம் பற்றி மேலும் அறிய https://gtp.startuptn.in/ என்ற இணையதளத்தை பார்த்து தெரிந்துகொ ள்ளலாம் என கலெக்டர் தெரிவித்தார்.


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389




## நலம் தரும் மருத்துவம்

### கிவிப்பழமும் மருத்துவ குணங்களும்

சீனாவில் உள்ள சாங்கியாங் என்ற பள்ளத்தாக்குதான் கிவிப்பழத்தின் பூர்வீகம். சீன நெல்லிக்காய் என்றொரு பெயரும் இதற்குண்டு. உலகில் சத்து அதிகம் உள்ள பழம் இதுதான் என விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. கெட்ட கொழுப்பையும், மன அழுத்தத்தையும், புற்று நோயையும் கட்டுப்படுத்தும் மூலப் பொருட்கள் இதில் உள்ளன. வைட்டமின் ‘சி’, பொட்டாசியம் இதில் உள்ளன. கூடவே நார்ச்சத்து அடங்கிய உயர்ந்த உன்னதமான பழம் இது.

தினம் இரண்டு கிவிப்பழம் சாப்பிட்டு வர உடல் ஆரோக்கியம் பெறும். தொடர்ந்து புகைப்பதாலோ அல்லது வேறு வகையிலோ உருவாகும் நுரையீரல் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு அதிகம். இப்பழம் சாப்பிட்டு வந்தால் அம்மாதிரியான நோய் அகற்றப்படுகிறது.

வெண் குஷ்டம் மற்றும் தோல் நோய் வருவதை தடுக்கிறது. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் இப்பழம் நல்லது. கண்களை பெரிதும் பாதுகாப்பதோடு, பார்வை இழப்பையும் தடுக்கிறது. உடம்பில் உள்ள நல்ல கொழுப்பை தக்க வைக்கிறது.

இதயத்திற்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் ரத்தக்குழாயை விரிவடையச் செய்வதில் இதன் பங்கு மிகுதியானது. ரத்த அழுத்தத்தையும் தடுக்கிறது. வெப்பத்தில் வேலை செய்பவர்களுக்கு வியர்வை அதிகம் வெளியேறி நீரிழப்பு ஏற்படும். அந்த நீரிழப்பு இப்பழம் சாப்பிடுவதால் தவிர்க்கப்படுகிறது.

### உடலை உறுதியாக்கும் முருங்கை!

நாம் உண்ணும் உணவுவகைகளில் மிகவும் அற்புதமான ஆற்றல் நிறைந்தது முருங்கையில் தயாரிக்கப்பட்ட உணவுகளாகும். முருங்கையில் உயிர்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன. முருங்கையை வெளிநாடுகளில் அதிசயமரம் என்றும் உயிர் கொடுக்கும் மரம் என்றும் அழைக்கின்றனர். முருங்கையின் புத்துயிரூட்டும் சக்தியை நாம் பயன்படுத்தினால் நமது ஆரோக்கியம் சிறப்பாக அமையும். புத்துணர்வோடு வாழலாம்.

முருங்கை நோயெதிர்ப்புக் குணமுடையது. ஆயிரக்கணக்கான மூலிகைகளில் முதலாவதாக வைக்கத்தக்கது முருங்கையேயாகும். முருங்கையின் இலை, காய், பூ, பட்டை, வேர், பிசின் என அனைத்துமே மருத்துவ குணம் நிறைந்ததாகும். தமிழரின் சமையலில் முருங்கைக் கீரை, முருங்கைக்காய் ஆகிய இரண்டையும் அடிக்கடி காணமுடியும். இந்த இரண்டுமே சுவையும் மணமும் கொண்டவையாகும். சாம்பாரில் முருங்கை இலை உணவுக்கு ருசியூட்டக் கூடியதாகும்.

முருங்கைக்காயின் பிஞ்சுகளைச் சமைத்துச் சாப்பிட்டால் வாதம், பித்தம், சளி தீரும். முருங்கைப் பூக்களை சமைத்து சாப்பிட்டு வர ஆண் மலட்டுத் தன்மையை நீக்கும். உடல் பலப்படும். கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டும். சீதளத்தை முறிப்பதால் சுரம், தொண்டையில் வலி, அடைப்பு நீங்கும். முருங்கை மரத்தின் வேர்ப்பட்டையைக் கஷாயமிட்டுச் சாப்பிட்டால் வாத வீக்கங்கள் குணமாகும். இதயத்தைப் பலப்படுத்தும். ஆனால் இந்த கஷாயத்தை கர்ப்பிணி பெண்கள் அருந்தக் கூடாது. முருங்கை கீரையை அரைத்துச் சாறெடுத்து தயிரில் கலந்து குடித்தால் வயிற்றுப்புண் ஆறும். வாய்ப்புண்ணும் குணமாகும். ரத்தத்திலுள்ள கொழுப்பைக் குறைக்கும்.

முருங்கை இலையைக் கஷாயமாக்கி தினமும் 2 வேலைகள் குடித்தால் விக்கல், மூச்சுத்திணறல் சரியாகும். முருங்கை வேர்களை தண்ணீரிலிட்டு கொதிக்க வைத்து அதன் ஆவியைப் பிடித்தால் மூக்கில் சளி சொட்டுதலை குணப்படுத்தும். ஜலதோஷத்தினால் ஏற்படும் சளி அடைப்பு குணமாகும். முருங்கைப் பட்டையைக் கஷாயமிட்டு எடுத்து தேன் கலந்து குடித்தால் வயிற்றில் உள்ள புழுக்கள் ஒழியும். கட்டிகள் வீங்கி வலிக்கும்போது முருங்கை பட்டையைக் கஷாயமிட்டுக் குடித்துவந்தால், கட்டியினால் ஏற்படும் வலி குறையும். கீரைகளை அரைத்து கட்டியின் மீது பற்றுப் போட கட்டி உடைந்துவிடும். இந்த சமயத்தில் உணவில் முருங்கை காய்களை அதிகம் சேர்த்துக் கொண்டால் கட்டிகள் விரைவில் குணமாகும். முருங்கை மரத்தின் பட்டைக் கஷாயம் குடித்தால் சீழ் கட்டிகள் பழுத்து உடையும்.

கீரைகளை அரைத்துப் பற்றுப்போட, பழுக்காத கட்டிகள் கூட பழுத்து உடைந்து விரைவில் குணமாகும். முருங்கை இலை மற்றும் முருங்கை ஈர்க்குகளுடன் மிளகு சீரகம் சேர்த்து சூப் போன்று செய்து தினசரி காலை வேளையில் குடித்து வர ரத்தத்திலுள்ள சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கும்.

## சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தேர்வர்கள் வீட்டில் இருந்தே படிக்கும் வகையில் மனிதநேய மையம் ‘வீடியோ’ பாடங்கள்

சென்னை, பிப்.10:



சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தேர்வர்கள் வீட்டில் இருந்தே படிக்கும் வகையில் ‘வீடியோ’ பாடங்களை மனிதநேய மையம் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் இந்த ஆண்டு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட 933 காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த 4-ந்தேதி அன்று வெளியிட்டது. இந்த நிலையில் முன்னாள் மேயர் சைதை துரைசாமி தலைமையிலான மனிதநேய அறக்கட்டளை மையம் சார்பில் இந்த தேர்வுக்கு வீட்டில் இருந்து ‘வீடியோ’ மூலம் தேர்வர்கள் படிக்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மனிதநேய மையத்தின் தலைவர் சைதை துரைசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

மனிதநேய அறக்கட்டளை” கடந்த 2005ம் ஆண்டு தொடங்கப்பட்டு சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது.

மனிதநேய இலவச ஐஏஎஸ் பயிற்சி மையம் கடந்த 20 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ், இந்தியவனத்துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II, IIஏ போன்ற பதவிகளுக்கு ஆயிரக்கணக்கானோர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய பணியாளர் தேர்வாணையம் 2026-ம் இந்த ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ், ஐ.பி. எஸ் உள்ளிட்ட மொத்தம் 933 காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, கடந்த 4ந் தேதி அன்று அறிவிப்பு வெளியிட்டது. விண்ணப்பிக்க கடைசி நாள்: 24ந் தேதியாகும். இந்தியா முழுவதும் அனைத்து தேர்வர்களும் வீட்டில் இருந்தபடியே ஐ.ஏ.எஸ் தேர்விற்கு பயிற்சி பெறும் வகையில், (UPSC) முதல்நிலைத் தேர்விற்கான பயிற்சியை, இந்தியாவிலேயே முதல்முறையாக தொலைக்காட்சி வாயிலாக இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பொழுது இணையதளத்தில் பதிவு செய்த மாணவர்கள் படித்து பயன்பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கான தமிழ்நா ட்டில் மட்டுமின்றி, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் போட்டித்தேர்வர்கள் இணையதளம் மூலம் சேர்ந்து, இலவசமாக இணையதளத்தில் உள்ள வீடியோ பாடங்களை பயின்று வருகின்றனர். இந்தக் காணொளிகளை காணும்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள www.mntfreeias.com இணையத்தின் வாயிலாகவும் 044 2435 8373, 2433 0095, 98404 39393, 84284 31107 ஆகிய தொலைபேசி எண்கள் மூலமாகவும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு சைதை துரைசாமி தெரிவித்துள்ளார்.

## 10ம் தேதி முன்னாள் படைவீரர்கள் சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

**தூத்துக்குடி, பிப்.10:**

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோருக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் 10.2.2026, செவ்வாய்க்கிழமை அன்று காலை 11 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் கலந்து கொண்டு குறைகள் நிவர்த்தி செய்திட தங்களது மனுக்கள் இரட்டை பிரதிகளில் அடையாள அட்டை நகலுடன் சமர்ப்பித்து, தொலைபேசி எண் குறிப்பிட்டு பயன்பெறலாம். மேலும் கூடுதல் விவரங்களுக்கு உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடியில் சிறுமி திடீர் மரணம்: போலீஸ் விசாரணை

**தூத்துக்குடி, பிப்.10:**

தூத்துக்குடி மடத்தூர், பத்திரகாளி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த சக்திவேல் மனைவி முத்துலட்சுமி. இவர் நேற்று முன்தினம் இரவு தனது மகள் தனுஷா (வயது 4) என்பவருடன் சிவன் கோவிலுக்கு சென்றுவிட்டு ஸ்கூட்டரில் வீட்டுக்கு திரும்பி சென்று கொண்டிருந்தார். அப்போது அவரது மகள் திடீரென மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக மகளை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். அங்கு பரிசோதனை செய்த டாக்டர் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மத்திய பாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மோகன்ஜயர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

## ஊர்க்காவல் படையில் சேர விண்ணப்பிக்கலாம்

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் ஊர்க்காவல் படையில் 19 ஆண்கள், 3 பெண்கள் என மொத்தம் 22 பேரும், மேலும் மீனவ இளைஞர் ஊர்க்காவல் படையில் 5 பேர் (ஆண்கள் மட்டும்) என மொத்தம் 27 காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்காக தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது முதல் 45 வயதிற்குள் உள்ள, உடல் தகுதியுடன் கூடிய ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

மீனவ இளைஞர் ஊர்க்காவல் படை தேர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் கடலில் நீச்சல் அடிக்க தெரிந்தவர்களாகவும், மீனவர் அடையாள அட்டை வைத்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். வரும் 12.2.2026 தேதிக்குள், தூத்துக்குடி மில்லர்புரத்தில் உள்ள ஆயுதப்படை காவல் அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். பெறப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தேர்விற்கு அழைக்கப்படுவார்கள் .

# ராமநாதசுவாமி கோவிலில் மகா சிவராத்திரி விழா தொடங்கியது

**ராமநாதபுரம், பிப்.10:**





ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதசுவாமி கோவிலில் மகா சிவராத்திரி விழா விமரிசையாக கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் நடப்பு ஆண்டிற்கான மகா சிவராத்திரி விழா தொடங்கியது-

இதையொட்டி அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. இதனை தொடர்ந்து, சுவாமி சன்னதி எதிரே உள்ள தங்க கொடிமரத்தில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரம் முழங்க கொடியேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

மகா சிவராத்திரி விழா 12 நாட்கள் நடைபெறும். தினமும் சுவாமி-அம்பாள் வாகன வீதியுலா நடைபெறுகிறது. மகா சிவராத்திரி தினமான பிப்ரவரி 15ம் தேதி அலங்கரிக்கப்பட்ட வெள்ளி தேரில் சுவாமி, அம்பாள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

அடுத்த நாள் அதாவது, பிப்ரவரி 16ம் தேதி திருத்தேரோட்டம் நடைபெறும். அலங்கரிக்கப்பட்ட மரத் தேரில் சுவாமி, அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருகின்றனர்.

17ம் தேதி மாசி அமாவாசையன்று கோவில் அக்னி தீர்த்த கடற்கரையில் சுவாமி-அம்பாள் எழுந்தருளியதும், தீர்த்தவாரி உற்சவம் நடைபெறும்.

திருவிழாவின் கடைசி நாளான 19ஆம் தேதி அன்று சண்டிகேஸ்வரர் எழுந்தருளும் நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது.

மகா சிவராத்திரி திருவிழா தொடங்கியுள்ளதை தொடர்ந்து தினமும் இரவு 7 மணிக்கு மேல் ராமேஸ்வரம் தெற்கு கோபுரம் அருகே உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் வைத்து ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சி, பரதநாட்டியம், பக்தி இன்னிசை கச்சேரி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

# விடுமுறை தினம்: திருச்செந்தூரில் நீண்ட நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம்

**திருச்செந்தூர், பிப்.10:**



முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்கி வருகிறது. மேலும் சூரனை வதம் செய்த இடமாகவும், குரு ஸ்தலமாகவும் விளங்கி வருகிறது. இந்த கோவிலுக்கு வெளி மாநிலம் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் இருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், வார விடுமுறையை முன்னிட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திரளான பக்தர்கள் இன்று திருச்செந்தூருக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் அதிகாலை முதலே கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடினர். இதைத்தொடர்ந்து பொது தரிசன வரிசையில் சுமார் நீண்ட நேரம் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். கோவிலில் அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும் நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்து வருகின்றன. ஏராளமான பக்தர்கள் வருகை தந்துள்ளதால், கோவில் வளாகம், வள்ளி குகை, கடற்கரைப் பகுதி, முக்கிய சாலைகள் முழுவதும் பக்தர்களால் நிறைந்து காணப்படுகிறது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கடலில் குளித்து, விளையாடி மகிழ்ந்தனர். பக்தர்களின் கூட்டம் அதிகரித்து காணப்படும் நிலையில், கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# பரமத்தி வேலூர்: படமுடிபாளையம் கொங்கலம்மன் கோவில் கும்பாபிஷேகம்

**பரமத்திவேலூர், பிப்.10:**



நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலுகா படமுடிபாளையத்தில் உள்ள கொங்கலம்மன் கோவில் கும்பாபிஷேக விழா விமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (6-ஆம் தேதி) காலை விநாயகர் வழிபாடு, நவநாயகர் யாகம், மகாலட்சுமி யாகம், தீபாராதனையும், காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீர் எடுத்து வருதலும், மாலை முதல் கால் யாக பூஜை, பூர்ணாஹுதியும் நடைபெற்றது.

நேற்று (7-ஆம் தேதி) காலை புதிய விக்ரகங்களுக்கு கண் திறப்பும், மாலை கோபுர கலசம் வைத்தல் மற்றும் மருந்து சாற்றுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

காலை 8.45 மணிக்கு யாத்ரா தானம், கடம் புறப்பாட்டைத் தொடர்ந்து 9 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் கொங்கலம்மன் கோவில் கும்பாபிஷேகமும், 10 மணிக்குள் விநாயகர், மாரியம்மன், கோவில் கும்பாபிஷேகமும், 10.30 மணிக்கு மூல மூர்த்திகள் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இதில் பரமத்திவேலூர் மற்றும் படமுடிபாளையம் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு கொங்கலம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## தி.மு.க. கூட்டணியில் ராமதாசை சேர்த்தால் வெளியேறுவதை தவிர வேறு வழியில்லை: திருமா

**சென்னை, பிப்.10:**

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அளித்த பேட்டியில் தனது கருத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார். அந்த பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது: பாரதீய ஜனதா மதத்தின் அடிப்படையில் வெறுப்பு அரசியலை சிறுபான்மையினருக்கு எதிராக பரப்பி வருகிறது. பா.ம.க. சாதி அடிப்படையிலான வெறுப்பு அரசியலை பரப்பி வருகிறது. சமூக பொறியியல் என்ற யுத்தியை கையாண்ட காரணத்தால் நாங்கள் தெளிவான முடிவுக்கு வந்தோம். இந்த 2 கட்சிகளுடன் எந்த காரணத்தை கொண்டும் நாங்கள் தேர்தல் கூட்டணி வைத்துக்கொள்ள மாட்டோம். இந்த கட்சிகள் இடம்பெறும் அணிகளிலும் நாங்கள் இடம்பெற மாட்டோம் என்ற முடிவை நாங்கள் ஏற்கனவே எடுத்துவிட்டோம்.

அது இன்று நேற்று எடுத்த முடிவு இல்லை. அந்த முடிவை எடுக்கின்ற சுதந்திரமும், உரிமையும், அதிகாரமும் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், தி.மு.க.வுக்கு அழுத்தம் கொடுக்க நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை. தி.மு.க. ஒரு முடிவை எடுத்தால் (டாக்டர் ராமதாஸ் அணியை கூட்டணியில் சேர்த்தால்), அது எங்கள் நிலைப்பாட்டுக்கு எதிராக இருந்தால் நாங்கள் அந்த கூட்டணியில் இருந்து வெளியேறுவதை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. இதுதான் எங்கள் நிலைப்பாடு.இதில் நாங்கள் எந்த சமரசமும் செய்துகொள்ளவில்லை.

## கடல் ஆமைகள் இனப் பெருக்கத்தினை பாதுகாக்கும் விழிப்புணர்வு நடைபயணம்: கடலூர் கலெக்டர் தொடங்கி வைத்தார்

**கடலூர், பிப். 10:**

மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தொடங்கி வைத்து பேசியதவாது:

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, வனத்துறை மற்றும் மாவட்ட நிருவாகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியின் வாயிலாக, கடற்கரை உயிரியல் பல்வகை பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையிலும், கடற்கரையில் முட்டையிடும் ஒலிவ் ரிட்லி கடல் ஆமை இனத்தின் இனப்பெருக்க சூழலை பாதுகாக்கும் நோக்கில் "TURTLE WALK" என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

உலகளாவிய அளவில் பாதுகாப்பு முக்கியத்துவம் பெற்ற இந்த கடல் ஆமை இனங்கள், கடற்கரை மற்றும் கடல் சூழலின் சமநிலையை பேணுவதில் முக்கிய பங்கு வகிப்பதை கருத்தில் கொண்டு, அவற்றின் இனப்பெருக்க காலத்தில் மனித தலையீடுகள் குறையவும், பொறுப்புள்ள சுற்றுச்சூழல் நடத்தை பொதுமக்களிடையே வளரவும் விழிப்புணர்வு நடைபயணம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நடை, சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைத்து பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு குழுவிலும் பத்து நபர்கள் பங்கேற்புடன் சில்வர் பீச்சில் தொடங்கி அக்கரைகோரி வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் நடைபெறும்.

# பறவை காய்ச்சல் பரவுகிறது! காய்ச்சல், இருமல் இருந்தால் அலட்சியம் வேண்டாம் - மருத்துவ அறிவுரைகள்!

சமீபத்திய தகவல்களின்படி, சென்னையில் பறவை காய்ச்சல் (H5N1) பரவல் குறித்த செய்திகள் வெளியாகி உள்ளன. இது பொதுமக்களிடையேயும், அலுவலகங்களில் பணிபுரிபவர்களிடையேயும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், சரியான விழிப்புணர்வும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இருந்தால் இதிலிருந்து நாம் நம்மை எளிதாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும். பறவை காய்ச்சல் என்றால் என்ன? அது எப்படி பரவுகிறது? மற்றும் பணியிடங்களிலும் வீடுகளிலும் நாம் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள் என்னென்ன என்பதை விரிவாக பார்க்கலாம்.




பறவை காய்ச்சல் (H5N1) என்றால் என்ன?

H5N1 என்பது பறவைகளைத் தாக்கும் ஒரு வகையான இன்ஃப்ளுயன்ஸா வைரஸ். இது முக்கியமாக காட்டு நீர்வாழ் பறவைகள், வலசைபோகும் பறவைகளிடம் காணப்படுகிறது. இந்த வைரஸ் கோழிகள், வாத்துகள் மற்றும் பிற வளர்ப்புப் பறவைகளுக்கும் பரவி, அவற்றிற்கு கடுமையான நோயையும் இறப்பையையும் ஏற்படுத்துகிறது.

மிக அரிதான சூழலில், பாதிக்கப்பட்ட பறவைகளுடன் மிக நெருக்கமான தொடர்பில் இருக்கும் மனிதர்களுக்கும் இந்த வைரஸ் பரவ வாய்ப்புள்ளது. மனிதர்களுக்கு பரவும்போது இது கடுமையான காய்ச்சலை உண்டாக்கும். மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு இது பரவுவது மிகக் குறைவு என்றாலும், கவனமாக இருப்பது அவசியம் என உலக சுகாதார அமைப்பு (WHO) எச்சரித்துள்ளது.

### அறிகுறிகள்!

பறவை காய்ச்சல் வைரஸ் தாக்கிய ஒருவருக்கு, சாதாரண காய்ச்சலைப் போன்றே அறிகுறிகள் தென்படும்.

கடுமையான காய்ச்சல்

இருமல் மற்றும் தொண்டை வலி

மூச்சு விடுவதில் சிரமம் அல்லது மூச்சுத் திணறல்

உடல் சோர்வு

### பொதுமக்களுக்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள்!

தமிழக சுகாதாரத் துறை மற்றும் கால்நடை நல அதிகாரிகள் பொது மக்களுக்குக் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்துபோன காகங்கள், கோழிகள் அல்லது நீர்வாழ் பறவைகளைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

தவிர்க்க முடியாத சூழலில் இறந்த பறவைகளை அப்புறப்படுத்த நேர்ந்தால், வெறுங்கையால் தொடாமல் கையுறைகள் அல்லது பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். அதன் பிறகு கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவ வேண்டும். உங்கள் பகுதியில் வழக்கத்திற்கு மாறாக பறவைகள் இறந்து கிடந்தால், உடனடியாக உள்ளூர் கால்நடைத் துறை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

பறவைகளையோ அல்லது விலங்குகளின் தீவனங்களையோ கையாண்ட பிறகு, சோப்பு மற்றும் சுத்தமான தண்ணீரால் கைகளை அடிக்கடி கழுவ வேண்டும். இறந்த பறவைகளைக் கையாண்ட பிறகு காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காமல் மருத்துவரை அணுகிசிகிச்சை பெற வேண்டும்.

ஊழியர்கள் பணியிடத்தில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள்!

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள், அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள், நிர்வாகம் கொடுக்கும் பின்வரும் பாதுகாப்பு வழிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். தொழிற்சாலை வளாகத்திற்குள் ஏதேனும் பறவை இறந்து கிடந்தாலோ அல்லது நோய்வாய்ப்பட்டு இருந்தாலோ, அதன் அருகில் செல்லவோ அல்லது தொடவோ வேண்டாம். உடனடியாக பாதுகாப்பு அதிகாரிக்கு அல்லது நிர்வாகத் துறைக்குத் தகவல் தெரிவிக்கவும். அவர்கள் அதைப் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவார்கள்.

தொழிற்சாலைக்கு வெளியே திறந்தவெளியில் வேலை செய்யும் ஊழியர்கள் கட்டாயம் முகக்கவசம் (N95 MASK) மற்றும் கையுறைகளை அணிய வேண்டும். சாப்பிட்ட பிறகு மீதமாகும் உணவுகளை மூடி வைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போட வேண்டும். திறந்த வெளியில் வீசுவது பறவைகளை ஈர்க்கும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு காய்ச்சல், தொண்டை வலி அல்லது உடல்நலக்குறைவு ஏற்பட்டால், அதை அலட்சியப்படுத்தாமல் உங்கள் மேற்பார்வையாளரிடம் தெரிவிக்கவும். உடனடியாக அலுவலகத்தில் உள்ள மருத்துவ மையத்தை (OHC) அணுகி பரிசோதனை செய்து கொள்ளவும். பறவை காய்ச்சல் குறித்து அச்சப்படாமல், மேலே கொடுக்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடிப்பது நம் கடமையாகும்.

# நானும் மாறி விட்டேன்




ஹரிஹரன் மௌனமாக இருந்தான். அவன். நண்பர்கள் சத்யனும் , செந்திலும் தான் பேசிக் கொண்டிருந்தார்கள்; அவன் சார்பாக. யாழினி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். குழந்தை மதுரா ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஹரிஹரன் எவர் என்றே தெரியவில்லை.

செந்தில் மீண்டும் பேச ஆரம்பித்தான், ‘ யாழினி! நாமெல்லாம் ஒட்டிப் பழகிய நாளை எல்லாம் நினைத்துப் பார். நீயும் ஹரியும் உருகி உருகி காதலித்தீர்கள். பெற்றோரின் சம்மதத்திற்காக இரண்டு வருடம் காத்திருந்து திருமணம் செய்தீர்கள். எப்படி; எதனால் இந்த பெரிய இடைவெளி உண்டாயிற்று? இரண்டு பேருக்கும் கல்லூரி பேராசிரியராக வேலையும் தேடிவந்தது. எதற்கும் குறைவில்லா வாழ்க்கை; இன்பமுடன் காலத்திற்கும் வாழ்வீர்கள், என்றே நினைத்திருந்தோம்.விருப்பமாய் வாழ வேண்டிய வாழ்க்கையை வேம்பாக ஆக்கிக் கொண்டு விட்டீர்களே!,’ என்று புலம்பினான்.

சத்யன் பேசத் தொடங்குமுன் யாழினியே ஆரம்பித்தாள்.’ சென்றவை சென்றவையாகவே இருக்கட்டும். ஹரியை ஒரு நண்பனாக மட்டும்தான் உங்களுக்குத் தெரியும். நல்ல ஒரு நண்பன், நல்ல கணவனாக இருக்க வேண்டும், என்ற எந்த ஒரு உத்திரவாதமும் கிடையாது. அவனுடைய குணநலன்களின் நிறை குறைகளை ஆராய வேண்டிய எந்த ஒரு முதன்மை தேவையும் இப்போது இல்லை. ஆம்! எல்லாம் நிறைவாகவே இருந்தது... அபரிமிதமாக. அளவிற்கு மிஞ்சும் எதுவும் நெஞ்சுக்கு நஞ்சாக மாறும்; என்பது என் வாழ்க்கையில் நிதர்சன உண்மையாயிற்று. இன்னொரு வாழ்க்கையில் உட்புகும் துணிவு எனக்கு அறவே இல்லை. அவ்வளவு நாட்கள் பழகினவன் கல்யாண உறவில், முற்றும் புதியவனாக எனக்குப் புலப்பட்டான். கல்யாணம் என்பது பெண்களுக்கு ஒரு மலையேற்றம், அல்லது ஒரு பள்ளத்தாக்கு. ஒரு திரும்பும் முனையில் நிற்கும் பெண்கள்; தன்னம்பிக்கையுடன்தான், கல்யாண உறவில் நுழைகிறாள். அது மட்டும் போதாது; அவளுக்கு. மனம் புரிந்த ஒரு நண்பன் போல் ஒரு உறவை எதிர்பார்த்து இருக்கும் அவளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது எனில், அவள் வாழ்க்கை முள் நிறைந்த பாதை. அதிலிருந்து வெளியேறும் உரிமை அவளுக்கு உண்டுதானே! அனுசரித்து இருப்பதுதான் வாழ்க்கையின் எதார்த்தம் என்றும் அவளுக்குத் தெரியும்; எனினும் அனுசரிப்பதே வாழ்க்கை என்று பல பெண்கள் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் ஒரு அடிக்கோடு உள்ளது. என்னால் ஒரு அளவிற்கு மேல் விட்டுக் கொடுத்துப் போக,இயலவில்லை. ஒருவருக்கு ஒருவர் புரிதல் இல்லாமல் நாங்கள் பிரியவில்லை. சரியான புரிதல் இருந்ததினால் மட்டுமே, சாத்தியம் ஆயிற்று. அது அந்த புரிதலில் விளைந்த நன்மை. அவனைப் பற்றி எனக்கு எந்தக் குறையும் இல்லை. திருமண பந்தத்திற்கு நாங்கள் ஒருவருக்கு ஒருவர் ஏற்றவர் இல்லை. இதை நான் உணர்ந்து வருடம் மூன்றாகிறது. என்னைத் தனியே வாழ விடுங்கள். இதுவே எனக்கு உகந்தது. அவருக்கு விருப்பமானால் நான் இந்த திருமணத்திலிருந்து விடுதலை அளிக்கச் சித்தமாக இருக்கிறேன்" என்று கூறி முடித்தாள்; யாழினி.

சத்யன், "இப்போதெல்லாம் அவன் ரொம்பவே மாறிவிட்டான்; யாழினி!. நீ ஏன் அவனை மன்னிக்கக் கூடாது? மதுராவுக்கு அவள் தந்தையின் அருகாமையும் அரவணைப்பும் அவசியம் தானே’ என்றான்.


" என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். ஹரிஹரன் மாறிவிட்டது உண்மையாய் இருக்கலாம். ஆனால் இந்த மூன்று வருடங்களில் நானும் மிகவும் மாறிவிட்டேன். திருமண பந்தம் என்ற சுமையை நான் மீண்டும் என் முதுகு சுமையாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஹரி விரும்பினால், மதுராவுடன் சேர்ந்து பழகட்டும்...அவருக்கு நேரம் கிடைத்த போது இங்கு வரட்டும்,மதுராவின் அப்பாவாகவும்; எனக்கு நண்பனாகவும் மட்டும். நான் கூறுவது ஹரிஹரனுக்கும், உங்களுக்கும் புரியும் என்று நினைக்கிறேன். "மதுரா! உன் அப்பாவுக்கு நேரமாகிறது. அவருக்கு கையசைத்து விடை கொடு. பள்ளிக்குச் செல்ல நேரம் ஆகிறது பார்" என்று சொல்ல; ஹரிஹரன் எழுந்து மதுராவை ஆரத் தழுவி, கன்னத்தில் முத்தமிட்டு," வில் மீட் சம் டைம் லேட்டர், மை ஏன்ஜல்" என்ற சொல்லிய பின் தன் சிநேகிதர்களுடன், வெளியேற,’மதுரா,’இவர்தான் என் அப்பாவா? ஐ லைக் ஹிம்,’ என்றாள். .யாழினி, ’எஸ் ஹீ வாஸ் மை குட் ஃப்ரண்ட் டு.’என்று வறண்ட குரலில் சொல்ல, இருவரும் பள்ளிக்கு கிளம்பினார்கள்.



**- சசிகலா விஸ்வநாதன்**

# "காயமல்ல நேயம்"

ரகு வாசற் கதவருகே நின்றிருந்தான். அவன் கண்கள் தரையைப் பார்த்திருந்தன. வினிதா உள்ளுக்குள் கிளர்ந்த பழைய நினைவுகளைத் தள்ளி வைத்து விட்டு நேராக முகத்தைப் பார்த்தாள்.



“இது இரக்கம் இல்லை ரகு... உன் நிலை எனக்குத் தெரிகிறது... உதவணும்னு தோணுது!... அதனால் இந்த உதவியை நீ ஏற்றுக் கொள்ளணும் ரகு,” என்றாள் வினிதா.

“வேண்டாம் வினிதா!... என்னைக் கம்பெல் பண்ணாதே... ப்ளீஸ்!,” அவனது குரல் கரகரத்தது.

" ஏன்?..ஏன் வேண்டாம்?"

“நீ என் முன்னாள் காதலி... உன்னிடம் கை நீட்டினா... என் வாழ்க்கை இன்னும் சிறுமையாய் ஆயிடும்.”

வினிதா பேச முயன்ற போது, அறையினுள்ளிருந்து இன்னொரு குரல் வந்தது.

“உங்களுக்கு வேண்டாமெனில்... நம் குழந்தைகளுக்காகஏற்றுக் கொள்ளுங்கள்.”

ரகு திரும்பிப் பார்த்தான். அவன் மனைவி யசோதா.

அவள் முகத்தில் துளியும் தயக்கமில்லை. அவமானமும் இல்லை. அழுத்தமான தெளிவு மட்டுமிருந்தது.

“நீங்க கொடுக்கறது உங்க பழைய காதலுக்கான உதவி இல்லைன்னு எனக்கு தெரியும். இது ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் செய்யற நேர்மையான உதவி.”என்றாள் யசோதா.

ரகு நடுங்கும் குரலில் கேட்டான்.

“உனக்கு பொறாமை இல்லையா?”

யசோதா மெல்லச் சிரித்தாள்.

“வறுமைக் காலத்தில் வாழும் போது பொறாமைக்கு இடமே இல்லைங்க!”

வினிதா அந்தக் காசோலையை மடித்து வைத்தாள்.

“இது கடன் இல்லை....திருப்பித் தரவே வேண்டாம்....ஆனா ஒரு விஷயம் மட்டும் பண்ணுங்க.”

“என்ன?” என்றான் ரகு.

“நாளைக்கு நீங்க நல்ல நிலைமைக்குத் திரும்பும் போது, வறுமையிலிருக்கும் இன்னொருத்தனுக்கு கை கொடுங்க.... அதுதான் நீங்க எனக்குத் திருப்பித் தர்றது.”

ரகுவின் விழியோரம் ஈரம். யசோதா அவன் கையைப் பிடித்தாள்.

வினிதா நின்று... நிதானித்து வெளியேறிய போது, மூன்று பேருக்கும் ஒரு உண்மை புரிந்திருந்தது.

"காதல் தரும் காயம் மனிதநேயமாக மாறும் போதுதான் அது தெய்வீகக் காதலாகின்றது"



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# அகத்தியனின் பயணம் 09



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## மௌனத்தில் இசையழகி

கம்பெனியிலிருந்து வந்த அகத்தியன் தன்னுடைய சட்டை அவிழ்த்துக் கொடியில் மாட்டினான். முகத்தைக் கழுவினான். வேறொரு ஆடையை உடுத்திக்கொண்டு அறையை மூடிவிட்டு கம்பெனியின் விளையாட்டு மைதானத்தில் அமர்ந்தான். அங்கு இவனைப் போல நிறைய இளைஞர்கள் உட்கார்ந்து நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தார்கள்.

அகத்தியன் தனிமையில் அமர்ந்திருந்தான். இன்னும் நட்பு உருவாகவில்லை. இருந்தும் அகத்தியனுடைய சிந்தனைகளும், எண்ணங்களும் அவன் வாழ்ந்த கிராமத்தைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது. அதனால் யாருடனும் ஒட்டவும் இல்லை. உறவாடவும் இல்லை. கொஞ்ச நேரம் மரத்தடியின் கீழ் உட்கார்ந்துவிட்டு, வானத்தைப் பார்த்தான். வானத்தில் பறவைகள் தனது இறையை தேடி முடித்துக் கூட்டுக்குள் செல்வதற்கு வரிசையாகப் பறந்துகொண்டிருந்தது. நேரமானதை புரிந்துகொண்ட அகத்தியன் மெல்ல எழுந்து, அவனை வருடிவிடும் தென்றலை அழகாக வரவேற்று நடந்தே தனது அறைக்குள் நுழைந்தான்.

அகத்தியன் இடத்திற்கு தகுந்தார்போல் தன்னை மெல்ல மாற்றிக்கொண்டு வருகிறான் என்பதும், ஆனால் அவன் நினைவுகள் என்னவோ அவன் வாழ்ந்த கிராமத்தைப் பற்றியே சுற்றிக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் அவன் முகம் காட்டிக் கொடுக்கிறது.

இன்று கம்பெனியில் முதல் நாளில், ஒன்றுமே தெரியாததுபோல் இருந்த அத்தனை முகங்களும், போகப்போக எல்லாம் தெரிந்ததுபோல் சுறுசுறுப்பாக மாறியச் சூழலைப் பார்த்து, அவனுக்குள் வியப்பாக இருந்தது. அந்த நேரத்தில்தான் எழிலழகி அவன் நினைவுக்குள் ஒரு புயலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

எழிலழகிக அகத்தியன் எண்ணத்தில் மென்மையான காற்றாய் வருடிவிட்டு, அகத்தியன் மனதை மகிழ்ச்சியில் திளைக்கவைத்து சென்றிருக்கிராள் என்பது உண்மை.

அத்தனை பேரும் அமைதியாக இருக்கும்போழுது எழிலழகி மட்டும் வாயாடிப் போல் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறாள். அவள் பேச்சில் அறியாமை இருக்கிறது. அவள் பேச்சில் சூழ்ச்சி இல்லை. அவள் பேச்சில் இனிமை இருக்கிறது. அவள் பேச்சில் கவர்ச்சி இல்லை. அவள் பேச்சில் குழந்தைத்தனம் இருக்கிறது. அவள் பேச்சில் கனிவு இருக்கிறது. சிரித்த முக அழகுடைய எழிலழகியை தன் சிந்தையில் அகத்தியன் உயர்ந்த இடத்திலேயே வைத்து மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். பொழுதுபோக்குக்காகத் தொலைக்காட்சியோ, வானொலிப் பெட்டியோ எதுவுமில்லை. கைபேசியும் இல்லை. இங்கிருந்து அம்மாவோடு தொடர்பு கொண்டு பேசுவதற்கும் வசதிகளும் இல்லை. பூட்டப்பட்ட அறையில், நான்கு சுவர்களுக்குள் சிந்தனையைக் கட்டிட சுவர்களை அடித்துத் தகர்த்துவிட்டு அவன் வாழ்ந்த ஊரின் சிந்தனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. மணி இரவு பத்து. தூக்கம் வராதா சூழலில் இறுக்கமாகக் கண்ணை மூடிக்கொண்டு விளக்கை நிறுத்திவிட்டு படுத்துத் தூங்க முயற்சி செய்தான் அகத்தியன்.

மறுநாள்.

இசையழகியும் எழிலழகியும் இருவரும் பேசிக்கொண்டே அலுவலகத்திற்குள் நுழைந்தார்கள். இசையழகி எப்பொழுதுமே அமைதியாக இருப்பாள். எழிலழகி துரு துருவென்று வாயாடிக் கொண்டே இருப்பாள். உள்ளே நுழைந்தவுடன் அகத்தியனைப் பார்த்ததும்,

இசையழகி அமைதியாக “வணக்கம் சார்” என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

பூமிக்கா “சார் இன்னைக்கு உங்க டிரஸ் சூப்பரா இருக்கு” என்று சொல்லிவிட்டு சின்ன சிரிப்பைச் சிரித்து, திரும்பி பின்னால் ஒரு பார்வை பார்த்துவிட்டு நடந்தாள்.

அகத்தியன் எழிலழகி வாயாடித்தனமான அடாவடித்தனத்தை ரசித்துக்கொண்டிருந்தான்,

எழிலழகியின் இந்த வாயாடித்தனத்தை விரும்பாத இசையழகி,

“ஹே அமைதியா வாடி... தேவையில்லாம அதிகமா பேசாத.” என்று முகத்தைச் சுருக்கி, கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஒருவர் பின் ஒருவராக வேலை செய்யும் இடத்திற்குள்ளே நுழைந்ததும்,

அகத்தியன் அலுவலகத்திற்குள் நுழைந்து, அனைவரையும் ஒன்றாக உட்காரவைத்து,“நேற்று நல்ல சிறப்பாக நடந்தது. காலையில கொஞ்சம் தடுமாற்றம் இருந்தது. ஆனால், மதியம் யார் யார் என்னென்ன வேலையச் செய்யணுமோ அதெல்லாம் சரியா, புரிஞ்சுகிட்டு சிறப்பா செய்தீங்க. நேத்து உங்களைப் பத்தி நம்ம கம்பெனி இயக்குனர்கிட்ட ரொம்ப நல்ல தகவலைச் சொல்லி இருக்கேன். உண்மையிலேயே உங்களுக்கு டீம் லீடரா நான் இருக்கிறதுல எனக்கு ரொம்ப பெருமை. இதே மாதிரி ஒவ்வொரு நாளும் வேலையை ஈடுபாட்டோட செய்தோம்னா, நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்” என்று பேசி முடித்தான்.

இரண்டாவது நாள் முதல் தேநீர் இடைவெளியோடு, உணவு இடைவேளையும் சேர்ந்து சிறப்பாகவே முடிந்தது. வழக்கமாக இசையழகியோடு அவளது தோழியும் வேலைசெய்கின்ற இடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறையைப் பின்பற்றி அமைதியாகவே அனைத்து விதியையும் செய்துகொண்டிருந்தார்கள். இதிலிருந்து விதிவிலக்காகப் எழிலழகி படபடவெனப் பேசி, சிரித்த முகத்தோடு, துறுத்துறுவென, இயல்பான நிலையில், போலி தன்மையைக் காட்டாமல், தன்னை மாற்றிக் கொள்ளாமல், அதே நேரத்தில் வேலைக்கெடாமல், சிறப்பாகச் செய்துகொண்டிருந்தாள். இதுஅகத்தியனுக்கு பிடித்திருந்தது. அதனால் அகத்தியன் மேற்பார்வையாளராகக் எழிலழகியை கண்டிக்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படவில்லை.

மாலை 5 மணி நெருங்கியது. இன்றோடு இந்த வாரத்தின் கடைசி நாள் என்பதால், அவரவர்கள் முகத்தில் களைப்போடு கூடிய கலையான உருவமைப்பு தோன்றியது. நாளை விடுமுறை என்ற காரணத்தினால் எல்லோரும் மகிழ்ச்சியாக அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார்கள்.

அகத்தியன் அனைவரையும் ஒன்றாக நிற்கவைத்து “இந்த வாரம் சிறப்பாக நகர்ந்தது. நமக்கு கொடுத்த இலக்க சரியா செய்திட்டோம். இதே மாதிரி ஒவ்வொரு வாரமும் நம்மோட இலக்கை அடையணும்னா, கண்டிப்பா உங்களுடைய ஒத்துழைப்பு அவசியம். இங்கு உள்ள சூழலைக் கலகலப்பா வச்சிருக்கிறவங்க இரண்டு பேருமே அவசியம். உங்களுடைய நட்பும் இதே மாதிரி வளரணும். நேரத்துக்கு வந்துருங்க. நமக்குக் கொடுத்த வேலையைச் செய்திடுங்க. எந்தக் குறையா இருந்தாலும் என்கிட்ட சொல்லிடுங்க. நாளைக்கு சந்தோஷமா மகிழ்ச்சியா ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை கழிங்க” என்று சொல்லி அனைவரையும் அனுப்பிவைத்தான் அகத்தியன்.

“சார் உங்களுக்கு மகிழ்ச்சி சார். எங்களுக்குதான் சார் கஷ்டம். நாளைக்கு ஒரு நாள் எப்படி உங்கள பாக்காம இருக்கபோறோம்ங்கிற மனசு கஷ்டமா இருக்கு சார்” என்று உள்ளத்தில் எதையும் மறைத்து வைக்காமல் வெளிப்படையாகப் பேசினால் எழிலழகி.

அதைப் கேட்ட அகத்தியன் மனது மகிழ்ச்சியானது. மௌனமாகச் சிரித்தான்.



(தொடரும்)

# "சகடாசுரன்"



தேவகியின் சகோதரனான கம்சன் கண்ணனை எப்படியாவது கொள்ள வேண்டும் ,என முடிவெடுத்து ஒரு அசுரனை கோகுலத்திற்கு அனுப்புகிறான். அவன்தான் சகடாசுரன். "சகடம்" என்றால் வண்டி, சக்கரம் என்று பொருள்.

அன்று கோகுலத்தில் கோலாகலம். கண்ணன் முதல் முறையாக கவிழ்ந்து தவழ ஆரம்பித்தான். என்ன, ஒரு சந்தோஷம் !!ஊரே கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். யசோதையும், கோபியர்களும் , நந்தகோபர் மற்றும் ஆடவரும் சந்தோஷமாக கொண்டாடிக் கொண்டிருந்தனர். எல்லோரும் சாப்பிடுவதற்காக உணவு சமைப்பதும், மரியாதை செய்வதும், வீட்டை அலங்காரம் செய்வதிலும், அனைவரும் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குழந்தை கண்ணன் பசியால் காலை உதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அவனது அழுகை யசோதையின் காதில் விழவில்லை. குழந்தை மெல்ல தவழ்ந்து அங்கு நின்று கொண்டிருந்த வண்டியின் அடியில் சென்று விட்டது .அங்கு வந்த சகடாசுரன் தக்க தருணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணனை கொல்வதற்கான நல்ல சமயம் இதுதான் என்று அங்கு நின்ற வண்டியில், தனது சக்தியை புகுத்தி, குழந்தை கண்ணனை கொல்லுவதற்காக சக்கரம் நகர ஆரம்பித்தது. கண்ணன் தன் பிஞ்சு காலால் ஒரு உதை விட்டவுடன் வண்டி உடைந்து சாய்ந்தது. அந்த சத்தத்தை கேட்டு எல்லோரும் ஓடி வந்து பார்த்தனர். குழந்தைக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து, யசோதை குழந்தையை தூக்கினாள். அங்கு வந்து பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் .இந்த வண்டி எப்படி? இப்படியானது ?என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சில கோபியர்கள் குழந்தை தனது காலால் உதைத்ததை நாங்கள் பார்த்தோம். கண்ணனின் கால் பட்டவுடன் இந்த வண்டி உடைந்தது அந்த அரக்கனும் சுக்கு நூறாக சிதறி விட்டான். வண்டியில் ஒளிந்து கொண்டு ,கண்ணனை கொல்ல வந்த அசுரன், கண்ணனால் கொல்லப்பட்டார் .என்ற உண்மை வெளிப்பட்டது. குழந்தைக்கு ஏதாவது கண் திருஷ்டி பட்டு விட்டதோ என எண்ணி குழந்தைக்கு திருஷ்டி சுத்தினார் .கண்ணன் சிரித்தபடியே சகடாசுர வதம் என்னும் லீலை யை நடத்தினார். அவனுடைய லீலைகளில் இதுவும் ஒன்று .இந்த செய்தி கம்சனின் காதுக்கு சென்றது .ஒரு சிறிய குழந்தையை இந்த அசுரனால் கொல்ல முடியவில்லையே! என்பதைவிட ,தான் தோற்று விட்டோமே, என்று அவனுடைய கோபம் அதிகமானது. கம்சன் அடுத்ததாக பலம் பொருந்திய வேறு ஒரு அரக்கனை அனுப்ப திட்டமிட்டான்.



எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# தினம் ஒரு தலைவர்கள் உதம்சிங் வரலாறு

உதம்சிங் 26 டிசம்பர் 1899 31 ஜூலை 1940) ஒரு இந்திய புரட்சியாளர். ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்த்திய மைக்கல் ஓ'ட்வையரை 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுட்டுக் கொன்றவர்.

இளமைக்காலம்
ஜலியான்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான துணை ஆளுநர் மைக்கல் ஓ'ட்வையர் என்பவரை நிகழ்ச்சி நடந்து 21 ஆண்டுகளுக்குப் பின்னர் சுட்டுக்கொன்றவர் உதம் சிங் ஆவார். இவர் 1899- ஆம் ஆண்டு டிசம்பர் 26- ஆம் நாள் பஞ்சாப் மாநிலத்தில் சங்க்ரூர் மாவட்டத்தில் சுனாம் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர் இவரின் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். பின்னர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். அதுவரை அவரது பெயர் ஷேர்சிங். அங்குதான் உதம் சிங் என்று பெயர் மாற்றப்பட்டது. 1918 இல் மெற்றிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

ஜலியான்வாலாபாக் படுகொலையும் உதம் சிங்கின் சபதமும் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13- ஆம் நாள் ஜலியான்வாலா பாக் படுகொலை நடந்த அன்று உதம் சிங்கும் அவரது ஆசிரம நண்பர்களும் கூட்டத்திற்கு தண்ணீர் வழங்கும் பணியைச் செய்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கலைந்து செல்லவும் வழியில்லாமல் நடத்தப்பட்ட படுகொலை அவரைக் கடுமையாகப் பாதித்துவிட்டது. அவர் இச்சம்பவத்திற்குப் பழிவாங்க பொற்கோவிலில் சபதம் பூண்டார்.

அவர் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1920 இல் ஆப்பிரிக்காவிற்கும் 1921 இல் நைரோபிக்கும் சென்றுவிட்டு 1924 இல் இந்தியா திரும்பினார். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். சோஹன்சிங் வாக்னா, கர்த்தார்சிங் சாரபா, லாலா ஹர்தயாள், ராஷ்பிஹாரி போஷ் போன்றோரால் உருவாக்கப்பட்ட கதர் கட்சியில் இணைந்தார். கதர் கட்சி வெளிநாடுவாழ் இந்தியர்களால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது. அமெரிக்காவில் மூன்றாண்டுகள் தங்கி இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்டார். 1927 இல் பகத் சிங் அழைத்ததால் இந்தியா திரும்பினார். 1927 இலேயே அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருந்ததற்காகவும் கதர் கட்சி பிரசுரங்கள் வைத்திருந்ததற்காகவும் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1931 இல் விடுதலை ஆனார்.

சபதம் நிறைவேற்றுதல் மூன்றாண்டுகள் மைக்கல் ஓ'ட்வையரை கொலை செய்யும் திட்டத்துடன் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1933- ல் காஷ்மீர் சென்று ஜெர்மனிக்குத் தப்பிவிட்டார். அவர் இத்தாலி, பிரன்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா வழியாக 1934- ல் லண்டனை அடைந்தார். மைக்கல் ஓ'ட்வையரை கொல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தார். 1940- ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்து 21 ஆண்டுகள் கழித்து அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கேக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் கிழக்கிந்திய சங்கம், மத்திய ஆசிய சங்கம் இவற்றின் கூட்டம் நடந்தது. [6] மைக்கேல் ஓ டையர் ஒரு பேச்சாளர். சிங் ஒரு புத்தகத்தில் ரிவால்வர் மாதிரியே வெட்டி அதனுள் ரிவால்வரை வைத்து எடுத்துச் சென்றார். சுவரின் அருகில் நின்றார். கூட்ட முடிவில் டையர் மேடையை நோக்கிச் செல்லும் போது இருமுறை சுட்டார். டையர் உடனே இறந்துவிட்டார். மீண்டும் சுட்டதில் ஜெட்லாந்து, லூயிஸ்டேன், லார்டு லாமிங்க்டன் ஆகியோர் காயமுற்றனர் . சிங் தப்பிக்க முயற்சி செய்யவில்லை. மைக்கேல் ஓ டையர் படுகொலை குறித்த கருத்துக்கள் ஸ்காட்லாந்துயார்டு அருங்காட்சியகத்தில் அவரது கத்தி, ஆயுதம், டைரி, துப்பாக்கிக்குண்டுகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.



ஆளுநர் டையரின் கொலை இந்தியாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. மக்கள் மைக்கேல் ஓ டையரின் கொடும் செயலை மறக்கவில்லை . வழக்கம் போல் காந்திஜி அவரது செயலைக் கண்டித்தார் . ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் 1942- ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கு உத்தம் சிங்கால் ஏற்பட்ட உணர்ச்சி மிகவும் உதவியது என்று கூறுகின்றனர்.

நேதாஜி சிங்கின் செயலை வரவேற்றார். R.C. ஜாகர்வாரா தனது "CONSTITUTIONAL HISTORY OF INDIA AND NATIONAL MOVEMENT" என்ற நூலில் சிங்கின் தீரச்செயல் இந்திய சுதந்திரத்திற்குப் புத்துணர்வு ஊட்டியது என்று எழுதியுள்ளார். இந்திய அரசாங்கத்தின் இரகசிய குறிப்பு ஆளுநர் டையரின் கொலை மக்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்தது என்று கூறுகிறது[10]. உலகம் முழுவதும் செய்தித்தாள்கள் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவுகூர்ந்து மைக்கேல் ஓ டையர்தான் இதற்குப் பொறுப்பாளி என்று எழுதின. டைம்ஸ் ஆ◌ஃப் லண்டன் என்ற பத்திரிக்கை உத்தம்சிங் சுதந்திரப் போராட்ட வீரர் என்றும் அவரது செயல் ஒடுக்கப்பட்ட இந்தியரின் உணர்ச்சி வெளிப்பாடு என்றும் எழுதியது.

1940- ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலை 21- ஆவது நினைவு காங்கிரஸ் கூட்டத்தில் உத்தம் சிங் மிகவும் போற்றப்பட்டார். பஞ்சாப் காங்கிரஸ் டையருக்கு அஞ்சலி செலுத்தவும் உத்தம் சிங் செயலைக் கண்டிக்கவும் மறுத்துவிட்டது. அக்காலத்தில் ரோம் நகரில் அதிகம் வெளியான பெர்கெரெட் (BERGERET) என்ற பத்திரிக்கை சிங்கின் செயலை தீரச்செயல் என்று பாராட்டியது. ஜெர்மனி வானொலி ஒடுக்கப்பட்ட மக்கள் குண்டுகளால் பேசிவிட்டனர் என்றும் இந்தியர்கள் யானையைப்போல எதிரிகளை மன்னிக்கவே மாட்டார்கள் என்றும் 20 ஆண்டுகள் கழித்தும் அவர்கள் பழிதீர்த்துவிட்டார்கள் என்றும் கூறியது. பெர்லின் பத்திரிக்கை உத்தம் சிங் இந்திய சுதந்திரத்தின் வழிகாட்டி என்று கூறியது. இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு பகத் சிங் மற்றும் உத்தம் சிங்கின் செயல் குறித்த காந்திஜியின் விமர்சனத்தைக் கண்டித்தது. தூக்குத் தண்டனை உத்தம் சிங் சிறையில் 42 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அவர் கட்டாயப்படுத்தி உணவு உண்ண வைக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் "நான் அவரைப் பழிவாங்க எண்ணியிருந்தேன். அவர் அதற்குப் பொருத்தமானவர்தான்" என்று கூறினார் . 1940- ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று அவர் பென்டோன்வில் சிறைச்சாலையில் அவர் தூக்கிலிடப் பட்டார். அன்று மதியமே அவரது உடல் சிறைச்சாலை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் அஞ்சலி நேருஜி 1962-ல் சிங்கின் செயலைப் பாராட்டி அவர் போன்றவர்களால்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது என்று கூறினார். 1974- ல் சாதுசிங் திண்ட் என்ற சுல்தான்பூர் லோதி வேண்டுகோளுக்கிணங்கி இந்திய அரசு கேட்டுக்கொண்டதால் பிரித்தானிய அரசு உத்தம் சிங்கின் சவப்பெட்டியை அனுப்ப சம்மதித்தது. சாதுசிங் திண்ட் சென்று உத்தம் சிங்கின் சவப்பெட்டியை வாங்கிவந்தார். அதனை காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பிரதமர் இந்திரா காந்தி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரது சொந்த கிராமமான சுனாம் கிராமத்தில் அவரது உடல் எரியூட்டப்பெற்று சட்லஜ் நதியில் அஸ்தி கரைக்கப்பட்டது.

# அனோமி திரைவிமர்சனம்



ஹர்ஷவர்தன் ரமேஷ்வரின் பின்னணி இசை படத்திற்கு ஒரு 'ஹாலிவுட் த்ரில்லர்' தரத்தைக் கொடுக்கிறது.

தடயவியல் நிபுணராக வரும் பாவனா தனது தம்பியுடன் வசித்து வருகிறார். இவரது தந்தையும், தாயும் இறந்த பிறகு, தனது தம்பி மனநலம் பாதிக்கப்படுகிறார். பல முறை அவர் தற்கொலைக்கு முயற்சிக்கிறார். இப்படி இருக்கையில் தம்பி ஒருநாள் காணாமல் போய்விடுகிறார்.

தம்பியை தேடிக் கொண்டிருக்கும்போது, அவர் தனது தாய், தந்தை இறந்த இடத்திலேயே தம்பியும் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியாகிறார்.

தொடர் கொலைகளை விசாரிக்கும் காவல் அதிகாரி ரஹ்மான் பாவனாவின் தம்பி மரணம் குறித்து விசாரிக்கிறார். மனநலம் பாதிக்கப்பட்ட அவர், தற்கொலை செய்துக்கொண்டதாக வழக்கை முடித்து வைக்கிறார்.

தன் தம்பியின் தற்கொலையில் மர்மம் இருப்பதாக நம்பும் தடயவியல் நிபுணர் பாவனா, உண்மையை கண்டறிய களமிறங்குகிறார். அப்போது, ரஹ்மானுடன் பாவனாவின் பயணம் இணைகிறது.

ஒரு கட்டத்தில் தற்கொலைக்கும், இந்த மர்மக் கொலைகளுக்கும் இடையே உள்ள 'அறிவியல் பின்னணி' மற்றும் 'மரணத்தின் சமன்பாடு' (Equation of Death) என்ன என்பதை விவரிக்கிறது படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

நீண்ட இடைவேளைக்குப் பிறகு மலையாளத்தில் ஒரு அழுத்தமான பாத்திரத்தில் பாவனா மிரட்டியிருக்கிறார். ஒரு அக்காவாக பாசம் காட்டுவதும், விசாரணையில் உறுதி காட்டுவதுமாக பாவனா, கதாபாத்திரத்திற்கு உயிர் கொடுத்துள்ளார். ரஹ்மானின் அனுபவ நடிப்பு திரையில் பிரதிபலிக்கிறது.

### இயக்கம்

மலையாள சினிமாவில் 'சைக்கோ த்ரில்லர்' கதையுடன் 'அறிவியல் புனைவை' (Sci-Fi) இணைத்த விதம் ஒரு புதிய முயற்சியை எடுத்திருக்கிறார் இயக்குனர் ரியாஸ் மரத். ஒரு தரமான சைக்காலஜிக்கல் த்ரில்லர் படம்.

152 நிமிடங்கள் ஓடும் இந்தப் படத்தின் இரண்டாம் பாதி சற்று இழுவையாகத் தெரிகிறது. எடிட்டிங்கில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

### ஒளிப்பதிவு & இசை

சுஜித் சாரங்கின் ஒளிப்பதிவு மற்றும் ஹர்ஷவர்தன் ரமேஷ்வரின் பின்னணி இசை படத்திற்கு ஒரு 'ஹாலிவுட் த்ரில்லர்' தரத்தைக் கொடுக்கிறது. ரேட்டிங்– 2.5/5



மலையாளம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பிரபலமான நடிகையாக இருப்பவர் மஞ்சு வாரியர். இவர் தமிழில் அசுரன் படத்தின் மூலம் அறிமுகமானார். பின் அஜித்துடன் இணைந்து துணிவு, ரஜினியுடன் வேட்டையன் ஆகிய படங்களில் நடித்தார். மேலும் தற்போது மிஸ்டர். எக்ஸ் படத்தில் நடித்து வருகிறார். இதுமட்டுமின்றி Ameri-ki Pandit என்கிற படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நடிகை மஞ்சு வாரியர் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். அழகிய புடவையில் மஞ்சு வாரியர் எடுத்துக்கொண்ட போட்டோஸ் இதோ..




# கரிகாடா திரைவிமர்சனம்

கிராமத்தில் காட்டுப்பன்றி வேட்டையாடும் வீரனாக நாயகன் காடா நடராஜ் வாழ்ந்து வருகிறார். முதலாளிக்கு விசுவாசமாக இருந்து வரும் இவரை, முதலாளி மற்றும் அவருடைய மகன்கள் எதிர்த்து கொல்ல முயற்சி செய்கிறார்கள். இறுதியில் முதலாளி மற்றும் மகன்களை காடா நட்ராஜ் எப்படி எதிர்கொண்டார்? காடா நட்ராஜை முதலாளி மற்றும் மகன்கள் எதிர்க்க காரணம் என்ன? என்பதே படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் காடா நட்ராஜ், சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். குறிப்பாக ஆக்ஷன் காட்சிகளில் மிரட்டலான நடிப்பை கொடுத்து இருக்கிறார். நாயகி நிரிக்ஷா ஷெட்டி இடையேயான காதல், கதைக்கு முக்கிய அம்சம். ஆனால் நிரிக்ஷா ஷெட்டியின் ஒருதலைக் காதலும், அதை காடா நட்ராஜ் ஏற்றுக்கொள்ளும் தருணமும் திரைக்கதையில் தாமதமாக வருவதால், எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

மேல் தர வர்க்கத்தைச் சேர்ந்த எதிரிகளாக வரும் யஷ் ஷெட்டி, பாலா ராஜ்வாடி ஆகியோர் மோதல்கள் கதைக்கு வேகம் கொடுத்தாலும், ஒரே மாதிரியான மோதல்கள் திரும்பத் திரும்ப வருவதால் சலிப்பு ஏற்படுகிறது.

### இயக்கம்

இயக்குநர் வெங்கடேஷா, இரு காலகட்டங்களை இணைக்கும் சவாலான கதைக்களத்தை தேர்வு செய்திருக்கிறார். கிராமத்து சூழலும், நவீன வாழ்க்கையும் இணைக்க முயற்சித்த அவரது முயற்சி பாராட்டத்தக்கது. ஆனால், எதிர்பார்த்த அளவில் படம் உருவாகாதது வருத்தம். கிராமத்து பின்னணி, ஆக்ஷன் கலந்த படங்களை விரும்பும் ரசிகர்களுக்கு 'கரிகாடா' ஓரளவு ஈர்ப்பை தரும். ஆனால் தெளிவான திரைக்கதை, வலுவான கதாபாத்திர வளர்ச்சி எதிர்பார்ப்பவர்களுக்கு படம் சற்று குழப்பமாகவும், துண்டுத்துண்டாகவும் தோன்ற வாய்ப்புள்ளது.


### ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் ஜீவன் கவுடா, காடுகள், மழைக் காட்சிகளை அழகாக படம் பிடித்திருக்கிறார். சில காட்சிகள் கண்ணுக்கு நிறைவாக இருக்கின்றன.

### இசை

அதிஷய் ஜெயின், ஷஷாங்க் சேஷகிரியின் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் கவனம் ஈர்த்து இருக்கிறது. ரேட்டிங்– 2.5/5

# ஜனநாயகன் தணிக்கை விவகாரம்... வெளியான புது தகவல்..!



நடிகர் விஜய் – இயக்குநர் ஹெச். வினோத் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "ஜனநாயகன்." கடந்த பொங்கல் பண்டிகைக்கு வெளியாக இருந்த நிலையில், தணிக்கை சான்று கிடைக்காததால், திரைப்படம் வெளியாகாமல் உள்ளது. படத்திற்கு தணிக்கை பெறுவது தொடர்பாக படத்தயாரிப்பு நிறுவனம் மற்றும் தணிக்கை வாரியம் இடையே சட்ட ரீதியாக மோதல் உருவாகி இருக்கிறது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், ஜனநாயகன் திரைப்படம் தணிக்கை குழுவுக்கு மீண்டும் அனுப்பப்பட்டு இருப்பதாக இன்று (பிப்.9) காலை முதலே தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதன் காரணமாக படத்திற்கு விரைவில் தணிக்கை சான்று கிடைத்துவிடும் என்றும் இதைத் தொடர்ந்து படம் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

ஜனநாயகன் விவகாரம் குறித்து பல தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், தணிக்கை குழுவை சேர்ந்த அதிகாரி ஒருவர் தனியார் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், ஒட்டுமொத்த தணிக்கை வழிமுறைகள் ரகசியமாக நடைபெறும் என கூறியிருக்கிறார். இதேபோல் தயாரிப்பு நிறுவனமும் தணிக்கை சான்று கிடைக்கும் வரை அமைதி காக்கும் என்று தெரிகிறது.


அந்த வகையில், தற்போது வரை ஜனநாயகன் விவகாரம் தொடர்பான வழக்கை படத்தயாரிப்பு நிறுவனம் திரும்பப் பெறவில்லை. மேலும், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவோ அல்லது வழக்கை திரும்பப்பெறவோ இல்லை. ஜனநாயகன் விவகாரம் குறித்து படத்தயாரிப்பு நிறுவனம் சார்பில் எவ்வித தகவலும் வழங்கப்படாததும் இதற்கு காரணமாக இருக்கலாம். எனினும், ஜனநாயகன் தொடர்பாக சாதகமான அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.



தெலுங்கு சினிமாவில் முக்கிய நடிகைகளில் ஒருவராக இருந்து வருகிறார் பிரக்யா ஜெய்ஷ்வால். சமீபத்தில் அவர் Akhanda 2: Thaandavam படத்தில் முக்கிய ரோலில் நடித்து இருந்தார்.

பிரக்யா ஜெய்ஷ்வால் நிகழ்ச்சிகளுக்கு வந்தால் தாராள கிளாமர் ஆன உடையில் தான் வருகிறார். தற்போது அவர் உச்சகட்ட கவர்ச்சியில் எடுத்திருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இணையத்தில் வைரல் ஆகி இருக்கிறது.

# இளையராஜா வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் இருந்து இயக்குநர் விலகல்?



தென்னிந்திய மொழிகள், பாலிவுட், ஹாலிவுட் என திரைத்துறை பேதமின்றி பம்பரமாக சுழன்று நடித்து வருபவர் நடிகர் தனுஷ். நடிப்பு மட்டுமின்றி இயக்கம், தயாரிப்பு என பல பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார். தமிழில் மட்டும் இவர் அடுத்தடுத்து பல திரைப்படங்களில் நடிக்க இருக்கிறார். இதில் சில படங்களுக்கான அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இந்த வரிசையில், பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவின் வாழ்க்கை வரலாற்று திரைப்படத்தில் நடிகர் தனுஷ் நடிக்க இருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந்தப் படத்தை இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இயக்குவதாக அறிவிக்கப்பட்டது.

தனுஷ் நடிப்பில் உருவாகும் இளையராஜா வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் இருந்து இயக்குநர் அருண் மாதேஸ்வரன் விலகிவிட்டதாக சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியாகி வந்தது.

இந்த நிலையில், இளையராஜா வாழ்க்கை வரலாற்றுப் படம் குறித்து நடிகர் தனுஷின் மேலாளர் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்த X தளப்பதிவில் அவர், "நடிகர் தனுஷ் நடிக்கும் இளையராஜா வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் இருந்து இயக்குநர் அருண் மாதேஸ்வரன் விலகிவிட்டதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் செய்திகள் உண்மையல்ல.

லோகேஷ் கனகராஜின் 'டிசி' திரைப்படம் வெளியான பிறகு, திட்டமிட்டபடி இயக்குநர் அருண் மாதேஸ்வரன் பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்த வாழ்க்கை வரலாற்றுப் படத்தின் பணிகளைத் தொடங்குவார். இந்தத் திட்டம் குறித்த இதர தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும்," என தெரிவித்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

## அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

# அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம். நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை. இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம். மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிராத்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829












ஆட்கள் தேவை

CNC டர்னிங் ஆப்பரேட்டர்

பெயிண்டர்

ஹெல்பர்

SAA

நல்ல சம்பளம் வழங்கப்படும்

Southern Heat Exchangers, Coimbatore

99444 40560









Aruvi SUPERMART
Shop Smart, Shop Smiles.

ACCOUNTANT

STOCK INVENTORY

DELIVERY BOY

Min 3 yrs Experience

SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.

9087411008, 9087982000

PHARMACIST REQUIRED

Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.

Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

கேரளாவில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள

தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை

உணவு, தங்குமிடம் இலவசம்

விருப்பமுள்ளவர்கள் ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்

8711 808080






## பாட்டுக்கு ஒரு பாரதி.!

முண்டாசு கட்டி வந்து..
மூண்டெழுந்த பாரதி!
ஆ.. பாரதி..
முத்தமிழர் நெஞ்சினிலே
வாழ்பவர் யார்? பாரதி
ஆம்.. பாரதி.!


கொட்டும் மழைச் சாரலோ..
கொக்கரிக்கும் சேவலோ..
ஓ.. சேவலோ..
குனிந்து தாளில் எழுத வந்து
நிமிர வைத்தத் தூவலோ.!
ஓ.. அவர் தூவலோ!

பாட்டு யெனும்
சாட்டை யினை..
எடுத்து வந்த வீரனோ!
மா.. வீரனோ.!
கோட்டுப் போட்டு பாட்டு
எழுதி.. கொதித் தெழுந்த
சூரனோ.. ஏய்.. சூரனோ.!

மடமை யெலாம் தீயில்
போட்டு.. எரிக்க வந்த
ஈசனோ! ஓ.. ஈசனோ..!
கொடுமை கண்ட
அடிமைகளை.. எழுப்பிவிட்ட
நேசனோ!பா.. வாசனோ.!

இன்னும் சொல்லக்
கூடுமோ.. துயில் எழுந்து
பாடுமோ.! குயில் கூவுமோ!
மன்னவனை பாடப் பாட..
மனதில் மயிலா டுமோ!
பாரதியைப் பாடுமோ!

**வே.கல்யாண்குமார்**
பெங்களூரு



## நீதானே...பூந்தேனே...

நெஞ்சில் நீதானே
நீங்காதே...செந்தேனே...

ஆசை அத்தனை
வச்சேனே...உம்மேலே...

நான் வாழும் காலம் உன்
மூச்சிலே...

மலை போல ... மகிழ்ச்சி..
உன் பேச்சிலே...

உன் பார்வை படும் வரை...
பூந்தோட்டம்...

நீயின்றி போனாலே...
தள்ளாட்டம்...

எங்கிருந்தோ வருகிறது...
ஆர்ப்பரிக்கும்... நீரூற்று...

எங்கேயும் காணாமல்...
பூந்தென்றலும்....
பேய்க்காற்று...

ஆசைகளின் .. மூலம்...நீ..
இசைக்கும் ...
காலம்...நீ...
என்றென்றும்..
என்னோடு..



காதலில்
கசிந்துருகு....
காதோடு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## விழி வீச்சு

கண்கள் என்ற ஆயுதம்
தாங்கி என்னவெல்லாம்
செய்துவிடுகிறாய் என்னை..
வாள் வீசாமல்
விழி வீச்சிலேயே..

அல்லது
மலரம்புகளாய்ச்
சொல்லம்புகளைக்
கணநேரத்திலெய்தி..
சீண்டுதலைச் செய்து
நாண நெளிவுடன்
வரவழைக்கிறாய் என்னை ..

நாணக்கேடயம்
இற்று விழுந்திருக்கும்
நிலைகளில்.. நிற்கச்
செய்துவிடுகிறாய்
நேருக்குநேர் உன்முன்


யாருக்கும் தெரிவதில்லை
அது ஏற்படுத்துவது
என்னவோ.. பட்டாம்பூச்சி
சிறகடிக்கும்
உணர்வுகளின்..
பரவச நிலைகளின்
விளைவுதான் என்பது

உடனே உதயமாகிறது
புது நிலவு.. வான்
மேகங்களில் நாம் மட்டுமே..
வண்ணத்துப் பூச்சியின்
சிறகுகளாய் உணர்வுகள்
விரிகின்றன..



வண்ணமயமாய்
ஒவ்வோர்
அணுவிலும்
க..ண்..ணா !

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்



ஒரு தடாகத்தை
முத்தங்களால் நிறைத்தேன்..
நீராட நீ வருவதற்குள்.



நீ கரையேறிப்
போனதும்
அமுதத்தால்
நிரம்பி
இருந்தது
தடாகம் !

**ரிஷபன்**

## காத்திருப்பு

மருத்துவரை பார்க்க
பேருந்தை பிடிக்க
நீதிமன்ற வாசலில்
காத்திருக்கும் பல மணி
நேரத்தை விட பெட்ரோல்
பங்கில் ஏடிஎம் கவுண்டரில்
நமக்கு முன்னால் நிற்பவர்
ஏற்படுத்தும் ஒரு நிமிட
தாமதம் மிகப்பெரிய
குற்றமாய் தெரிகிறது

**நாகை பாலா**

அத்தனைக்கும் ஆசைப்படு
எல்லைதான்
தொல்லையென்றால்
விலங்கினை உடைத்து
பறவையாய் சிறகடி

எடிசனின் ஆசைதான்
மின்சாரம் வந்தது
ரைட் சகோதரர்கள்
ஆசைதான் விமானம் வந்தது
மார்கோனி ஆசைதான்
வானொலி வந்தது
கிரகாம்பெல் ஆசைதான்
தொலைபேசி வந்தது

எம்ஜியார் ஆசைதான்
சத்துணவு வந்தது
கலைஞரின் ஆசைதான்
கை ரிக்சா ஒழிந்தது
ஜெயலலிதான் ஆசைதான்
மழைநீர் சேகரிப்பு கிடைத்தது
ஸ்டாலின் ஆசைதான்
காலை உணவுத்திட்டம்

சரித்திரம் உனக்கும் எழுத
நீதான் உழைக்க வேண்டும்
ஆசைப்படு தோழா
அத்தனைக்கும்,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



ரோஸ் டே முடிஞ்சு–
ப்ரபோசல் டேக்கு வந்தாச்சு...

மாமா! நான் உன்னை–
காதலிக்கிறேன்!!
ஏன்மா! இவ்வளவு தாமதம்!–

என் மடி தனில்– நீ படுத்து–
நாளைய

திங்களில் என்ன
வேண்டும்– என
உறவாடி– நிமிர்க்கையில்–
சமைச்சுட்டியா???

என்ன வார்த்தை இது??–
ஹய்ய!!! கனவா??

ஏன் மாமா? எத்தனை
வருஷமானாலும்– நான்

உனக்கு சொன்னா–
கத்துறீயே???


கொஞ்சல் மட்டும்
காதலில்லை–



கொஞ்சம்
கோபமும்
காதலில்–

அழகே!!!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி



முள் நிறைந்த வாழ்க்கையில்
ரோஜாவுக்கு துணை நின்றது
காதல்.



2.மழை ஓய்ந்த
பின்பும்
இலைகள்
சேமித்தது
மழைநீரை.

**ஐயந்தி சிவக்குமார்**
திருச்சி.

தோன்றிவர காரணராய்
துணையான பெற்றோர்
ஆன்றோராய் ஆக்கியே
மகிழ்ந்தார்... சான்றோரே
யாண்டும் நாம்வாழ
யாவருக்கும் ஆசியீந்த
ஈன்றோரே என்றும் இறை.

கட்டிலிலும் தொட்டிலிலும்
கருத்துடனே காத்திருந்து..
பெட்டியிலே பணம்சேர்த்து
வைத்தார்... வட்டிலிலே
சோறூட்டி வான்நிலாவை
சுட்டியவர் பசிதீர்த்த
ஈன்றவரே என்றும் இறை.

ஈன்றே புறம்தந்தாள்..
இடுப்பொடிய பாடுபட்டார்
தோன்றிவர துணையானார்!..
சான்றோனாய்..மன்றிலே
ஊன்றியெழ வளத்தவரே..
உண்டாக்கி விட்டவராம்
ஈன்றவரே என்றும் இறை.

## ஓடாமல் உயர்வில்லை!

ஓடாமல் ஒருநாளும் இருக்க
வேண்டாம்..!
ஓடிவந்த பாதையினை
மறக்க வேண்டாம்.!
ஓடு தானே உடம்புயிது
உயிர் தங்கு கின்ற..
கூடாகும் உடம்புயிது
கலக்கம் வேண்டாம்.!

ஓடு ஓடு ஓடு
எங்கும் நிற்க வேண்டாம்.
ஓடுகின்ற வாழ்க்கையிலே
சுணக்கம் வேண்டாம்.!
தேடு தேடு தேடு..
வீணாய்த்தேம்ப வேண்டாம்.
தேடியது கிடைக்கும்வரை
நிறுத்த வேண்டாம்.!

சுற்றிவரும் வட்டமிது
சுற்றிவருக மனிதா..
சுட்டித்தன
குழந்தையிடம்
கற்றுக் கொள்க
மனிதா!
பற்றிக் கொண்டு நடந்து
நடந்து.. பழகிவிடு மனிதா..
முற்றிவிழும் காலம்வரை
சுற்றி வருக மனிதா.!

இளமைமுதல் முதுமைவரை
வாழ்க்கையொரு வட்டம்!
வளைந்து நெளிந்து
ஓடும்வரை இல்லையடா
நட்டம்.! ஒருவர் முன்னே
ஒருவர் பின்னே.. ஓடும்காலக்
கட்டம்..! உணராது
இருக்கிறாயே
உலகத்தில் இது சட்டம்.!

## தமிழ்த்தாய் வாழ்த்து!



அகரம் தமிழுக்குச் சிகரம்.!
ஆக்கம் கவிதைக்குஊக்கம்.!

இயற்கையில் கலந்தவன்
இறைவன்.! ஈதலில்
உயர்நதால் மனிதன்.!

உறவுக்கு கைகளை விரித்து..
ஊருக்கு உழைப்பதில்
உயிர்த்து..

எதிர்வரும் காலத்தைக்
கணித்து.. ஏற்றுக..
இருளுக்கு விளக்கு..!

ஒன்றாக இனத்தினை
உயர்த்து.. ஓங்குகவே நம்
உயிரெழுத்து.!



ஔவையும் குறளுமே
படித்து.. அஃது
சொல்வதையே
செயல் படுத்து !

**வே.கல்யாண்குமார்**

## சிதறல்கள் ...

கந்தல் கோமணத்துடன் //
வண்ணக் கொடிகளேந்திய
சிறுவன் //
ஒட்டிய வயிறு //

முதலைக் கண்ணீரோடு //
உடைந்த உறவுகள்
ஒட்டினாலும் //
மாறவில்லை மனக்கீறல்கள் //

சிறுமிக்காக ஏங்குகிறது //
அவள் குதித்து விளையாடிய//
வாசற்படிகள் //

குறட்டைச் சத்தம் //
வயலில் வேலை செய்த //
தாயின் களைப்பு //

சாராய வியாபாரி //
மகனுக்கு பெயர் சூட்டினார் //
நெப்போலியன் //

வண்ணம் இல்லாததால் //
யாரும் வளர்க்க
விரும்பவில்லை //
சிட்டுக் குருவிகள் //


சாய்ந்து நிற்கிறது //
கள்ளுப் பானையை சுமந்த //
தென்னை மரம் //

நச்சுப் பாம்பு //
அத்துமீறி ஆக்கிரமிப்பு
செய்தது //
எறும்புப் புற்று //

ரயில் பயணம் //
எதிர் திசையில் பயணித்தன //
துயரமும், துரோகமும் //

கருவாட்டுக் கூடை //
வாசனைப் பிடித்தே
பசியாறின//
தெரு நாய்கள் //

**பா.செந்தில்குமார்**
கோவை




# நூல் விமர்சனம்

**நூலின் பெயர்: தமிழ் சினிமா 100 ஆண்டுகாலப் பயணம் ஒரு பருந்துப் பார்வை**
**ஆசிரியர்: கிரிஜா ராகவன்**
**வெளியீடு: காயத்ரி பப்ளிகேஷன்ஸ்**
**விலை : ₹200**
**தொடர்புக்கு : 9444362244/9840816281**

*மனைவியை நேசிக்கிறவங்க பிரெஸ்டீஜை எப்படி வேண்டாம் னு சொல்வாங்க என்ற விளம்பரம் போல தமிழ் சினிமாவை நேசிப்பவர்கள் இவரின் இப்புத்தகத்தை எப்படி வேண்டாமென்று சொல்வார்கள் என கேட்பீர்கள்....*

*1931- 1940 காலகட்டத்தில் இருந்து சினிமா 2012-2014 வரை பயணித்த விதத்தை 26 அத்தியாயங்களில் சுருங்கச் சொல்லியிருக்கிறார்.*

*இதிலிருந்து சில பகுதிகள்: 1931-40 முதல் பத்து வருடங்களில் சுமார் 235 திரைப்படங்கள் வெளிவந்ததாம். ஓடாத படங்கள் என நினைத்தால் கலைவாணர் NSKயிடம் வந்து நகைச்சுவைக் காட்சிகளை இணைத்து நடித்துத் தரும்படி கேட்பார்களாம். அக்காலத்தில் கதையில் ஒட்டை இருந்தால் அதை அவர் சரி செய்தது போல் பின்னாளில் அதில் கைதேர்ந்தவர் கலைஞானம் என படித்தது என் நினைவிற்கு வந்தது.*

*1956ல் தமிழ் சினிமா வெள்ளிவிழா(25 ஆண்டுகள்) கண்ட போது அதுவரை 627 படங்கள் வெளியானதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. இதில் 240 படங்கள் பக்தி, புராணம் சம்பந்தப்பட்டவை. 232 படங்கள் சமூகம் கற்பனை கலந்த படங்கள். 127 படங்கள் ராஜா ராணிக் கதைகள். மற்றவை சரித்திரம், இலக்கியம் சார்ந்தவை.*


*1956-58 காலகட்டத்தில் ராஜநடை போட்ட சினிமா 3 வருடங்களில் சுமார் 127 படங்கள் திரையிடப்பட்டன. களத்தூர் கண்ணம்மா படத்தில் கமல் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார்.*

*1974-76 காலகட்டத்தில் சோ யாருக்கும் வெட்கமில்லை என்ற தன் நாடகத்தை திரைப்படமாக்கி இயக்கினார்.175 படங்கள் வெளியான இக்கால கட்டத்தில் ரஜினி இயக்குநர் கே.பாலசந்தரின் அபூர்வ ராகங்கள் படத்தில் அறிமுகமானார். 25 வது அத்தியாயத்தில் 1930களில் ஆரம்பித்து 1990கள் வரை ஒவ்வொரு 10 வருடங்கள்*



*பற்றி வெகு சுருக்கமாக எழுதியிருக்கிறார். சுவாரஸ்யமான தகவல்கள் அடங்கிய இப்புத்தகம் பொக்கிஷம் என்றே சொல்லலாம்.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**




## தேனருவி

நீ புன்னகைத்தால்
தேனருவியில்
குளித்தாற் போல்
குளிர்கிறது மனது!
நீ முத்தமிட்டால்
நயாகரா நீர்வீழ்ச்சியில்
குதித்தது போல்
களிக்கிறது உள்ளம்!
உன்னைத்தலைக்கனம்
பிடித்தவள் என்கிறார்கள்!
உன் கூந்தல் நீளமாகவும்
அடர்த்தியாகவும் இருப்பதால்
இப்படிச் சொல்கிறார்களோ!?
உன்னைத்திமிர் பிடித்தவள்
என்கிறார்கள்!
அங்கங்கே வளைவும்
நெளிவும் அழகாக
இருப்பதால் பொறாமையில்
சொல்கிறார்களோ!?
யார் என்ன சொன்னால்
என்ன?!
உன்னை நினைத்தால்
உன்னுடன் பேசினால்
உன்னை நெருங்கினால்
உன்னில் கலந்தால்
என் மனதில்
ஐந்தருவி என்ன



ஐந்நூறு
அருவியே
கொட்டுகிறது!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## அவள்

நினைக்கும் வேலையை
மனம் நிறுத்தும்
வேளைக்காகக்



காத்திருக்
கிறேன்
உன்
நினைப்பை
விட்டு
சற்றேனும்
வெளிவர.

**கே. பி. ஜனார்த்தனன்**



## உள்ளங்கையில் உலகம்

இணையத்தில் உலகத்தை இழுத்து வந்தே
இல்லத்தில் அமர்ந்தபடி காணுகின்றோம்
புனைகதையில் படித்துநாமும் வியந்து நின்ற
பிறக்கோளில் கால்பதித்தே ஆயுகின்றோம் !
முனைப்பாகச் செயற்கைக்கோள் பறக்க விட்டே
மூடியுள்ள புவிவளங்கள் அறியு கின்றோம்
துணையாக அறிவியலைச் சேர்த்துக் கொண்டு
துலங்காதப் புதிர்களினை விடுவிக் கின்றோம் !

கல்விதனைத் தொழிர்நுட்பக் கணினி மூலம்
கற்கின்ற முன்னேற்றம் நாமும் பெற்றோம்
பல்துறையின் அறிவுபெற்றே தொழிலின் கூடம்
பார்க்கின்ற இடமெங்கும் இயங்க வைத்தோம் !
வெல்லுகின்ற மின்னியலின் சாதனங்கள்
வீட்டிற்குள் குடிசைத்தொ ழில்போல் செய்தோம்
பல்விதமாய் உற்பத்தி செய்தே ஊரின்
பாதையோரம் விற்பனைக்குக் குவித்து வைத்தோம் !

நீர்தடுத்தே அணைகட்டிப் பசுமை செய்தோம்
நீரணுவில் மின்சாரம் பிரித்தெ டுத்தோம்
பார்வியக்க மூலிகையில் எரிநெய் காய்ச்சிப்
பதைபதைக்கும் எய்ட்சுக்கும் மருந்தைக் கண்டோம் !
ஊர்தோறும் புதுமைகளைத் தொடங்கி வைத்தே
உள்கையில் உலகத்தை வைத்த நாமோ
போர்க்களமாய்ச் சாதிமதப் பகையால் வெட்டிப்
பெருக்குகின்ற குருதியிலே சாயு கின்றோம் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**




1. தந்தை ஐம்பது ரூபாயை
மிச்சம் படுத்த முப்பது
நிமிஷம் நடந்தார்
மகன் 30 நிமிஷத்தை
மிச்சப்படுத்த ஐம்பது ரூபாய்
கொடுத்து ஆட்டோவில்
சென்றார் இதுதான்
ஜெனரேஷன் கேப்

2. அடுத்தவர் தும்மலில்
சகுனம் பார்க்கும் நாம்
நமக்கு வேண்டியவர்
தும்மினால் ஆயிசு 100 என
சொல்கிறோம்

3. ஒடுகிற ஓட்டம் எல்லாம்
மரணத்துக்காக என்றால்
நாம் கொஞ்சம் நிதானமாக
ஓடலாம்

4.சாக்கடையில் கல்
இருந்தால் அது நம்
மீது படும் என ஒதுங்கி
செல்வதை சாக்கடை
பெருமையாக நினைக்கிறது.



5. சமூகம்
மலடி என்று
அழைப்பவரை
அம்மா என்று
அன்போடு
அழைக்கிறான்
பிச்சைக்காரன்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## "விதி என்று ஏதும் இல்லை"

வானம் வரை எழுதப்பட்ட
தீர்ப்பல்ல வாழ்க்கை!
நம்பிக்கையால் தீட்டப்பட்ட
ஓவியமே வாழ்க்கை!

நெற்றிச் சுருக்கத்தில்
வருவதல்ல வெற்றி!
கைகளின் உழைப்பில்
கசிவதே வெற்றி!

விழுந்தால் அது
மண்ணின் பழியல்ல!
எழுந்தால் அது
எண்ணத்தின் எழுச்சி!

காயங்களே சாட்சியங்கள்!
கைவிடாத முயற்சிக்கான
பதக்கங்கள்!

சந்தேகம் உரக்கக்
கத்தி வழிமறிக்கும்
நம்பிக்கை மெதுவாகச்
சொல்லி உயரவைக்கும்!

உன் சிம்மாசனம்
வெளியில் இல்லை!
உன் உள்ளத்துள்
உறைந்து கிடக்கு!

உழைப்பைக் கொண்டு
தேய்த்திடு!
உற்சாகம்
கொண்டு
அமர்ந்திடு!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## ஆதார சுருதி

மற்றவர்களுக்கு நிகழ்ந்தவை
நமக்கு நடக்கவில்லை எனும்
அங்கலாய்ப்பு வேண்டாம்

அதே மாதிரி நம்
நல்வாய்ப்புபிறர்க்கு
வாய்க்காது உணர்வீர்

கைரேகை போன்றே
ஒவ்வொருவருக்கும்
அமைவது தனித்துவமானது
பாடத்திட்டத்திற்கு
அப்பாற்பட்டது

முகவாய்க் கட்டையில்
இடித்தவாறு வருந்தக்கூடாது

எதையும் எதிர் கொள்ள
யோசனை
களுடன்
காத்திரு
துணிவே
சகலத்திற்கும்
துணை



**பி. பழனி,**
சென்னை.



## வயல்

பூமித்தாயின் கருவறையில்
பூத்து வந்த பொக்கிஷம்

வான மழை உள்வாங்கி
வளர்ந்து நின்ற மண்வளம்

வியர்வை உப்பை உள்வாங்கி
அகப்பை நிறைத்து
உயிர் வளர்க்கும்

பச்சை ஆடை மேனியில்
பருவப் பெண்ணாய் வளந்து
ஆதவனின் அரவணைப்பில்
அறுவடைக்குத் தயாராகும்

வேறுபாடில்லை வேண்டியதை
வளர்த்தெடுக்கும்

உழவனின் உயிர் காக்கும்
உன்னத அமுதம்
இயற்கையெனும் இறைவன்


வான் மழை தப்பினும்
உழைப்பின் வியர்வையில்
பயிர் வளர்க்கும்

அதிகாலைச் சூரியனின்
அகம் மகிழ்ந்த கதிர்
விரிப்பும் சிறகு விரித்த
பறவைகளின் சிங்காரக்
குரல் ஒலியும் கவலை
தீர்க்கும் அருமருந்து

அறிவியல் மோகத்தில்
அவசர காலத்தில்
அழிந்து வரும்வயல்வெளிகள்
மனிதன் தேடும் மரண
வழிகள் வயல் காத்தால்
வாழ்க்கை
சுகமாகும்
வயல்
அழித்தால்
வாழ்வே
துயராகும்.



**தமிழ்நிலா**



1. பிளேடு கூர்மையானது
ஆனால் மரங்களை
வெட்டாது கோடாலி
வலிமையானது ஆனால்
முடியை வெட்டாது

2. தனியாக இருந்தாலும்
முட்களை போல கூர்மையாக
இருக்க வேண்டும்
ஏரி மிதிப்பவர்களும்
உடைக்க நினைப்பவர்களும்
பயப்படுவார்கள்

3. சொல்லுமா என்பது
கணவன்மார்களின் ஹலோ
எங்கே இருக்கீங்க என்பது
மனைவிமார்களின் ஹலோ

4.ஊக்குவிக்க ஆள்
இருந்தால் ஊக்கு
விற்பவனும் தேக்கு விற்பான்

5.சலுகைகள்
கொடுக்கப்படுகிறது என்றால்
அங்கே சுதந்திரம்
பறிக்கப்படுகிறது என்று
அர்த்தம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக் குறிச்சி



## புரட்சி செய்

புக்கை எடுத்து படிச்சா
படிப்பு மண்டயிலே
ஏறவில்லை...

அப்பா சொல்லும் அறியுரை
அறவே ஏறல புத்தியிலே...

ஆசிரியர் நடத்திய பாடங்கூட
பலனளிக்கவில்லை
எனக்கு....

அழகான பொண்ண பார்த்து
நான் போட்டேன் தப்பு
கணக்கு...


வசதியான வாழ்க்கை
கொடுத்தாரு அப்பா...
அதை அனுபவித்தேன் தப்பு
தப்பா....

சூரியன் உதயத்தில் விடியல்
இருக்கு...உன்
ஒழுக்கத்தில்தான்
வாழ்க்கையிருக்கு....

படிக்கும் காலம் உனக்கு
பொன் போன்றது...
பதவி காலம்
நீ புரட்சி
செய்வது....!!



**பொன். கருணா**
நவி மும்பை



## யாருமில்லா சாலை

மாலையொளி சாய்ந்து
நீளமான நினைவுகளோடு
நடக்கிறது சாலை

விளக்குகள் இருந்தாலும்
விடியலை நம்பி
காத்திருக்கிறது சாலை.

மண்ணின் மடியில்
புதைந்த பாதச்சுவடுகளைத்
தேடுகிறது சாலை

நடக்காத நேரங்களில்
தன்னைத் தானே
கடக்கிறது சாலை

சந்திப்புகள் இல்லாததால்
பிரிவின் வலிகுறைந்த சாலை

சிலநேரம் நிசப்தத்தை
விடுத்து என்
அடிகளைக்
கேட்கிறது.

யாருமில்லா
சாலை...

என்னை
மீண்டும்
எனக்கே அறிமுகப்படுத்தும்
மௌன நண்பன்.



**நா.பத்மாவதி**
கொரட்டூர்




## காத்திருப்பு

மருத்துவரை பார்க்க
பேருந்தை பிடிக்க
நீதிமன்ற வாசலில்
காத்திருக்கும்
பல மணி நேரத்தை விட
பெட்ரோல் பங்கில்
ஏடிஎம் கவுண்டரில்
நமக்கு முன்னால் நிற்பவர்
ஏற்படுத்தும்
ஒரு நிமிட
தாமதம்
மிகப்பெரிய
குற்றமாய்
தெரிகிறது



**நாகைபாலா**



ஜெயித்த காதல்
சாதாரண கதையாகிறது
தோற்றுப் போன காதல் தான்
காவியமாகிறது!

அணு,அணுவாய்
இம்சை செய்யும்
இந்த காதலும்
தீவிரவாதம் தான்!

அவளுக்கு கிரீடங்கள்
சூட்டப்பட வில்லை
இருந்தாலும் என் இதய
ராஜாங்கத்தில்
அவளே மகாராணி!!

தூது போக எந்தப் புறாவும்
வராது உன் ஒற்றை
புன்னகை போதுமடி!!
கிங்கோப்ராவின் விஷம்
தோற்றுப்போனது—உன்
கிறங்கடிக்கும் ஒருதுளி
விஷப்பார்வையில்!!


நகப்பென் கொண்டு
மூன்று வரியில் ஹைக்கூ
எழுதுவாய் என்றிருந்தேன்.
அந்த மனுஷ்போல மனதில்
உள்ள எல்லாவற்றையும்
பெரிதாய் கொட்டி விட்டாள்?
கவிதைகளாய்!!

இன்று எனக்கேன்
வாழ்த்து சொல்கிறாய்
என்கிறாய்? மலர்கள்
தினத்தில் மலருக்கு
வாழ்த்து சொல்வதில்
தவறில்லையே!!

வெடித்து சிதறும்
எரிமலையை விட
நரகமானது சொல்லாமல்
தவிக்கும் முதல் காதல்!

அவள் எச்சில் பட்ட
ஸ்ட்ராவில் குடிக்கும்
குளிர்பானங்களுக்கு
எக்ஸ்ட்ரா இனிப்பு
தேவைப்பட்டதே இல்லை
இவ்வளவு ஏன் அந்த
அம்பியான மனசு
அவளோடு குளிர்பானம்
குடிக்கும் போது இன்னொரு
ஸ்ட்ரா கேட்டதே இல்லை
நான் சொல்வதை கேட்டு
நீங்கள் சிரித்தால்
உங்கள் மனதுகளில்
காதல் இல்லவே இல்லை!

**நௌஷாத் கான்.லி**




## நினைவுகளுடன் அசைபோடும் ஆலமரம்...

இயற்கையின் படைப்பிலே
நிலைமாறி உருமாறி உலவி
திறியும் உயிர்களுக்கு
மத்தியில் தனக்காக
வாழாமல் பிறருக்காக வாழும்
தன்மையுடையவற்றில் நானும்
ஒன்றாவேன். விதையிலிருந்து
விருச்சமாக வளர்ந்து
ஆண்டுகள் பலநுhறுவாழும்
பெருமை உடையவன்.
என்னைப்போன்ற
ஒவ்வொருவரும்
விதையிலிருந்து வளர்ந்து
வரும்போது பல்வேறு
நிலைகளில் பிறருக்கு
பயன்தருகின்றோம். ஒரு
கிராமத்தில் மந்தையின்
மத்தியில் உள்ள ஆலமரமாய்
இலைகள் உதிர்ந்து காய்ந்து
போய் காட்சிதருவதால்
அதை வெட்டிவிடவேண்டும்
என்று பொதுமக்கள்
முடிவு செய்தனர். அதை
அறிந்த நான்; என்;
வாழ்நாள் நினைவுகளை
அசைபோட்டு பார்க்கிறேன்.
ஆம் ஆயிரம் பறவைகளின்
சரணாலயமாய், பல்லாயிரம்
நுண்யிர்களின் வசிப்பிடமாய்,
பலதலைமுறையினரின்
ஊர்பிரச்சனை,
வீட்டுப்பிரச்சனைகளை
தீர்த்துவைத்து தீர்ப்பு
கூறும் பஞ்சாயத்து
மேற்கூரையாய்,உழைத்து
களைத்தவிவசாயிகளின்
ஆலோசனை கூடமாய்,
கல்வியினை போதித்த
பள்ளிக்கூடமாய், கொளுத்தும்
வெயிலுக்கும், கொட்டும்
மழைக்கும் குடையாய்,
மழலைகளை நிலாச்சோறு
சாப்பிடவைக்கும் மேகமாய்,
சிறார்களின்; ஊஞ்சலாய்,
இளைஞர்களின்
பொழுதுபோக்கு
கூடாரமாய்,
பகல்பொழுதில்
வேலையற்றவர்,
வேலைசெய்யமறந்தவர்,
புறம்பேசி ஊர்வம்பை
விலைக்குவாங்கும்
வியாபார சோம்பேரிகளின்;
தாயகட்டை விளையாட்டு,
ஆடுபுலி ஆட்டம்,
பாண்டிஆட்டங்களின்
விளையாட்டுகளமாய்,
ஆடுகளின்
உணவுவிடுதியாய்,
பஸ்பயணிகளின்
நிழல்குடையாய் இருந்த
நான் கோடைகாலங்களில்
இலைகளை உதிர்த்து
வறுமையின் அடையாளமாய்
காட்சி தருவேன்.
கார்காலத்தில் மழைநீரால்
மனம் மகிழ்ந்து
வேர்களில் நீர்உறுஞ்சி
கோடைதந்த தாகத்தை
தணித்து வசந்தகால
நீரலைகளால்; மீண்டும்
வளங்கொழித்து இலைகளை
உயிர்பித்து காற்றின்
கைபட்டு சிரித்துசி;ரித்து
மகிழ்ச்சிதருவேன்.
எனக்கென்ன வயது
என்று எனக்கே
தெரியவில்லை. காரணம்
என்னை விதையிட்டவர்
உயிரோடில்லை,
வளர்த்திட்டவர்களுக்கோ
விளக்கி சொல்ல
முடியவில்லை. ஒவ்வொரு
ஆண்டும் பீனிக்ஸ்
போல் மறைந்து மீண்டும்
உயிர்த்தெழுவேன்.
ஆனால் இந்த ஆண்டோ
என்ன ஆனது என்று
தெரியவில்லை. இது
மழைகாலமா வெயில்காலமா
புரியவில்லை. இந்த
காலமாற்றத்தை கணக்கிடவோ
வழியுமில்லை. என்
கிளைகளிலிருந்த இலைகளை
இழந்து சிரிப்பினை மறந்து
புலம்புகின்றேன். நான்
மனதுக்குள் அழும்குரல்
யாருக்கு கேட்கும்.
தொடர்மழை தொட்டால்; என்
உடல்துளிர்க்கும் இல்லை
உங்கள் கைகள்
கங்கையானால்
மீண்டும் என்வாழ்வு
செழிக்கும்.



**பொன்.பனகல் பொன்னையா**
தா.வாடிப்பட்டி.



கனவுகளும் தேவையில்லை
காயங்களும் தேவையில்லை
மொத்தத்தில் வலிகள் தரும்
உன் காதலே தேவையில்லை!

கவிதை எழுத
கற்பனை எதற்கு??
உன் கடைக்கண்
பார்வை போதாதா!!

அரைகுறையாய்
தமிழ் தெரிந்த என்னிடம்
இலக்கண பிழையில்லாமல்
கவிதை எழுத சொல்லினர்.
யோசிக்காமல் உன் பெயரை
மட்டும் எழுதினேன்.

அணு,அணுவாய்
உருக வைப்பதும்
அவஸ்தையோடு
அழ வைப்பதும் ஆறுதலாய்
மடி தருவதும் மானம் கெட்ட
மகத்துவமான காதல் தான்!!

கனப்பொழுது தோள் சாயடி
மறைந்து போகும்
கோடான கோடி கவலைகள்!!

ஜன்னலோரம் எட்டிப்
பார்க்காதே—ஏனெனில்
உயிரில்லாத எதிர்வீட்டு
ஜன்னலுக்கு கூட
மீசை முளைக்கும்.

காகக் கூட்டங்களிடம்
மனிதன் கற்க மறந்தான்???
ஒற்றுமையை!

உன்னை சுற்றி வரும்
தேனீக்களுக்கு யார்
சொன்னது?? நீ மலரென்று!!!

நிலவே நிலவே நில்லாமல் ஓடி
நட்சத்திரங்களை அள்ளி வா
மயிலே மயிலே மகிழ்ச்சியாய்
ஆடிமழையை கொண்டு வா
குயிலே குயிலே
கும்மாளமாய் கூவி
குளக்கரையில் குளித்து வா
சேவலே சேவலே
சேட்டை ஏதும் செய்யாமல்
விடிகாலை சூரியனை
எழுப்பி வா காகமே காகமே
இரவினில் கரையாமல்
அமைதி காத்து வா
நாயே நாயே நன்றியோடு
நடை போட்டு வீதியெங்கும்
பாதுகாத்து வா
பூனையே பூனையே
பால் திருடி உண்ணாமல்
நேர்மையாக வாழ்ந்து வா
எறும்பே எறும்பே
மழைக்காலம் வரும் முன்
சிறப்பாக சேமித்து வா
மனிதா மனிதா
அன்பு தான் உன் வளம்
அறிவு தான் உன் பலம்
ஆகச் சிறந்தவனே
அகிலம் காக்க மகிழ்ச்சி
பூக்க இயற்கையோடு
இயற்கையாய் இன்பமாய்
இணைந்து வாழ பழகு!

1.வாழ்க்கை
வாழ்க்கை வாழ்வதற்க்கே
புரிந்தது தொலைத்த பிறகு !

2. வீடு
யாருமில்லா பாழடைந்த
வீடு அது ஒட்டடையில் ஒட்டி
வாழும் சிலந்திக்கு மட்டும்
அது சொர்க்கம்!

3. காதல்
ஆசை தான் துன்பத்திற்கு
காரணம் –இருந்தும்
பேராசை கொள்கிறேன்
உன் மீது !

4. முஸல்மான்
அவன் தாடி வைத்தால்
முல்லா என்றனர்
திரைப்படங்களில் எல்லாம்
தீவிரவாதிகளாக
அடையாளப்படுத்தினர்
தொப்பி,ஹிஜாப் அணிந்தால்
மதவெறி என்றனர்
கைப்பையோடு பயணம்
செய்கையில் சந்தேகத்தோடு
பார்த்தனர் ஒரு
அவசரத்துக்கு கூட
நடு இரவில்
மருவத்துவமனை செல்ல
அவனுக்குள் அச்சத்தை
விதைத்து விட்டீர்கள்
எப்போது தான் அவனை
உங்களில் ஒருவனாக
ஏற்றுக்கொள்வீர்கள் .

5. உன்னை அறிந்தால்
வந்த வழி தெரிந்தால்
போகும் வரை
மனதில் அகங்காரமில்லை!

6. பழிச்சொல்
ஈரமிருந்தும்
மழையை சிந்துவதற்கு
அஞ்சுகிறது அந்த வானம் !

7. வேண்டுதல்
சீக்கிரத்தில் வடிவாய் வர
வேண்டி வரம் கேட்டது அந்த
சிலை உளிப்பட இடமில்லை
வலிப்பட மனமில்லை

8. உண்மை
எல்லாம் பட்டப்பிறகும்
இந்த வாழ்க்கை நம்மை
வாழத்தான் சொல்கிறது

9.வீடு
குருவிக்கும் கூடு உண்டு
சில மனிதர்களுக்கு
வாழ ஏது வீடு ?
குயில் முட்டை நிரம்பி கிடந்த
காக்கை கூட்டினை
பார்த்துஏக்கத்தோடு
கடந்து சென்றான்
பிளாட்பாரத்தில்
வசிக்கும் செல்வம்.



**லி .நௌஷாத் கான்**

## க..ண்..ணா

பாதையில் செல்கையில்
பாவையர் சிரிப்பொலி..
பேச்சுடன் கலந்தே
காதில் விழுந்தது.

ரதையைத் தவிர
மற்றவரில் சிலர்..
'கண்ணனின் பிரியம்
யார் மேல் அதிகம்..?

'தன்னிடம் மட்டும்'..
'தன்னிடம் மட்டுமே'..
'தன்னிடம் மட்டும்தான்'..

கால் கடுக்க
கால் மாற்றி நின்று
அவன் ஊதிய குழலிசை..
செய்த அலங்காரங்கள்..
நதிக்கரையோரம்
காத்திருந்த பொழுதுகள்..
தனக்காக நிறுத்தி வைத்த
வேலையின் கணக்குகள்..

விதவித குரல்களில்
விவாதங்கள் பலதும்..

பாதையில் நடந்த
என்னை அழைத்தனர்..

கலக்கம் நிறைந்தது..
கவலை பிறந்தது..
'கணத்தினில்
என்னைக்
காப்பாய் கண்ணா'
மனதினுள் வேண்டி
அருகினில் சென்றேன்.

'எங்களில் யாருடன்
கண்ணனுக்கு ப்ரியம்
கூடுதலாய்' என
உடனே சொல்வாய்.."


'ராதையிடம்.."
சட்டென்று உடனே
யோசிக்காமல்
பட்டென்று பதிலை
எடுத்துரைத்தேன்

'அட மிகவும் சரியாய்
பதிலுரைத்தாய்..'

அடுத்த கணத்தில்
உயர்ந்தெழுந்தேன்
பூமியிலிருந்து
எதிர்பாராமல்

இனித்தே மகிழ்ந்ததில்
எகிறியது
இதயத் துடிப்பும்
அதிவிரைவாய்..

மரத்தின் பின்னால்
மறைவிடத்திருந்து
பேசிக் கொண்டே
தோன்றியவன்
இருகரத்தால் எனைத்
தூக்கிக் கொண்டான்
என்னுள் என்றும்
நிறைந்த கண்ணன்!



**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.


999SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE (Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889

SATHLOKHAR SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
www.paperboy.biz
8122664699


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







## கால் வலிக்கு குட்பை சொல்லுங்க !!

பழங்காலத்தில் நம் முன்னோர்கள் கால் வலியோ, மற்ற நோய்களே அவர்களை தாக்காமல் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். இதற்கு காரணம் என்னவென்றால், நம் முன்னோர்கள் உணவாக எடுத்துக்கொண்ட சத்தான உணவுப்பொருட்களும், பழக்கவழக்கங்களும் தான்.

ஆனால், இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சரியான ஊட்டச்சத்து இல்லாத உணவுகளை உண்பதால் உடலைத் தாங்குகின்ற கால்கள் வலுவினை இழந்து கால் வலியாலும், பெயர் தெரியாத பலவகை நோயாலும் அவதிப்படுகின்றனர்.



கால் வலியைப் போக்குவதற்கான எளிய வழிமுறைகள் :

கால் வலி மற்றும் கால் சோர்வை விரைவில் குணப்படுத்த தேன் மற்றும் எலுமிச்சைச் சாற்றை, ஒரு கப் வெதுவெதுப்பான நீருடன் குடிக்க வேண்டும்.

முழங்கால்களில் வலி ஏற்படும் போது, அந்த இடத்தில் ஐஸ் கட்டிகளை வைத்து 10 முதல் 15 நிமிடம் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதன் மூலம் முழங்கால் வலிகள் முற்றிலும் குணமாகும்.

தூங்கும் போது கால்களுக்கு அடியில் தலையணை வைத்து தூங்குவதன் மூலம் கால்கள் வலிக்காமல் இருப்பதோடு, மெதுமெதுப்பான இடத்தில் கால்களை வைத்து தூங்குவதால் தூக்கமும் நன்றாக வரும்.

ஒரு டம்ளர் ஆரஞ்சு ஜூஸ் உடன் ஒரு டேபிள் ஸ்பூன் காட்-லிவர் எண்ணெயை கலந்து, படுக்க போகும் முன்பு குடிப்பதால் கால் வலி குணமடையும். மேலும் உடலில் இருக்கும் சோர்வும் நீங்கும்.

கால்களை நன்கு மடக்கி நீட்டுவதன் மூலமும் கால் வலியை எளிதில் குணமாக்க முடியும். மேலும் இது ஒரு சிறந்த உடற்பயிற்சி. இப்பயிற்சியை தண்ணீரை குடிக்கும் போதெல்லாம் செய்து வந்தால் கால் வலியானது வராமல் இருப்பதோடு, கால்களும் சோர்வடையாமல் இருக்கும்.

கால்களானது வலி இல்லாமல் புத்துணர்ச்சியுடன் இருக்க, ஒரு வாளியில் வெதுவெதுப்பான நீரை எடுத்து, அதில் சிறிது உப்பை போட்டு, கால்களை நீரில் மூழ்கி இருக்குமாறு 15-20 நிமிடம் வைத்துக்கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் எளிமையாக கால் வலியினைப் போக்கலாம்.


பெண்கள் கால் வலியால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் அதிகமான உயரம் கொண்ட காலணிகளை அணிவதால் இடுப்பு வலியுடன், கால் வலிகளும் ஏற்படுகின்றன. பெண்கள் அதிகமான உயரம் கொண்ட காலணிகளை அணியாமல் தவிர்ப்பதன் மூலம் கால் வலியிலிருந்து தப்பிக்க முடியும்.

அன்றாட உணவில் கீரைகள், பழங்கள், காய்கறிகள், மூலிகை சூப் போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தினந்தோறும் அரை மணி நேரமாவது நடைப்பயிற்சி செய்வது நல்லது. கை, கால்களை நன்கு வீசி நடக்க வேண்டும்.

## வாழைப்பழத்தை சாப்பிட்டால் உடல் எடை குறையுமா ?

வாழைப்பழத்தில் மெக்னீசியம், பொட்டாசியம், வைட்டமின் போன்ற ஊட்டச்சத்துகள் அதிகமாக நிறைந்துள்ளது. வாழைப்பழத்தை அனைவருமே சாப்பிடலாம். நீரிழிவு நோயாளிகள், இதயநோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூட எவ்வித பயமும் இல்லாமல் வாழைப்பழத்தை சாப்பிடலாம். இப்போது 12 நாட்கள் தொடர்ந்து வெறும் வாழைப்பழத்தை மட்டும் சாப்பிட்டு வந்தால் நம் உடலில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதைப் பார்ப்போம்.





வாழைப்பழ டயட் என்றால் என்ன?

வாழைப்பழ டயட்டில், ஒரு நாளைக்கு 10 முதல் 12 வாழைப்பழங்களை மட்டும் உணவாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு வாழைப்பழத்துடன் தினமும் 3 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும்.

இதே போல் வாழைப்பழம் மற்றும் தண்ணீர் இரண்டை மட்டுமே உணவாக 12 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.

பின்னர் இந்த வாழைப்பழ டயட் முறையுடன், தினமும் உடற்பயிற்சிகளை செய்து வந்தால், உடல் எடையில் நல்ல மாற்றம் ஏற்படும்.

ஒவ்வொரு நாட்களும் முக்கியமாக நம் உடம்பிற்கு தேவையான ஓய்வினை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

வாழைப்பழ டயட்டினால் ஏற்படும் நன்மைகள் :

வாழைப்பழம் மற்றும் தண்ணீரை மட்டுமே உணவாக எடுத்துக் கொள்ளும்போது மனம் புத்துணர்ச்சி அடைவதுடன் உடல் எடையும் குறைகிறது.

**-A.s.Govinda rajan**
Kodambakkam, Chennai




## விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



# ஜோக்ஸ்





வம்புலே மாட்டுறதுக்கு இன்பாக்ஸ் கேள்விகள் &பதில்கள்

1. U from??
எதுக்கு?
2. Married ah??
ஏஏஏஏன்?
3. Age yenna??
ஏழு கழுதை வயசாச்சு, என்ன இப்போ??
4.Saptingala??
அதுலாம் நேராநேரத்துக்கு தெளிவா,
5. Good morning, good afternoon, good night, ப்ளீஸ் இதையெல்லாம் கமெண்ட்ல சொன்னா உங்க கெத்து போய்டுமா??
6.Yenna work panringa?
சோறு.. சோறு.. தண்டச்சோறு..
7. What's doing?
வெட்டி.. எப்பவுமே வெட்டி தான்,
8. Pathil solla matingala??
அதான் சொல்லலைனு தெரியுதுல,
9. What's app number yenna?
ம்ம்க்கும், அங்க ஒன்னும் தேறாது, பதில் சொல்றதுக்கு பல மாசம் ஆகும்,
10. Unga photo anupunga.,
ஏன் வாழறதுக்கு விருப்பம் இல்லையா?
11. Neenga ponne ila, nan namba maten, போய்ட்டு வாங்க புத்திசாலி,
12. Ennai miss panringala?
அய்யோ ஆண்டவா... மண்டைய கொண்டுபோய் எங்க மோத்திக்குவேன்?
13. Yeppavum online thana?
என்ன பிரச்னை உமக்கு?
14. Nenga yenna community?
என் புருஷனுக்கு பொஞ்சாதி,/ என்பொஞ்சாதிக்கி ஆண்சாதி போதுமா?
15 Oi hoii,
என்ன வாந்தி வருதா??
16› இதுதான் இன்றைய முகநூல் வாட்சாப் லொள்ளு நிலவரம்



# சமையல் அறை ஸ்பெஷல்



## சின்னச்சின்ன விஷயங்கள் சாதாரண சமையலையும் சூப்பராக்கும்..!

சமையலறையில் வேலை செய்யும் போது, மனதில் கொள்ள வேண்டிய பல சிறிய குறிப்புகள் உள்ளன. இவை சமையலறை வேலைகளை எளிதாக்குவது மட்டுமல்லாமல், உங்கள் உணவின் சுவையையும் அதிகரிக்கின்றன. உங்களுக்கு பல சமையலறை குறிப்புகளைப் பற்றி தெரிந்திருக்கலாம். ஆனால் இந்த சமையல் குறிப்புகள் உங்கள் சமையலை எளிதாக்கும் மற்றும் சிறந்த சுவையை அளிக்கும்.

* முட்டைகள் வறுக்கும்போது எண்ணெயில் ஒட்டிக்கொள்ளும். எனவே நீங்கள் முட்டையை எண்ணெயில் சேர்க்கும் போதெல்லாம், முதலில் ஒரு சிட்டிகை உப்பு சேர்க்கவும், பின்னர் முட்டையைச் சேர்க்கவும். இது முட்டை வாணலியின் அடிப்பகுதியில் ஒட்டாமல் தடுக்கும்.

* உருளைக்கிழங்கு அதிகமாக வேகாமல், கொதிக்கும் போது வெடிப்பதைத் தடுக்க விரும்பினால், உருளைக்கிழங்கை வேகவைக்கும் போது ஒரு ஸ்பூன் வினிகரைச் சேர்க்கவும்.

* தக்காளி வதக்குவதற்கு அதிக நேரம் எடுக்கும். எனவே, தக்காளியின் சுவைக்கேற்ப உப்பு சேர்க்கவும். இது அவை வேகமாக வேகவும், வதக்கவும் உதவும்.



* கடாயில் மசாலாப் பொருட்கள் கருகினால், உடனடியாக ஒரு ஸ்பூன் தயிர் சேர்க்கவும். அவ்வாறு செய்வதால் மசாலாப் பொருட்களின் சுவை உடனடியாக மாறும்.

* ஒரு முட்டை புதியதா என்பதைக் கண்டுபிடிக்க, அதை தண்ணீரில் போடுங்கள். மூழ்கினால், அது புதியது. அது மிதந்தால், பழையது.

* பக்கோடாவை மொறுமொறுப்பாக செய்ய விரும்பினால் உருண்டைகள் மிகவும் மொறுமொறுப்பாக இருக்க, சிறிது அரிசி மாவை கடலை மாவுடன் கலக்கவும். இது உருண்டைகளை இன்னும் மொறுமொறுப்பாக மாற்றும்.


* எந்த காய்கறி போட்டு குழம்பு செய்தாலும் கெட்டியாகவில்லை என்றால், ஒரு ஸ்பூன் வறுத்த கடலை மாவைச் சேர்க்கவும். இது குழம்பு கெட்டியாக வைக்க உதவும்.

## மீந்த உணவில் சுவையான ‘ரெசிபி’கள்

* குட்டீசுக்கு வாங்கின பிஸ்கட்டுகள் மீந்து நமுத்துவிட்டதா?அவற்றை மிக்சியில் போட்டு பொடித்து, பால், சர்க்கரை, கிரீம், முந்திரி சேர்த்து, பிரிட்ஜில் வைத்து நல்ல ஐஸ்கிரீமாக பரிமாறலாம்.

* காலையில் செய்த ரவை உப்புமாவுடன் கரம் மசாலா சேர்த்து, பிரெட் துண்டுகள் இடையே உப்புமாவை நிரவி, ‘டோஸ்ட்’ செய்து சாண்ட்விச்சாக சுவைக்கலாம்.

* சப்பாத்தி மீந்துவிட்டால் மிக்சியில் பொடித்து உடன் நெய், முந்திரி, ஏலப்பொடி சேர்த்து உருட்டி கோதுமை லட்டு செய்யலாம்.



* கறி வகைகள் மீதமானால் வாணலியில் சீரகம், தக்காளி, வெங்காயம் வதக்கி, உடன் மீந்த காய்கறியையும் சேர்த்து மிக்சியில் அரைத்து துவையலாக்கலாம். சப்பாத்தி, இட்லிக்கு தொட்டுக்கொள்ள சுவையாய் இருக்கும்.

* மீந்த சப்பாத்திகளை ரிப்பன் போல் வெட்டி எண்ணெயில் பொரித்து, சிறிது காரம், உப்பு சேர்த்து ஸ்னாக்ஸ் போல் மாலை வேளையில் தரலாம்.

## இரவில் சாப்பிடக்கூடாத உணவுகள்...

இரவு நேரத்தில் மிக எளிதில் ஜீரணிக்கும் உணவைச் சாப்பிட்டால்தான் நமது ஜீரண உறுப்புக்கள் ஆரோக்கியமாகச் செயல்பட்டு அஜீரணக்கோளாறு, அசிடிட்டி, மலச்சிக்கல் உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து நம்மைக் காக்கும்.

பகல் நேரத்தில் நாம் எப்படிச் சாப்பிட்டாலும் நாம் செய்யும் வேலைக்கு அவை ஜீரணித்துவிடும். ஆனால், இரவு நேரத்தில் நாம் சாப்பிடும் உணவுகள் ஜீரணிக்க நீண்ட நேரம் எடுக்கும்.

இரவில் சாப்பிடக்கூடாத சில உணவுகள் இருக்கின்றன. கீரை, நெல்லிக்காய், கட்டித்தயிர், கஞ்சி, பாகற்காய், இஞ்சி ஆகியவற்றை இரவில் தவிர்த்து விடுவது நல்லது. அதையும் மீறி சாப்பிட்டால், அந்த வீட்டில் மகாலட்சுமி தாயார் வாசம் செய்ய மாட்டார், செல்வம் தங்காது என்பது ஐதீகம். இரவில் பால் சோறு சாப்பிடலாம். இதனால் செல்வம் பெருகும்.



தக்காளியில் அசிடிட்டியை ஏற்படுத்தக்கூடிய அமிலங்கள் அதிகமாக இருப்பதால், இவற்றை இரவில் தவிர்ப்பது நல்லது. நடு ராத்திரியில் ஐஸ்கிரீம் உட்கொள்வது மன அழுத்த ஹார்மோன்களை அதிகரிக்கும். இதனால், இரவில் தூங்குவதற்கு சிரமம் ஏற்படும்.

கிரீன் டீயில் காபி மற்றும் டீயை விட அதிக அமிலம் உள்ளது. இதை, இரவில் குடிக்கும் போது அதிக இதயத் துடிப்பு, பதட்டம் மற்றும் கவலை ஆகியவை ஏற்படலாம். எனவே, கிரீன் டீயை பகல் நேரத்தில் குடிப்பது நல்லது. ஆரஞ்சு மற்றும் திராட்சைப்பழம் போன்ற சிட்ரஸ் நிறைந்த பழங்கள் நெஞ்செரிச்சலை அதிகரிக்கும். எனவே, இரவு நேரத்தில் சிட்ரஸ் நிறைந்த பழங்களை தவிர்ப்பது நல்லது.

வெங்காயத்தில் அதிக ஆரோக்கிய நன்மைகள் இருந்தாலும், அவற்றை இரவில் சாப்பிடுவது நல்லதல்ல. இரவு நேரத்தில் வெங்காயம் சேர்த்த சாலட் சாப்பிடுவதால் வயிற்றில் வாயு உருவாகும். இதனால், உங்கள் தொண்டை பகுதியில் ரிப்ளக்ஸ் அமிலம் சுரக்கப்படும்.

இரவில் நீங்கள் பருகும் ஒரு கப் காபி மற்றும் டீயின் விளைவு 8 முதல் 14 மணி நேரம் வரை நீடிக்கலாம். அதுமட்டும் அல்ல, இது உங்கள் தூக்கத்தை கட்டுப்படுத்தும். எனவே, இவற்றை காலையில் பருகுவது நல்லது. காரமான பொருட்களை சாப்பிடுவது நெஞ்சு எரிச்சலை ஏற்படுத்தும். அல்லது அஜீரண கோளாறுகளை ஏற்படுத்தும். இதனால், தூக்கம் பாதிக்கப்படும். அதேபோல, கொழுப்பு சத்துக்கள் நிறைந்த பீட்சா, பர்க்கர், எண்ணெயில் பொறிக்கப்பட்ட ஸ்னாக்ஸ்கள் ஆகியவற்றை சாப்பிடக்கூடாது. இந்த உணவுகள் அசவுகரியத்தை ஏற்படுத்துவதோடு, நெஞ்சு எரிச்சல், வயிற்று வலியை ஏற்படுத்தக்கூடும்.

## நீராவியில்வேகவைத்தல் கொதிக்கவைத்தல்: அதிகஊட்டச்சத்துகளைத்தரும்சமையல்முறைஎது?



**காய்கறிகளை நீரில் வேகவைக்கும்போது என்ன நடக்கும்?**

காய்கறிகளை நீரில் கொதிக்கவைத்து சமைப்பது எளிய மற்றும் வழக்கமான சமையல் முறையாகும். தண்ணீரில் காய்கறிகளை மூழ்கவைத்து 100 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்குள் வேகவைப்பது நல்லது. இந்த சமையல் முறை தொந்தரவு இல்லாதது. ஒரே சமயத்தில் வேறு சமையல் வேலைகளிலும் ஈடுபட ஏதுவானது. இருப்பினும் நீரில் கொதிக்க வைக்கும் செயல்முறையின்போது பல ஊட்டச்சத்துக்கள் தண்ணீரில் இழக்கக்கூடும். அதனால் காய்கறிகளை வேகவைத்த தண்ணீரை வீணாக்காமல் சூப் தயாரிக்கலாம். குழம்பில் ஊற்றிவிடலாம். அப்படி செய்யும்போது மட்டுமே ஊட்டச்சத்துக்களை தக்கவைத்துக்கொள்ள முடியும்.

நீரில் கொதிக்கவிட்டு வேகவைத்த காய்கறிகள் பெரும்பாலும் மென்மையாக மாறும். கொதிக்க வைக்கும்போது காய்கறிகளின் செல் சுவர்கள் உடைந்து அதன் இயற்கையான சுவை தன்மை வெளியேறக்கூடும். இருப்பினும் உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்ற மாவுச்சத்து நிறைந்த காய்கறிகளை நீரில் வேகவைப்பதே சரியானது. அவை ஜீரணிக்க எளிதாகவும் மாறும்.

**எந்த முறை அதிக ஊட்டச்சத்துக்களை தக்கவைக்கும்?**

இரண்டு சமையல் முறைகளும் கடினமான நார்ச்சத்துக்களை உடைப்பதன் மூலம் காய்கறிகள் எளிதில் ஜீரணிக்க உதவும். அதே வேளையில், நீராவி முறை அதிக நன்மை தரும். இது செரிமானத்திற்கு உகந்த சேர்மங்களை அப்படியே தக்கவைத்துவிடும். குறிப்பாக முட்டைக்கோஸ், காலிபிளவர் மற்றும் புரோக்கோலி போன்ற காய்கறிகளை நீராவியில் சமைப்பதே சிறந்தது. அவற்றை தண்ணீரில் வேகவைப்பது சில ஊட்டச்சத்துக்களை குறைத்துவிடும். ஆயுர்வேதத்தில் நீராவியில் சமைக்கும் முறையே சிறந்ததாக மதிப்பிடப்படுகிறது. இது உணவில் இருக்கும் உயிர் சக்தியை பாதுகாக்க உதவுகிறது. உணவை இலகுவாகவும், புத்துணர்ச்சியுடனும், அதிக ஆற்றலுடனும் வைத்திருக்கும்.

## இந்த திசை நோக்கி அமர்ந்து சாப்பிட்டால் நோய் தான் வரும்

சாப்பிடுதல் என்பது வெறும் வழக்கமான சம்பிரதாயம் அல்ல. இன்று உடம்புக்கு இந்த அளவு உணவு தேவை, அதனால் நீங்கள் அவ்வளவு சாப்பிடுகிறீர்கள். நாளை அவ்வளவு தேவைப்படாமல் இருக்கலாம். ஒருவர் சாப்பிட வேண்டும்தான், ஆனால் அந்த உணவு நமக்கு அளிக்கும் ஊட்டத்தில் மகிழ்ந்து நம் உயிருக்கும் உணவுக்குமான தொடர்பை நன்றியுடன் உணர்ந்து சாப்பிட வேண்டும்.

இது சாப்பிடுவதில் இருக்கும் இன்பத்தை குறைப்பதற்காக அல்ல. உணவை உண்பதில் உள்ள உண்மையான ஆனந்தமே, இன்னொரு உயிர் உங்கள் உயிருடன் ஒன்றி கலந்து நீங்களாகவே ஆகிறது என்பதை உணர்ந்து உண்பதுதான் என்கின்றனர் ஆன்மீகவாதிகள். யோக கலாச்சாரத்தில் எப்பொழுதும் உங்கள் கால்களை மடக்கி அமரவும், ஒரு சக்தி வடிவம் இருக்கும் திசைநோக்கி கால்களை நீட்டாதிருக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.



உணவு சாப்பிடுவதற்கென்று சில வரைமுறைகள் இருக்கின்றன. எந்த நேரத்தில் உணவு சாப்பிட வேண்டும், எந்த உணவை முதலில் பரிமாற வேண்டும், இலையை எவ்வாறு மூட வேண்டும் போன்ற பல விஷயங்களை இதில் கவனிக்க வேண்டும். அவ்வாறு உணவு சாஸ்திர முறைப்படி சாப்பிடும்போது குடும்பத்தில் செல்வ செழிப்பு, மகிழ்ச்சி போன்றவை தானாகவே ஏற்படும்.

சாப்பட்டினை நமக்கு யாராவது பரிமாற வேண்டும். இலையில் முதலில் காய்கறி, அப்பளம் போன்றவற்றை வைத்துவிட்டே சாதத்தை பரிமாற வேண்டும். எடுத்த உடனேயே சாதத்தை பரிமாறக்கூடாது. அதைப்போல வத்தல், கீரையை முதலில் பரிமாறக் கூடாது.

உணவினை எந்த திசை நோக்கி அமர்ந்து சாப்பிட வேண்டும் என்றும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்து கொண்டு உணவு உண்ணும் போது நமக்கு நன்மை பயக்கும். கிழக்கு நோக்கி அமர்ந்து சாபிட்டால், ஆயுள் வளரும். மேற்கு திசை நோக்கி அமர்ந்து சாப்பிட்டால், பொருள் சேரும். தெற்கு நோக்கி அமர்ந்து சாப்பிட்டால், புகழ் வளரும். வடக்கு நோக்கி அமர்ந்து சாப்பிடக்கூடாது. நோய்தான் வரும்.

பசிக்கும்போது மட்டுமே சாப்பிட வேண்டும். உணவை அளவுக்கு அதிகமாக சாப்பிடும்பொழுது நோய் சேரும். சாப்பிடுவதற்கு முன்பு கை, கால், வாய் ஆகியவற்றை நன்றாகக் கழுவிவிட்டு சாப்பிட அமர வேண்டும். சாப்பிடும்போது உணவில் மட்டுமே கவனம் இருக்க வேண்டும். வேறு வேலைகள் எதுவும் செய்துக்கொண்டே உணவை உண்ணக்கூடாது. குறிப்பாக செல்போன், டி.வி. பார்த்துக்கொண்டே சாப்பிடக்கூடாது. இது தரித்திரத்தை உண்டாக்கும் என்று சொல்லப்படுகிறது.

சாப்பிடும்பொழுது வீட்டின் கதவு மூடியிருக்க வேண்டும். வீட்டின் கதவை திறந்து வைத்துக்கொண்டு சாப்பிடக்கூடாது. சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமனத்தின்போதும் சாப்பிடக்கூடாது. இதுபோன்ற உணவு சாஸ்திரத்தை பின்பற்றி நீண்ட ஆயுள், செல்வ செழிப்பு பெற்று வாழலாம்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No




8122664699

## 8 கல்லூரிகளின் மாணவர்கள் தேர்தல் விழிப்புணர்வு நடைபயணம்



சென்னையில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 8 கல்லூரிகளின் மாணவர்கள் தேர்தல் விழிப்புணர்வு நடைபயணம் மேற்கொண்டனர்.

## என்.ஆர்.தனபாலன் ஆதரவு



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன் சந்தித்து தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஆதரவு அளித்தார்.

## புதிய பயணிகள் நிழல் கூடம் திறப்பு



சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி, கரிசல்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய பயணிகள் நிழல் கூடத்தை அருள்ராமதாஸ் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

## திடக்கழிவு மேலாண்மை செயல்பாடு



நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சி ஆகிய பகுதிகளில் வளம் மீட்பு பூங்கா மையங்களில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை, அமைச்சர் சாமிநாதன் பார்வையிட்டார்.

## சிதம்பரம் சப் கலெக்டர் கிஷன்குமாருக்கு பாராட்டு



கொத்தடிமைத் தொழிலாளர் மீட்பு பணியில் சிறப்பாக பணிபுரிந்த சிதம்பரம் சப் கலெக்டர் கிஷன்குமாருக்கு அமைச்சர் சி.வி.கணேசன் கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

## தமிழகம் முழுவதும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு



தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தமிழகம் முழுவதும் நேற்றுமுதல் விரிவுபடுத்தப்பட்டது. திருவள்ளூர் மாவட்டம் போளிவாக்கத்தில் காலை உணவு வழங்கலை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

## பொங்கல் கோல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



தியாகராய நகர் மத்திய மண்டல் பகுதியில் பொங்கல் கோல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் பரிசு வழங்கினார்.

## ஐஜேகே கட்சியின் மாநாடு



கடலூரில் நேற்று முன்தினம் நடந்த ஐஜேகே கட்சியின் மாநாட்டில் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் பேசினார்.

## புதுகை முத்தமிழ் சங்கம் முப்பெரும் விழா



புதுக்கோட்டை முத்தமிழ் சங்கத்தின் நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் விழாவில் கவிஞர் கே.எஸ் ரவிச்சந்திரன், இல.ரவி,எழுத்தாளர் குடந்தை பரிபூரணன் ஆகியோர் கலந்து கொண்டு பொன்னாடை அணிவித்து சிறுகதை நூல் பரிசளித்தனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கிய முதல்வர் ஸ்டாலின், வெப்பக் காப்பு பையில் வைக்கப்பட்ட உணவுக்கலன்களை வழங்கினார்.

## ரத்தன் டாடா உருவச் சிலைக்கு முதல்வர் ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை




ராணிப்பேட்டை சிப்காட் வளாகத்தில் டாடா மோட்டார்ஸ் ஜேஎல்ஆர் நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலை துவக்க விழாவில் டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா உருவச் சிலைக்கு முதல்வர் ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன்டாடா சன்ஸ் நிறுவனத் தலைவர் சந்திரசேகரன் உள்ளார்.

## "அம்மா பிரீமியர் லீக்" போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு



கரூரில் "அம்மா பிரீமியர் லீக்" போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் பரிசுகளை வழங்கினார்.

## ஆலோசனைக் கூட்டம்



சென்னை கமலாலயத்தில் நேற்று மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில், சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

## நலத்திட்ட உதவி



முதல்வர் ஸ்டாலின் 73வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நங்கநல்லூரில் நேற்று நடந்த விழாவில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

## முதல்வருடன் ஷெல்பி எடுத்து மகிழ்ந்த தூய்மைப்பணியாளர்கள்



காலை உணவுத் திட்டம் விரிவாக்க விழாவில், முதல்வருடன் ஷெல்பி எடுத்து மகிழ்ந்த தூய்மைப்பணியாளர்கள்.

## டாடா மோட்டார்ஸ் நவீன வாகன உற்பத்தி ஆலை



ராணிப்பேட்டை பனப்பாக்கத்தில் திறக்கப்பட்ட டாடா மோட்டார்ஸ் நவீன வாகன உற்பத்தி ஆலையை முதல்வர் ஸ்டாலின் சுற்றிப் பார்த்தார்.

## அரசு செவிலியர் பட்டமளிப்பு விழா



சென்னை எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் அரசு செவிலியர் பட்டமளிப்பு விழாவில், மாணவர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பட்டங்களை வழங்கினார். கூடுதல் தலைமைச் செயலாளர் செந்தில்குமார், துணை வேந்தர் நாராயணசாமி, மருத்துவ கல்வி, ஆராய்ச்சி இயக்குநர் சுகந்தி ராஜகுமாரி, இணை இயக்குநர் சங்கர் சண்முகம் உடன் உள்ளனர்.

## தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் துவக்கம்



தூத்துக்குடி மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு நேற்று காலை உணவு திட்டத்தை கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில் அமைச்சர் கீதாஜீவன் துவக்கி வைத்தார்.

## கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி



சென்னை தியாகராயநகரில் நேற்று கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின நிகழ்ச்சியில் அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## தமிழக வேளாண் விஞ்ஞானி ராமசாமிக்கு பத்மஸ்ரீவிருது




தமிழக வேளாண் விஞ்ஞானி ராமசாமிக்கு பத்மஸ்ரீவிருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி கவர்னர் மாளிகையில் அவருக்கு நடந்த பாராட்டு விழாவில் ஆளுநர் ரவி பாராட்டினார்.




## ஸ்ரீ வேணுகோபால சுவாமி கோவில் கும்பாபிஷேகம்



**வந்தவாசி, பிப் 10:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த விழுதுபட்டு கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீவேணுகோபால சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. முதற்கால பூஜை, இரண்டாம் கால பூஜைகள் நடைபெற்று, கலச நீருக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் யாக சாலை பூஜைகள் நடைபெற்றன.

பிறகு மேளதாளத்துடன் புனித நீர் கோபுர கலசத்தில் ஊற்றப்பட்டு மகா கும்பாபி ஷேகம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஸ்ரீபெரும்புதூர் எம்பார் ஜீயர் வருகை தந்து மங்களாசாசனம் செய்து ஆசியுரை நிகழ்த்தினார்.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் கோவில் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்



சென்னை கமலாலயத்தில் பாஜக தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் சந்தோஷ் தலைமையில் நடந்த மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முருகன், தமிழிசை,வானதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சுற்றுலா: வரலாறும் ஆன்மீகமும் இணையும் விழுப்புரம்: காண வேண்டிய இடங்கள்!

தமிழ்நாட்டின் வரலாறு, கலாச்சார வளம் மற்றும் அமைதியான மாவட்டமாக விழுப்புரம் மாவட்டம் பார்க்கப்படுகிறது. சென்னையையும் புதுச்சேரியும் இணைக்கும் முக்கிய பகுதியாக இருக்கும் விழுப்புரத்தில் பழமையான கோவில்கள், கம்பீரமான கோட்டைகள், ஆன்மீக இடங்கள் ,இயற்கை அழகு மற்றும் தனித்துவமான கைவினை கலைகள் கொண்ட சுற்றுலாத்தலமாக உள்ளது. அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலா தலங்களை பற்றி இப்பதிவில் காண்போம்.



### 1. வரலாற்றுச் சிறப்புமிக்க செஞ்சி கோட்டை

பயணிகளை ஈர்க்கும் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் உள்ள செஞ்சி கோட்டையை 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்தது கிழக்கின் ட்ராய் என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்படும் இந்த கோட்டை சோழர்,விஜயநகர பேரரசர், மராத்திய மன்னர் சிவாஜி மற்றும் ஆற்காடு நவாபுகளின் வரலாறை தாங்கி நிற்கிறது.

ராஜகிரி, கிருஷ்ணகிரி, மற்றும் சந்திரகிரி என்ற மூன்று மலைகளை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோட்டையில் உள்ள கல்யாண மஹால் கோட்டையின் கட்டிடக்கலையை பறைசாற்றுகிறது .மேலும் சர்க்கரை குளம் மற்றும் செட்டிகுளம் தடாகங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன.

### 2. திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோயில்

விழுப்புரத்தில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருக்கோவிலூர் தமிழ்நாட்டின் மூன்றாவது உயரமான கோபுரத்தை கொண்டுள்ளது. கோவிலுக்கு செல்லும் வழியெங்கும் காணப்படும் பசுமை நிறைந்த வயல்கள் மன அமைதியை கொடுக்கிறது.

### 3. ஆன்மீகத்தின் அமைதி மங்கள புத்த விஹார்

வானூர் தாலுகா புதுச்சேரிக்கு அருகில் புளிச்சப்பள்ளம் என்ற இடத்தில் இருக்கும் மங்கள புத்த விகார், ஆன்மீக அமைதியையும் புத்த மதத்தின் எளிமையான அழகையும் கொடுக்கிறது. தமிழ்நாடு சுற்றுலா ஆணையத்தின் முக்கிய சுற்றுலா இடங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள புத்த விகார் புத்த மதத்தின் வரலாறு மற்றும் தத்துவங்களை தெரிந்து கொள்ள உதவுவதோடு தியானம் செய்யவும் வாய்ப்பு அதிகம் இருப்பதால் மன நிம்மதி தரும் இடமாக இருக்கிறது. இதற்கு அருகில் ஆரோவில் மற்றும் புதுச்சேரி கடற்கரை உள்ளது குறிப்பிடத்தக்கது.



### 4. பழமையின் புனிதம் பனையபுரம் சிவன் கோயில்

தற்போது கும்பாபிஷேகம் கண்டுள்ள விக்கிரவாண்டி அருகில் உள்ள பனையபுரம் பனங்காட்டீஸ்வரர் என்ற நேத்ரோதாரண்யேஸ்வரருக்கு சித்திரை மாதம் சூரியக்கதிர்களால் அபிஷேகம் நடைபெறும் கோவில் என்ற சிறப்பு பெற்றது. 276 பாடல்பெற்ற சிவன் கோவில்களில் பனைய புரமும் ஒன்று என்பதோடு மன அமைதியை கொடுக்கும் தலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 5. அருளை வாரி வழங்கும் அங்காளம்மன்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு 32 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் நடைபெறும் விழாக்கள் மற்றும் பூஜைகள் குறிப்பாக அமாவாசை ஊஞ்சல் உற்சவம் ஆன்மீகப் பயணிகளின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது .

### 6. பூவரசன் குப்பம் லட்சுமி நரசிம்மர்

தற்போது திருவிழா நடைபெறும் ஏழாம் நூற்றாண்டை சேர்ந்த பல்லவர்களால் கட்டப்பட்ட பூவரசங்குப்பம் லட்சுமி நரசிம்மர் கோவில் அனைத்து மக்களாலும் விரும்பப்படும் ஒரு கோவிலாக இருக்கிறது. மேற்கூறிய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளடக்கிய அனைத்து கோவில்கள் மற்றும் சுற்றுலா தலங்கள் அனைத்துமே காண்பவர் மனதில் அழியா இடத்தை பெறும் என்பதில் ஐயமில்லை.

## வேலைவாய்ப்பு கார்னர்

# பொதுத்துறை வங்கியில் வேலை: 350 காலிப்பணியிடங்கள்: யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?



நாட்டில் உள்ள பொதுத்துறை வங்கிகளில் ஒன்று சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா. மும்பையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த வங்கியின் நாடு முழுவதும் உள்ளன. இந்த வங்கியில் காலியாக பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது பற்றிய விவரங்கள் வருமாறு:

பணி நிறுவனம்: சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா

காலி இடங்கள்: 350

பதவி பெயர்: மார்க்கெட்டிங் ஆபீசர் (நிலை 1) மற்றும் பாரின் எக்ஸ்சேஞ்ச் ஆபீசர் (நிலை I1l)

கல்வி தகுதி: பட்டப்படிப்பு, எம்.பி.ஏ., பி.ஜி.டி.பி.ஏ./பி.ஜி.டி.பி.எம்./பி.ஜி.பி.எம்./பி.ஜி.டி.எம். பணி அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.

வயது: 1-1-2026 அன்றைய தேதிப்படி பாரின் எக்ஸ்சேஞ்ச் ஆபீசர் பதவிக்கு 25 முதல் 35 வயது வரையும், மார்க்கெட்டிங் ஆபீசர் பதவிக்கு 22 முதல் 30 வயது வரையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 வயது வரை வயது தளர்வு உண்டு. மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் வரை வயது தளர்வு அனுமதிக்கப்படும்.

தேர்வு முறை: ஆன்லைன் எழுத்து தேர்வு, நேர்காணல்

தேர்வு மையம் (தமிழ்நாடு): சென்னை, மதுரை, திருச்சி, கோவை, வேலூர்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 15-2-2026

விண்ணப்பிப்பது எப்படி: https://www.centralbankofindia.co.in/en/recruitments

## ஊராட்சி செயலாளர்களை தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தும் தி.மு.க: எடப்பாடி பழனிசாமி

**சென்னை, பிப்.10:**

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட திட்ட அலுவலர்கள் ஆணையின்படி, மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளில் பணிபுரியும், ஊராட்சி செயலாளர்கள்' மற்றும் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தில்' பணிபுரியும் பணித்தளப் பொறுப்பாளர்கள்' மற்றும் பணியாளர்கள்' வீடு வீடாகச் சென்று, திமுக ஆட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து வருவது சட்ட விரோதமானது. திமுக அரசுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபடும் ஊராட்சி செயலாளர்கள், 125 நாள் வேலை உறுதித் திட்ட பணித்தளப் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். மேலும், கழக ஆட்சி அமைந்தவுடன் சட்டத்திற்குப் புறம்பாக செயல்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கிறேன். கிராமப்பஞ்சாயத்தின் வளர்ச்சிக்காக பணிபுரியும் கிராம செயலாளர்கள் மற்றும் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பணித்தளப் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்களை, திமுக அரசு தங்களது சுய லாபத்திற்காக, தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு எனது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், தேர்தல் பிரச்சார வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## மதுபோதையில் கார் ஓட்டி பைக் மீது மோதல்: வாலிபர் கைது

**தூத்துக்குடி, பிப்.10:**

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தூத்துக்குடி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று கார் மற்றும் இருசக்கர வாகனம் விபத்துகுள்ளானதில் இருசக்கர வாகனத்தில் வந்தவர் காயமடைந்தார். இதுகுறித்து எட்டையபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மணிகண்டன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்.

அதில் கார் ஓட்டுநரான கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மதன்குமார் (வயது 28) என்பவர் மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கி, இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு விபத்தை ஏற்படுத்தி காயம் ஏற்படுத்தியது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் மதுபோதையில் வாகனத்தை இயக்கி காயம் ஏற்படுத்திய நபர் மீது கொலை அல்லாத மரணம் விளைவிக்க முயற்சித்தல் வழக்காக பதிவு செய்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதை தவிர்த்து தங்களுக்கும், தங்களால் மற்றவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் எனவும், அதனை மீறி இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் விஜய் பிரசாரக் கூட்டத்துக்கு அனுமதி! நிபந்தனைகள் என்னென்ன?

**சென்னை, பிப்.10:**

சேலத்தில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பங்கேற்கும் பிரசாரக் கூட்டத்துக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டி நெடுஞ்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் கூட்டம் நடத்த அனுமதி கோரி, தவெக மத்திய மாவட்டச் செயலாளர் தமிழன் ஆ.பார்த்திபன் தலைமையில் தவெக நிர்வாகிகள், காவல் ஆணையர் அனில்குமார் கிரியிடம் கடந்த புதன்கிழமை மனு அளித்தனர்.

ஆனால், அரசு வழிகாட்டுதல்படி வழிமுறைகள் குறிப்பிடப்படவில்லை என்று தெரித்து அந்த மனு காவல் துறை சார்பில் நிராகரிக்கப்பட்டது.

முன்னதாக, சேலம் மகுடஞ்சாவடி பகுதியில் உள்ள காளிகவுண்டம்பாளையம் பகுதி திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு அனுமதி கோரி, மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் ஒன்றியச் செயலாளர் கார்த்தி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மனு அளித்திருந்தார். இந்த மனு காவல் துறை




பரிசீலனையில் இருந்தது. இதனிடையே, சீலநாயக்கன்பட்டி தாளமுத்து நடராஜன் திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்தை நடத்த அனுமதி கேட்டு, சேலம் மாநகர காவல் ஆணையரிடம் தவெக நிர்வாகிகள் மீண்டும் மனு அளித்தனர்.

அந்த மனுவில், விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்தில் 5 ஆயிரம் மட்டுமே கலந்துகொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், சேலம் சீலநாயக்கன்பட்டி நெடுஞ்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் தவெக தலைவர் விஜய்யின் பிரசாரக் கூட்டத்தை பல்வேறு நிபந்தனைகளுடன் நடத்த, சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

5000 பேருக்கு மேல் பங்கேற்க மாட்டார்கள் என தவெகவினர் உத்தரவாதம் அளித்த நிலையில், காவல் துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குழந்தைகள் மற்றும் கருவுற்றப் பெண்கள் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது, அனைவருக்கும் டோக்கன் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சேலம் மாநகர காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். வரும் பிப். 13 ஆம் தேதி நடைபெறும் கூட்டத்துக்கு பகல் 12 மணி முதல் 3 மணி வரை மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

## விஜய்யால் திமுக கூட்டணிக்குதான் பாதிப்பு: டிடிவி தினகரன்

**சென்னை, பிப்.10:**

தேர்தலில் விஜய்யால் தி.மு.க கூட்டணிக்குதான் பாதிப்பு ஏற்படும் என்று அமமுக பொதுச்செயலர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தவெகவால் பல அரசியல் கட்சிகளுக்கு பாதிப்பு இருக்கும். இது 2006ல் விஜயகாந்த் வருகையால் ஏற்பட்ட பாதிப்பைவிட அதிகமாகவே இருக்கும். இது திமுக கூட்டணிக்கு மிகப் பெரிய பாதிப்பாகவும், அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணிக்கு சாதகமாகவும் அமையும். அதனால்தான் நான் விஜய்யை வரவேற்கிறேன்.

தமிழகம் தற்போது போதை வஸ்துக்களின் சர்வதேச சந்தையாகவும், சர்வதேச துறைமுகமாகவும் மாறிவிட்டது. பள்ளி மாணவனிடன் போதைப் பொருள் இருக்கிறது. காவல்துறையினரே போதை விற்பனை செய்கின்றனர். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நாங்கள் தனித்துப் போட்டியிட்டதால், அது திமுகவிற்கு சாதகமாக போனது. இம்முறை அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி அமமுக இணைந்துள்ளதால் அந்த வாய்ப்பு திமுகவிற்கு கிடைக்காது.

எனவே, வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் என்டிஏ கூட்டணி அதிமுக தலைமையில், 200 இடங்களில் வெற்றி பெற்று அம்மாவின் ஆட்சி அமையும். கடந்த 10 ஆண்டுகளாக திமுக கூட்டணி ஒற்றுமையாக இருப்பது போல் வெளியில் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பது தற்போது வெட்ட வெளிச்சமாகி வருகிறது. கொள்கைக்கூட்டணிகொள்கைக் கூட்டணி என்கிறார்கள்.

கொள்கை ஒன்றாக இருந்தால் அவர்களுக்குத் தனித்தனி கட்சித் தேவை இல்லை. காங்கிரஸை எதிர்த்துதான் திமுக உருவாக்கப்பட்டது.

அதுபோல் கேரளத்தில் கம்யூனிஸ்டும் காங்கிரஸூம் நேரடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இவர்களுக்குள் ஒற்றுமை என்பது இல்லை என்று கூறினார்.

## திருச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்திய 5 மாத குழந்தை பலி

**மணப்பாறை, பிப்.10:**

திருச்சி அருகே தடுப்பூசி செலுத்திய 5 மாத குழந்தை இறந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம் புத்தாநத்தம் அருகே உள்ள கொன்னம்பட்டியை சேர்ந்தவர் சிவக்குமார். இவரது 5 மாத ஆண் குழந்தைக்கு குளத்துப்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி போட்டுள்ளார். பின்னர் வீட்டுக்கு வந்த சிறிது நேரத்தில் அந்த குழந்தைக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிவக்குமார் குழந்தையை உடனடியாக மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்து மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதையடுத்து குழந்தையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக புத்தாநத்தம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, குழந்தை தடுப்பூசி செலுத்தியதால் தான் இறந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என விசாரணை நடத்தி வருகின்றனர்.

கரூர் குழந்தை பலி

இதேபோல் கடந்த 2-ந்தேதி கரூர் சின்னியம்பாளையம் ஆலமரத்துப்பட்டியை சேர்தத கட்டிட தொழிலாளியான சுரேஷ் (வயது 32) எனபவரது மனைவிகக்கு பிறந்து 50 நாட்களான குழந்தை மதுஷாவுக்கு அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்தி உள்ளனர்.

பின்னர் சுரேஷ் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் திருச்சி ஸ்ரீரங்கம் தசாவதார சன்னதியில் உள்ள தனது மாமியார் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தபோது, நள்ளிரவில் குழந்தை மதுஷாவிற்கு திடீரென முக்கில் இருந்து ரத்தம் வழிந்தது. ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை இறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்களின் வாழ்க்கையை நசுக்கிவிட்டு இளைஞர் அணி மாநாடா?: தமிழிசை

**சென்னை, பிப்.10:**

டி.என்.பி.எஸ்.சி. 2, 2ஏ தேர்வுகளில் குளறுபடி ஏற்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தி.மு.க. ஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம் என்று தமிழிசை சுவுந்தரராஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தெலுங்கானா ஆளுநரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான தமிழிசை சுவுந்தரராஜன் தனது எக்ஸ் தளப்பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த பதிவில், “திமுக மாடல் அரசாங்கம் முற்றிலும் நிர்வாக சீர்கேட்டினால் நிலை குலைந்து போயிருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு உதாரணம்... 9000 டிஎன்பிஎஸ்சி தேர்வர்களின் கனவு இங்கே நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது... இளைஞர்களின் வாழ்க்கை நசுக்கி விட்டு இளைஞர் அணி மாநாடு நடத்துவது தான் திமுகவின் அரசியல் நாடகம்.. பல இடங்களில் சென்டர் ஒதுக்கப்படாமல் போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் சில இடங்களில் தேர்வு எழுத ஆரம்பித்து விட்டார்கள்.. இந்த குளறுபடி இந்த ஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம்.. வாழ்க்கைப் போராட்டமாக இருக்கும் இந்த இளைஞர்கள்.. விடிவு காலம் வேண்டும் என்று கடுமையாக தயாரித்து... தேர்வுக்கு வந்தால்.. தேர்வு எழுதுவதே போராட்டமாக வெடித்திருப்பது வேதனையிலும் வேதனை உடனே இதற்கு அரசு நடவடிக்கை தேவை... ஆயிரக்கணக்கானோர் தங்கள் நேரத்தையும் பொருளையும் செலவிட்டு. ஆர்வமுடன் வந்தவர்கள் அலை கழிக்கப்பட்டிருக்கிறார்கள்... நியாயமாக சரியான திட்டமிடலுடன் தேர்வுகள் நடைபெற வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.. மறுபடியும் தேர்வு அறிவிக்கப்படும் பொழுது எந்த குளறுபடியும் இல்லாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமை...,” என குறிப்பிட்டுள்ளார்.

# 247 கைவினைக் கலைஞர்களுக்கு பூம்புகார் விருது: அமைச்சர் அன்பரசன் வழங்கினார்

**சென்னை, பிப்.10:**

தமிழகத்தின் 247 சிறந்த கைவினைஞர்களுக்கு கலைவாணர் அரங்கில், தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பூம்புகார் விருதுகளை வழங்கினார் மற்றும் பூம்புகார் நிறுவனத்தின் சிறப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார்.




கைவினைப்பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருதுக்காக இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த குழுவினரை சிறப்பிக்கும் நோக்கில் "குழு உற்பத்தி விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது 3 குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு குழுவிற்கு ரூ.40 ஆயிரம் - ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பட்டயம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல கலைப்படைப்புகள் பெரும்பாலும், அலங்காரம் சார்ந்தோ அல்லது மதம் சார்ந்தோ அமைகின்றன. எனவே பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், "பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஆண்டுதோறும் 3 கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.40 ஆயிரம்- ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பட்டயம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

2025-26ம் ஆண்டிற்கான "பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது" தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த 16 வகையான கைத்திறன் தொழிலில் 44 பெண் கைவினைஞர்கள் உட்பட 85 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு வரை பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதின் ரொக்க பரிசு ரூ10,000 மற்றும் வெள்ளிப்பதக்கம் 5 கிராமாக வழங்கப்பட்டிருந்தது.

150 கைவினைஞர்கள்

இவ்வாண்டு முதல் இவ்விருதில்தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கைவினைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பரிசாக ரூ.20,000-, 50 கிராம் வெள்ளிப்பதக்கமும் ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# க்ரைம் கார்னர்

## நெல்லையில் வீட்டில் பிரசவம் பார்த்ததால் குழந்தை இறந்தது - தந்தையை கைது செய்த போலீஸார்

**மேலப்பாளையம், பிப்.10:**

மேலப்பாளையத்தில் வீட்டில் பிரசவம் பார்த்ததில் குழந்தை இறந்து பிறந்த விவகாரத்தில் நசிம் உசேன் (35) என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

மேலப்பாளையம் தெற்கு தைக்கா தெருவை சேர்ந்த நியாஸ் அலி மகன் நசிம் உசேன். இவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். அவருக்கு பிரசவ தேதி நெருங்கிய நிலையில், அவரை மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து வருமாறு நிலைய மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார். ஆனால், ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மனைவியை அழைத்துச் செல்லாமல், நேற்று முன்தினம் இரவில் வீட்டில் வைத்து நசிம் உசேன் பிரசவம் பார்த்துள்ளார். இதில், அவரது மனைவிக்கு ஆண் குழந்தை இறந்த நிலையில் பிறந்தது. "சிசுவின் உடலை காட்டு ஜும்மா பள்ளிவாசலில் அடக்கம் செய்துள்ளனர்" என, மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் சுமதி, மேலப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்கு பதிந்து, நசிம் உசேனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சென்னை: மலையாள நடிகையிடம் ஓட்டல் ஊழியர் அத்துமீறல்

கேரள மாநிலம் எர்ணாகுளத்தைச் சேர்ந்த 26 வயதான மலையாள நடிகை ஒருவர். சென்னை தி.நகர் தாமஸ் சாலையில் உள்ள ஹோட்டலில் ஒரு மாதம் தங்குவதற்காக அறை எடுத்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, நடிகை உணவு ஆர்டர் செய்ய முயன்ற போது. அங்கிருந்த இண்டர்காம் வேலை செய்ய வில்லை எனத் தெரிகிறது.

இது குறித்து நிர் வாகத்திடம் புகார் அளித் ததைத் தொடர்ந்து, ஆலந்துாரைச் சேர்ந்த 20 வயதான ஊழியர் ஒருவர் இண்டர்காமைச் சரிசெய்ய நடிகையின் அறைக்குச் சென்றுள்ளார். இண்டர்காமை சரி செய்த பின், அந்த ஊழியர் நடிகையிடம், 'நீங்கள் மலையாள நடிகை தானே? என்று கேட்டு அவரைத் தொட்டு தொல்லை கொடுத்ததாகத் தெரிகிறது. அதிர்ச்சியடைந்த நடிகை, உடனடியாக காவல் கட்டுப்பாட்டு - அறைக்குத் தகவல் அளித்தார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாம்பலம் போலீஸார். அந்த ஊழியரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அதில், அவர் சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் படித்துக் கொண்டு, பகுதி நேரமாக இந்த ஹோட்டலில் பணியாற்றி வருவது தெரியவந்தது. மாணவனின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, இனி இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என எச்சரித்த போலீஸார். தேவைப்படும் போது விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என எழுதி வாங்கிக் கொண்டு அந்த ஊழியரை அனுப்பி வைத்தனர்.

## சென்னை: பப்பில் கந்த சஷ்டி பாடல் - நட்சத்திர ஓட்டல் மீது புகார்

சென்னை, கிண்டியில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் செயல்படும் பப்பில், கடந்த சில நாட்களுக்கு முன்பு மதுவிருந்தின் போது பக்திப் பாடலான முருகப்பெருமானின் கந்த சஷ்டி கவசம் இசைக்கப்பட்டுள்ளது. அப்போது, அங்கிருந்த மதுப் பிரியர்கள், அந்தப் பாடலுக்கு போதையில் குத்தாட்டம் போட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, பாரத் இந்து முன்னணியினர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த மனுவில், "முருகப் பெருமானின் கவசமாகப் போற்றப்படும் புனிதமான மந்திரத்தை, மதுபான விடுதியில் ஒலிக்கச் செய்தது கடும் கண்டனத்துக்கு உரியது. மது அருந்திய பெண்கள் மற்றும் ஆண்கள் இந்தப் பாடலுக்கு கேலியாக நடனமாடியது முருகப் பெருமானையும், இந்து மத நம்பிக்கைகளையும் இழிவுபடுத்தும் செயலாகும். இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே கிண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட ஓட்டல் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## சிஎஸ்கே திருவள்ளூர் இன்டர் காலேஜ் டி20: ஜெயா கல்லூரி சாம்பியன்

**திருவள்ளூர், பிப்.10:**

சிஎஸ்கேதிருவள்ளூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 202526 ஆம் ஆண்டுக்கான இன்டர் காலேஜ் டி20 கிரிக்கெட் போட்டியில், ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இறுதிப் போட்டியில் மரி கிரெகோரியோஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஜெயா கல்லூரிகள் மோதின. முதலில் பேட்டிங் செய்த மரி கிரெகோரியோஸ் கல்லூரி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 118 ரன்கள் எடுத்தது. முகமது ஆர்யான் சாஜித் 41 ரன்களுடன் அதிகபட்ச ஸ்கோராக இருந்தார். எஸ். மகேஷ் 27 ரன்கள் சேர்த்தார். டி.கே. தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 30 ரன்கள் எடுத்து அணிக்கு உதவினார்.

119 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய ஜெயா கல்லூரி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 14.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 119 ரன்கள் எடுத்து வெற்றியை எளிதாக பெற்றது. நயீஃப் அகமது 56 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். எஸ். ஜூடியன் பென்ஹர் 46 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். கடந்த சீசனில் இரண்டாம் இடம் பிடித்திருந்த ஜெயா கல்லூரி, இந்த சீசனில் முதல் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது. தனிநபர் விருதுகளில், ஸ்ரீஹெர் கல்லூரியின் எஸ். ஸ்ரீச்சரண் 151 ரன்கள் எடுத்து அதிக ரன்கள் எடுத்த வீரராக தேர்வானார். மரி கிரெகோரியோஸ் கல்லூரியின் வி. மேத்யூ ரிச்சர்ட் ஜோன்ஸ் 9 விக்கெட்டுகள் வீழ்த்தி அதிக விக்கெட் எடுத்த வீரராக விளங்கினார். மக்னா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தலைவர் ஜே. தேவதாஸ் சகாயம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் என். ஸ்ரீனிவாச ராவ், போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற வீரர்கள் மற்றும் போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## டி20 உலகக் கோப்பை: ஸ்காட்லாந்துக்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவு 35 ரன் வித்தியாசத்தில் வெற்றி

**மும்பை, பிப்.10:**

டி20 உலகக் கோப்பை 2-ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 35 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. இந்தப் போட்டியில் அசத்தலாக பேட்டிங் செய்த மே.இ.தீ. அணி வீரர் ஷிம்ரோன் ஹெட்மயர் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். டாஸ் வென்ற ஸ்காட்லாந்து பந்துவீச்சைத் தேர்வு செய்ததால், முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் 182 ரன்கள் எடுத்தது. இதில் அதிகபட்சமாக ஹெட்மயர் 64 ரன்கள் எடுத்தார். அடுத்து விளையாடிய ஸ்காட்லாந்து அணி 18.5 ஓவர்களில் 147 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதில் அதிகபட்சமாக கேப்டன் 42 ரன்கள் எடுத்தார். பந்துவீச்சில் அசத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ரொமாரியோ ஷெப்பர்ட் 5 விக்கெட்டுகளும் ஜேசன் ஹோல்டர் 3 விக்கெட்டுகளும் எடுத்தார்கள். இந்த வெற்றியுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 புள்ளிகளுடன் கூடுதலாக +1.750 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 5 விக்கெட்டுகள் வீழ்த்திய ரொமாரியோ ஷெப்பர்ட்டுக்கு ஆட்ட நாயகன் விருது அளிக்காமல் ஹெட்மயருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் ரொமாரியோ ஷெப்பர்ட்டு ஹாட்ரிக் விக்கெட் எடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

# பார்வை மாற்றுத் திறனாளியான பாரா தடகள வீராங்கனைக்கு உதயநிதி பணி ஆணை

**சென்னை, பிப்.10:**

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தைச்சேர்ந்தவர் பார்வை மாற்றுத்திறனாளி கா.சிவகாமி, தனது சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்தவர் ஆவார். இவரும், இவரது சகோதரிகள் சேர்த்து 6 பேரும் பிறந்ததில் இருந்தே பார்வை மாற்றுத் திறனாளிகள் ஆவர். பார்வை மாற்றுத்திறனாளியான கா.சிவகாமி பாரா தடகள பிரிவில் குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார். தொடர்ந்து தேசிய அளவிலான பாரா தடகள போட்டிகளிலும் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளார். மேலும் ஆசிய, சர்வதேச அளவிலான பாரா தடகள போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.



கடந்த 4 நாட்களுக்கு முன்னர் இவர் சென்னை தலைமைச் செயலகத்தில் தான் வென்ற பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேரில் சந்தித்து தனது குடும்பச் சுழலை தெரிவித்து பணி வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, முதலமைச்சரின் உத்தரவின்பேரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் உடனடியாக பணி வழங்க நடவடிக்கைமேற்கொள்ளுமாறு துணை முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

அதன்படி, உதயநிதி ஸ்டாலின் திருச்சியில் கடந்த 6ந் தேதி அன்று அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பாரா தடகள வீராங்கனை பார்வை மாற்றுத்திறனாளி கா.சிவகாமிக்கு பாரா தடகள வருகை பயிற்றுநர் பணிக்கான பணிநியமன ஆணையினை வழங்கினார்.

இந்நிகழ்வில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வேலூர் மோர்தானா அணை வெள்ளி விழா நினைவுத்தூண்: அமைச்சர் துரைமுருகன் திறந்தார்

**வேலூர், பிப்.10:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் மோர்தானா அணை திறக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, வெள்ளி விழா நினைவுத்தூணை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அணைதளத்தில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்ததாவது:

இந்தப் பகுதி ஒரு வறட்சியான பகுதி. இந்த அணை கட்டப்பட்டதன் மூலம் அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட 15 ஏரிகள் இந்த அணையின் உபரி நீரின் மூலம் நீர் பாசன வசதி பெறுகிறது. மோர்தானா அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் செல்லும் கால்வாய்களில் ஒரு சில இடங்களில் கால்வாயை உடைத்து அவர்களாகவே அவர்கள் ஊருக்கு தண்ணீரை திருப்பி கொள்கின்றனர். அது தவறான நடவடிக்கை. ஒரு அணை கட்டப்படும் பொழுதே அதன் உபரி நீர் எந்தெந்த ஏரிகளுக்கு செல்ல வேண்டும் என்ற வரைபடம் உள்ளது. அப்படி ஏதாவது ஊருக்கு தண்ணீர் தேவைப்பட்டால் நிர்வாகத்திடம் சொல்லுங்கள் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அணை கட்டப்பட்டதன் காரணமாக குடியாத்தம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நீர் ஆதாரம் எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் உள்ளது.

இது மட்டுமல்ல குடியாத்தம் நகரில் கவுண்டன்ய ஆறு சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆற்றின் குறுக்கே பாலம் மற்றும்சுற்றி நடைப்பாதை போன்ற வசதிகள் ஏற்படுத்த ப்பட்டுள்ளது.

கலைஞரின் ஆட்சி காலத்தில் தான் சுமார் 90 அணைகள் தமிழ்நாட்டில் கட்டப்பட்டது. இப்பொழுது கூட அணை கட்ட வேண்டிய இடங்களில் எல்லாம் கட்டப்பட்டு விட்டது. நம் வேலூர் மாவட்டத்தில் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் மேலரசம்பட்டு அணை மட்டுமே கட்ட வேண்டிய நிலையில் உள்ளது. அதுவும் விரைவில் கட்டப்படும்.

இந்த அணை கட்டுவதற்கு கூட நான் அமைச்சராக இருந்த பொழுது நிதி எல்லாம் ஒதுக்கப்பட்டது. ஒரு சில தனியார் வழக்கு தொடர்ந்ததன் காரணமாக அந்த பணிகள் தடைபட்டன. இப்போது அந்த தடைகள் எல்லாம் அகற்றப்பட்டு முதலமைச்சரால் விரைவில் அந்த அணை கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.

பேரணாம்பட்டு பகுதியில் உள்ள பத்தலபள்ளி பகுதியிலும் ஒரு அணை கட்டுவதற்கான அனைத்து வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்பும் விரைவில் வெளியிடப்படும். இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் பொதுப்பணித் திலகம், ஒன்றியக்குழுத் தலைவர்கள் சத்யானந்தம், ரவிச்சந்திரன், வேல் முருகன், சித்ரா ஜனார்த்தனன், கண்காணிப்புப் பொறியாளர் பவழக்கண்ணன், செயற்பொறியாளர் வெங்கடேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிரீன்வேஸ் ரோடு - மந்தைவெளி இடையே மெட்ரோ ரயில் சுரங்கம் தோண்டும் பணி நிறைவு

**சென்னை, பிப்.10:**

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் பசுமைவழிச்சாலை மற்றும் மந்தைவெளி இடையே சுரங்கப்பாதை அமைக்கும் பணியை வெற்றிகரமாக பணியை முடித்து மந்தைவெளி நிலையத்தை வந்தடைந்தது.





சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம்2 வழித்தடம் 3-ல் கிரீன்வேஸ் சாலை மற்றும் மந்தைவெளி நிலையம் இடையே சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் 2023 செப்டம்பரி-ல் தொடங்கப்பட்டன. இந்த சுரங்கப்பாதை பணிகளுக்காக "நொய்யல்" மற்றும் "வைகை" என்று பெயரிடப்பட்ட இரண்டு சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

"வைகை" சுரங்கம் தோண்டும் இயந்திரம், கிரீன்வேஸ் சாலை நிலையத்திலிருந்து (UPLINE) சுரங்கம் தோண்டும் பணியைத் தொடங்கி, 2025 அக்டோபர் 18 அன்று சுரங்கம் அமைக்கும் பணியை முடித்து மந்தைவெளி நிலையத்தை வந்தடைந்தது. 'நொய்யல்' சுரங்கம் தோண்டும் இயந்திரம் கிரீன்வேஸ் சாலை நிலையத்திலிருந்து (DOWNLINE) 763 மீட்டர் நீளத்திற்கு சுரங்கம் தோண்டும் பணியைத் தொடங்கி, நேற்று (7ந் தேதி), வெற்றிகரமாக சுரங்கம் அமைக்கும் பணியை முடித்து மந்தைவெளி நிலையத்தை வந்தடைந்தது.

இந்நிகழ்வை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர்கள் டி.லிவிங்ஸ்டோன் எலியேசர் (வடிவமைப்பு), எஸ்.அசோக் குமார் (வழித்தடம்), பொது மேலாளர்கள் ஆண்டோ ஜோஸ் மேனாச்சேரி (சுரங்கப்பாதை கட்டுமானம்), ரவிசந்திரன் (சுரங்கப்பாதை கட்டுமானம்), டிஆர்இ ஆலோசகர் சுப்ரமணியன், லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் திட்ட இயக்குநர் லட்சுமி பிரசாத், திட்ட மேலாளர் அஹ்மத், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், லார்சன் & டூப்ரோ நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர்.

### வணிகச் செய்திகள்

## துபாய் நகைக் கடை பகுதியில் உலகின் முதல் தங்கச் சாலை

**துபாய், பிப்.10:**

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் கோல்ட் மாவட்டம் கோல்ட் சவுக் பகுதியில் 1,000-க்கும் மேற்பட்ட தங்க நகைக் கடைகள் அமைந்துள்ளன. இதன் அருகில் உள்ள தியரா பகுதியிலும் தங்கம் தொடர்பான வர்த்தகம் தான் நடைபெறுகிறது. துபாய் வர்த்தகம் மற்றும் பாரம் பரியத்தில் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 2024-25-ம் நிதியாண்டில் ஐக்கிய அரபு அமீரகம் 53.41 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.4 லட்சத்து 84 ஆயிரம் கோடி) மதிப்பிலான தங்க நகைகளை ஏற்றுமதி செய்துள்ளது. இது தவிர முதலீடு சேவைகள் நிறுவனங் கள் மற்றும் ஆடம்பர பொருட்கள் விற்பனையும் இங்கு நடைபெறுகிறது. இந்தியா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந் து, ஹாங்காங், துருக்கி உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து தங்கநகை வியாபாரிகளும், சுற்றுலாப் பயணி களும் வந்து செல்லும் இப்பகுதியில் தங்கத்தில் சாலை அமைக்கும் திட்டத்தை துபாய் அதிகாரிகள் அறிவித்துள் ளனர். சர்வதேச பார்வையாளர்கள், முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாலை அமைப்பதற்கான கட்டுமான விவரங் கள், காலக்கெடு ஆகியவை படிப்படியாக அறிவிக்கப்பட வுள்ளன. இங்கு தங்கச் சாலை அமைக்கப்பட்டால், இது உலகின் முதல் தங்கச் சாலையாக இருக்கும்.

# அமராவதியில் தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மையத்துக்கு அடிக்கல்

**அமராவதி, பிப்.10:**

நாட்டிலேயே முதன் முறையாக தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மைய கட்டிடத்திற்கு நேற்று அமராவதியில் மத்திய அமைச்சர் ஜிதேந்தர சிங் அடிக்கல் நாட்டினார். இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர்.



ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் நேற்று மாலை ‘அமராவதி குவான்டம் வாலி’ மைய கட்டிடத்திற்கு மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜிதேந்தர் சிங், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் கூட்டாக அடிக்கல் நாட்டினர்.

அப்போது சந்திரபாபு நாயுடு பேசுகையில், நாட்டின் தொழில்நுட்ப எதிர்காலத்திற்கு ஒரு புதிய அத்தியாத்தை தொடங்கி வைக்கும் விதமாக தற்போது அமராவதி குவான்டம் வாலியின் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

*50 ஏக்கர் நிலத்தில்...* - உலக குவான்டம் தொழில்நுட்பத்திற்கு ஆந்திராவை முன்னிலைபடுத்தும் நிகழ்வாக இது உள்ளது. இதன் மூலம் தேசிய குவான்டம் புரட்சிக்கு ஆந்திர மாநிலம் பிள்ளையார் சுழி போட்டுள்ளது. இதற்காக ஆந்திர அரசு அமராவதி தூளூரு பகுதியில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. நாட்டின் முதல் 133 க்யூபிட் குவான்டம் கம்ப்யூட்டரை அமராவதிக்கு கொண்டு வர ஐபிஎம், டிசிஎஸ், எல் அண்ட் டி போன்ற நிறுவனங்கள் முக்கிய நிறுவனங்களாக உள்ளன.

குவான்டம் கம்ப்யூட்டிங், குவான்டம் தகவல் தொழில்நுட்பம், குவான்டம் சென்சார், ஏஐ தொழில்நுட்பம், சைபர் செக்யூரிட்டி, ராணுவம், மருத்துவம், கல்வி, நிதித்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் பரிசோதனைகள், தொடக்கங்கள், வளர்ச்சி பணி திட்ட பரிசோதனைகள் இனி இங்கு நடக்கும்.

குவான்டம் வாலி அமைவதன் மூலம் உலகளாவிய பரிசோதனை மையங்கள், க்ளோபல் தொழில்நுட்ப முதலீடுகள், ஸ்டார்ட் அப் எக்கோ சிஸ்டம் விரிவாக்கம், பல லட்சம் இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள், வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வரும் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் குவான்டம் மைய கட்டிட பணிகள் நிறைவடையும்.

*டிசம்பருக்குள்...* - டிசம்பர் மாத இறுதிக்குள் குவான்டம் கம்ப்யூட்டரை இங்கு நிறுவ வேண்டும் என ஆந்திர அரசு லட்சியமாக கொண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள போஸ்டன், சிங்கப்பூர், ஷாங்காய் நகரங்களுக்கு ஈடாக இனி இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் குவான்டம் வாலி இயங்கும் என்பதில் பெருமை கொள்கிறேன் என சந்திரபாபு நாயுடு பேசினார்.

## வாக்குச்சாவடி சீட்டு விநியோகம்: தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

**புதுடெல்லி, பிப்.10:**

மேற்கு வங்கத்தில் வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (பூத் ஸ்லிப்) விநியோகிப்பது தொடர்பாக வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை இந்திய தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

மேற்கு வங்கத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் விதிகளுக்கு உள்பட்டு வாக்காளர்களுக்கு வீடு வீடாகச் சென்று வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்க வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு (பிஎல்ஓ) தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், ‘வாக்காளர்களின் பெயர், வயது, முகவரி, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண், பகுதி எண், பூத் எண், வாக்குச்சாவடி உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் வாக்குச்சாவடி சீட்டில் இடம்பெற்றிருக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தின் சின்னமும் இருக்க வேண்டும். தங்களுக்கு பிஎல்ஓ வாக்குச்சாவடி சீட்டை வழங்கவில்லை என்றால் தேர்தல் ஆணையத்தின் உதவி எண்ணை அழைத்து சம்பந்தப்பட்ட வாக்காளர் புகாரளிக்கலாம். புகார் பெறப்பட்ட 24 மணி நேரத்தில் வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்காத பிஎல்ஓ மீது நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.

## மகரமேளாவில் பெண் துறவிகள் மீது தாக்குதல்: மகளிர் ஆணையம் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.10:**

மகரமேளாவில் பெண் துறவிகள் தாக்கப்பட்டதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, உ.பி. காவல் துறைக்கு தேசிய மகளிர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

உ.பி.யின் பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமத்தில் மகர மேளா நடைபெற்று வருகிறது. இங்கு கடந்த மவுனி அமாவாசை தினத்தில் புனித குளியலின் போது உத்தராகண்டின் ஜோதிஷ்வர் பீடத்தின் சங்கராச்சாரியார் சுவாமி அவிமுக்தேஷ்வரானந்தாவும் புனித நீராட கிளம்பினார்.

அப்போது பல்லக்கில் சென்றவரை இறங்கி நடந்து செல்லுமாறு உ.பி. நிர்வாகம் வலியுறுத்தியது. சங்கராச்சாரியார் பட்டம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக காவல் துறையினர் கூறினர். இதனால் காவலர்களுக்கும் சங்கராச்சாரியாரின் பக்தர்களுக்கும் இடையே வாக்குவாதமும் மோதலும் நிகழ்ந்தன.

அதில், சங்கராச்சாரியாரின் பக்தர்கள் பெண் துறவிகளும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுமார் 20 பெண் துறவிகள் மீது காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதாக புகார் எழுந்தது. காயம் அடைந்த சிலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் துறவிகளில் பூஜா (40), ஜெய் தேவி பாண்டே (50), அர்ச்சனா தேவி (61), மம்தா பரோஹா (60), கமலா பரத்வாஜ் (60), ஜோதி கார்க்(39), ஸ்வேதா சுக்லா (25) ஆகியோர் முக்கியமானவர்கள்.

இதுதொடர்பாக அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் டாக்டர் கஜேந்திர சிங் யாதவ், தேசிய மகளிர் ஆணையத்தில் புகார் செய்தார்.

இதையடுத்து, பெண் துறவிகள் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரயாக்ராஜ் காவல் துறை ஆணையருக்கு மகளிர் ஆணையம் நோட்டீஸ அனுப்பி உள்ளது. அதில், 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து பதில் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# 50 லட்சம் பயனர்களைக் கடந்த ‘ஃபாஸ்டேக் வருடாந்திர பாஸ்’

**புதுடெல்லி, பிப்.10:**

தேசிய நெடுஞ்சாலைகளில் தொடர்ச்சியாக பயணம் செய்யும் வாகன ஓட்டிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ‘ஃபாஸ்டேக் வருடாந்திர பாஸ்’ திட்டத்தைப்பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 50 லட்சத்தைக் கடந்துள்ளது.



மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் கடந்த ஆண்டு சுதந்திர தினத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் வெறும் 6 மாதங்களில் 50 லட்சம் போ இணைந்துள்ளனா. இந்தக் குறுகிய காலகட்டத்திலேயே சுமார் 26.55 கோடி முறை சுங்கச்சாவடி பரிவாத்தனைகள் இத்திட்டத்தின் மூலம் நடந்துள்ளன. இத்திட்டத்தின் சிறப்பம்சமான, ஒருமுறை கட்டணமாக ரூ.3,000 மட்டும் செலுத்திவிட்டு, ஆண்டு முழுவதும் அல்லது மொத்தம் 200 முறை சுங்கச்சாவடிகளை எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி கடக்கலாம். ‘ராஜ்மார்க்யாத்ரா’ செயலி அல்லது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (என்எச்ஏஐ) வலைதளம் மூலம் இத்திட்டத்தில் இணையலாம். நாடு முழுவதும் உள்ள சுமார் 1,150 சுங்கச்சாவடிகளில் இந்த வசதி செல்லுபடியாகும்.

நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது பயணம் செய்யும் வணிக ரீதியல்லாத சொந்த வாகன உரிமையாளர்களுக்கு இது பெரும் பண சேமிப்பை வழங்குகிறது. தில்லி-என்சிஆர் பகுதியில் உள்ள பிஜ்வாசன் சுங்கச்சாவடியில் 57 சதவீத வாகனங்கள் இந்தப் பாஸ் மூலமே பயணிப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. பழைய ஃபாஸ்டேக் கணக்குடன் இதை இணைக்க முடியும் என்பதால், பொதுமக்களிடையே இதற்கு அதிக வரவேற்பு உள்ளது.


*2-ஆம் இடத்தில் தமிழகம்*

இந்த வருடாந்திர பாஸ் பயன்பாட்டில் மாநில வாரியான புள்ளிவிவரங்களின்படி, சண்டீகா 14 சதவீதப் பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடாந்து, தமிழகம் 12.3 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், தில்லி 11.5 சதவீதத்துடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

# ஹரியாணா ராட்டின விபத்தில் பலியான ஆய்வாளர் காவலர் பதக்கம் வென்றவர்

**புதுடெல்லி, பிப்.10:**

ஹரியாணா ராட்டின விபத்தில் பலியான காவல் ஆய்வாளர் 2020 இல் காவலர் பதக்கம் வென்றவர் எனத் தெரிய வந்துள்ளது.



58 வயதான காவல் ஆய்வாளர் ஜகதீஷ் பிரசாத், 2019-20 ஆம் ஆண்டில் ஹரியாணா ஆளுநரிடமிருந்து காவலர் பதக்கம் பெற்றவர். 1989 ஆம் ஆண்டு ஹரியாணா ஆயுத படையில் சேர்ந்த பிரசாத், 36 ஆண்டுகள் பணியில் இருந்து வந்துள்ளார்.

வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறவிருந்த நிலையில் நேற்று ஏற்பட்ட ராட்டின விபத்தில் பலியானது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பலியான ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி இழப்பீடும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கப்படும் என்று அம்மாநில டிஜிபி அஜய் சிங்கால் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், விபத்தில் காயமடைந்தவர்கள் தற்போது ஆபத்தில் இருந்து மீண்டுவிட்டதாக சுற்றுலா அமைச்சர் அரவிந்த் சர்மா தெரிவித்தார்.

ஹரியாணா மாநிலம், சூரஜ்குன்ட் கண்காட்சியில் சனிக்கிழமை ராட்சத ராட்டினம் திடீரென சரிந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் பணியில் இருந்த காவல் அதிகாரி ஒருவர் பலியானார்.

மேலும் 13 பேர் காயமடைந்தனர். விபத்து தொடர்பான விடியோக்கள் இணையதளங்களில் வைரலாகி வருகிறது. தகவல் கிடைத்ததும் மாவட்ட துணை ஆணையர் ஆயுஷ் சின்ஹா, சுற்றுலா மேலாண்மை இயக்குனர் பார்த் குப்தா ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தனர்.

மாலை 6 மணியளவில் சுமார் 15 பேருடன் ராட்டினம் திடீரென சரிந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# சீனிவாசமங்காபுரம் கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றம்

**திருப்பதி, பிப்.10:**

திருப்பதியை அடுத்த சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் பிரம்மோற்சவ விழா கோலாகலமாக தொடங்கியது. இன்று காலையில் 8.15 மணி முதல் 8.35 மணிக்குள் கும்ப லக்னத்தில் வேத அறிஞர்களின் மந்திரங்கள் ஓத, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பக்தர்களின் கோவிந்த நாம முழக்கத்திற்கு மத்தியில் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது.



முன்னதாக சுவாமியின் திருச்சி உத்சவம் காலை 6.30 மணி முதல் 8.15 மணி வரை நடைபெற்றது. இதன்மூலம், சுவாமி தனது பிரம்மோற்சவ ஏற்பாடுகளை முன்கூட்டியே ஒருமுறைமேற்பார்வையிடுவதாக ஐதீகம். திருச்சி உற்சவத்தையடுத்து அர்ச்சகர்கள் விஸ்வக்சேன வழிபாடு, வாஸ்துஹோமம், கருட லிங்கஹோமம், கருட பிரதிஷ்டை மற்றும் ரக்சா பந்தனம் போன்ற பூஜைகளை நடத்தினர். பின்னர் ஸ்ரீதேவி மற்றும் பூதேவி தாயார், ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி முன்னிலையில் கொடிக்கம்பத்தில் கருடன் உருவம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றப்பட்டது. இதன் நோக்கம் கணங்களையும், தெய்வங்களையும், பக்தர்களையும் பிரம்மோற்சவ நிகழ்ச்சிக்கு அழைப்பதாகும். கொடியேற்ற நிகழ்ச்சியில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாக அதிகாரி எம்.ரவிச்சந்திரா, இணை நிர்வாக அதிகாரி வீரபிரம்மம் மற்றும் அதிகாரிகள், கோவில் அர்ச்சகர்கள், திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர சுவாமியின் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் பிரமாண்டமான விழாவுடன் தொடங்கியிருக்கிறது. இன்று முதல் 16-ம் தேதி வரை கோவுலில் நடைபெறும் பிரம்மோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். பகவானின் பிரம்மோற்சவத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரம்மோற்சவத்தின் ஒரு பகுதியாக, பிப்ரவரி 12 ஆம் தேதி கருட சேவை, பிப்ரவரி 13 ஆம் தேதி தங்கத் தேரோட்டம், பிப்ரவரி 15 ஆம் தேதி தேரோட்டம் மற்றும் பிப்ரவரி 16 ஆம் தேதி சக்கரஸ்நானம் நடைபெறும்.

கருட சேவை நாளில் பக்தர்களின் கூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மணிப்பூர்: 4 பயங்கரவாதிகள் கைது

**இம்பால், பிப்.10:**

மணிப்பூரில் 2023ம் ஆண்டு இரு இனக்குழுக்களுக்கு இடையேமோதல் வெடித்தது. இந்த மோதல் வன்முறையாக மாறியதையடுத்து அம்மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. பின்னர், ராணுவம் குவிக்கப்பட்டு வன்முறை கட்டுக்கொள் கொண்டுவரப்பட்டது. மேலும், 2 ஆண்டுகளாக அமலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி கடந்த சில நாட்களுக்குமுன் விலக்கிக்கொள்ளப்பட்டது.

அதேவேளை, மணிப்பூரில் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நடவடிக்கையிலும் பாதுகாப்புப்படையினர் இறங்கியுள்ளார். இந்நிலையில், மணிப்பூரில் இன்று 4 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அம்மாநிலத்தின் டென்கொபல் , இம்பால் கிழக்கு மற்றும் மேற்கு, கக்சிங் ஆகிய மாவட்டங்களில் பதுங்கி இருந்த 4 பயங்கரவாதிகளை பாதுகாப்புப்படையினர் கைது செய்தனர். மேலும், கண்ணிவெடி, பீரங்கி குண்டு உள்ளிட்ட ஆயுதங்களையும் பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர்.

## கர்நாடகா: சிறிய ரக விமானம் வயலில் விழுந்து விபத்து - 2 பேர் படுகாயம்



**பெங்களூரு, பிப்.10:**

கர்நாடக மாநிலம் விஜயவாடாவில் தனியார் விமான பயிற்சி நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய ரக விமானத்தில் விமானியும், பயிற்சி விமானியும் வழக்கமான பயிற்சி மேற்கொண்டனர்.

விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென எஞ்சினில் கோளாறு ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த விமானி விமானத்தை உடனடியாக தரையிறக்க முயற்சித்தார். ஆனால், விமானம் விஜயவாடா அருகே உள்ள கிராமத்தின் வயல்வெளியில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 2 பேரும் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்த 2 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ராஜஸ்தான்: அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்து - 2 பேர் பலி

**ஜெய்ப்பூர், பிப்.10:**

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா மாவட்டம் தல்வாண்டி பகுதியில் 3 மாடிகளை கொண்ட அடுக்குமாடி கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடத்தில் ஓட்டல் செயல்பட்டு வந்தது.

இந்நிலையில், ஓட்டலில் 7ம் தேதி இரவு ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இருந்தனர். அப்போது, திடீரென அந்த அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில், ஓட்டலில் இருந்த 15 பேர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் இடிபாடுகளில் சிக்கிய 15 பேரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அங்கு அனைவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் படுகாயமடைந்தவர்களில் ஆரியன் , லக்ஷ்மன் ஆகிய 2 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நீட் தேர்வு தேதி அறிவிப்பு!



**புதுடெல்லி, பிப்.10:**

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள் மற்றும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு நீட் தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. அதேபோன்று, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி, 2026-27-ஆம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு வரும் மே 3-ஆம் தேதி நாடு முழுவதும் நடைபெற உள்ளது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உள்பட 13 மொழிகளில் நடைபெறும் இந்தத் தேர்வுக்கான இணையதள விண்ணப்பப் பதிவு இன்று(பிப். 8) தொடங்கியுள்ளது. இதற்கான கால அவகாசம் மார்ச் 8-ஆம் தேதி நிறைவு பெறவுள்ளது.இதையடுத்து விருப்பமுள்ள மாணவர்கள் HTTPS://NEET.NTA.NIC.IN என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள், கட்டணம் உள்ளிட்ட தகவல்களை மின்னஞ்சல் வாயிலாகவோ, 011 40759000 என்ற தொலைபேசி எண்ணிலோ அறிந்து கொள்ளலாம் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நீட் தேர்வுக்கான கட்டணம் பொதுப்பிரிவுக்கு ரூ.1700, பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.1600, எஸ்சி - எஸ்டி பிரிவுக்கு ரூ.1000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஜிஎஸ்டி மற்றும் சேவைக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷியாவில் கத்திக்குத்து தாக்குதல்: 4 இந்திய மாணவர்கள் உள்பட பலர் காயம்

**மாஸ்கோ, பிப்.10:**

ரஷியாவில் 15 வயது சிறுவன் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் 4 இந்திய மாணவர்கள் உள்பட பலர் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக அந்நாட்டு உள்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் இரீனா வோல்க் கூறுகையில், 'பஷ்கர்தஸ்தான் பகுதியில் அரசு மருத்துவப் பல்கலைக்கழகம் உள்ளது. அந்தப் பல்கலைக்கழகத்தின் விடுதிக்குள் சனிக்கிழமை நுழைந்த 15 வயது சிறுவன், அங்கிருந்த மாணவர்கள் பலரை கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தினார். அத்துடன் அந்தச் சிறுவன் தன்னைத் தானே கத்தியால் காயப்படுத்திக் கொண்டார். தகவலின்பேரில் நிகழ்விடம் விரைந்த காவல் துறையினர், அந்தச் சிறுவனைக் கைது செய்தனர்' என்று தெரிவித்தார். இந்தச் சம்பவம் துரதிருஷ்டவசமானது என்று அந்நாட்டுத் தலைநகர் மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது. கத்திக்குத்தில் 4 இந்திய மாணவர்கள் உள்பட பலர் காயமடைந்ததாகவும், அவர்களுக்கு உதவிபுரிய கசானில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் சென்றுள்ளதாகவும் அந்தத் தூதரகம் தெரிவித்தது.

ரஷியசுகாதார அமைச்சகம்வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'தாக்குதலில் காயமடைந்தவரில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதல் நடத்திய சிறுவன் தடை செய்யப்பட்ட நியோ நாஜி அமைப்பைச் சேர்ந்தவர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## ரஷியா - உக்ரைன் போர்: ஜூன் மாதத்துக்குள் தீர்வு - அமெரிக்கா கெடு!

**வாஷிங்டன், பிப்.10:**

உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி கூறுகையில், 'வரும் கோடை காலத்தின் தொடக்கத்துக்குள் (ஜூன் மாதம்) இப்போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான கால அட்டவணையைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஒருவேளை இந்தக் காலக்கெடுவுக்குள் தீர்வு எட்டப்படாவிட்டால், இரு நாடுகளுக்கும் அழுத்தம் கொடுக்க அமெரிக்கா தயங்காது' என்றார்.

அடுத்தகட்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தையை அமெரிக்காவில் நடத்த அந்நாடு விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்கு உக்ரைன் ஒப்புக்கொண்டதாகக் குறிப்பிட்ட ஸெலென்ஸ்கி, சமீபத்திய அபுதாபி முத்தரப்பு பேச்சுவார்த்தையில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லை என்றார். இருளில் மூழ்கிய உக்ரைன்: இதனிடையே, உக்ரைனின் மின் கட்டமைப்புகள் மீது ரஷியா சனிக்கிழமை அதிகாலை 400 ட்ரோன்கள் மற்றும் 40 ஏவுகணைகளை ஏவி தீவிர தாக்குதலை நடத்தியது. இதில் உக்ரைனின் 8 பிராந்தியங்களில் உள்ள மின் நிலையங்கள் சேதமடைந்தன. அணுமின் நிலையங்களின் மின் விநியோகப் பாதைகள் தாக்கப்பட்டதால், மின் உற்பத்திக் குறைந்தது.

இதனால், உக்ரைன் முழுவதும் மின்தட்டுப்பாடு ஏற்பட்டு, ஏற்கெனவே திட்டமிடப்பட்ட மின்தடை நேரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. கடுங்குளிர் நிலவும் இச்சூழலில், உக்ரைனை நெருக்கடிக்குள்ளாக்க அந்நாட்டின் மின் கட்டமைப்புகளைக் குறிவைத்து ரஷியா தாக்கி வருகிறது.

## "நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்" - ஒபாமா தம்பதி மீதான இனவெறி சாடல் குறித்து ட்ரம்ப்

**நியூயார்க், பிப்.10:**

அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, அவரது மனைவி பற்றிய இனவெறி ரீதியிலான சர்ச்சை வீடியோவுக்கு மன்னிப்பு கோரப் போவதில்லை என்று தற்போதைய அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முதல் கருப்பின அதிபராக பராக் ஒபாமா அறியப்படுகிறார். இந்நிலையில், அவரையும், அவரது மனைவியையும் இனவெறி ரீதியாக விமர்சிக்கும் வகையிலான பதிவு ஒன்று அமெரிக்காவின் தற்போதைய அதிபர் ட்ரம்ப்பின் 'ட்ரூத் சோஷியல்' சமூக வலைதளத்தில் வெளியானது. இந்த பதிவு வெளியான நொடி முதலே அந்நாட்டு மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் கண்டனத்தை பெற்றது. இதில் குடியரசு மற்றும் ஜனநாயக கட்சியினரும் அடங்குவர். இந்தச் சூழலில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறியதாவது: "நான் அந்த வீடியோவை முழுமையாக பார்க்கவில்லை. நான் அதன் முதல் பகுதியை மட்டுமே பார்த்தேன். அது தேர்தலில் இயந்திரங்கள் மூலம் நடந்த வாக்கு மோசடி தொடர்பானது. அதன் பின்னர் அதை மக்கள் பார்வைக்கு பகிர்ந்தேன். பொதுவாக இது மாதிரியான வீடியோக்களை முழுவதுமாக பார்ப்பார்கள். ஆனால், இதில் சிலர் அப்படி செய்யவில்லை என கருதுகிறேன். இந்த விவகாரத்தில் நான் தவறு செய்யவில்லை. அதனால் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்" என்றார்.

## வாஷிங்டன் போஸ்ட் ஊழியர்கள் பணிநீக்கம்: தலைமைச் செயல் அதிகாரியும் ராஜிநாமா!

**வாஷிங்டன், பிப்.10:**




அமெரிக்காவின் பிரபல நாளிதழான வாஷிங்டன் போஸ்ட்டில் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக தனது விளையாட்டு, புத்தக விமர்சனப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளில் பணியாற்றும் மூன்றில் ஒரு பங்கு அதாவது 300-க்கும் மேற்பட்ட பணியாளர்களை கடந்த வியாழக்கிழமை திடீரென பணிநீக்கம் செய்தது. மேலும், ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் பல இடங்களில் தனது கிளைகளையும் மூடியது.

இந்த சம்பவம் உலகளவில் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், வாஷிங்டன் போஸ்ட் தலைமைச் செயல் அதிகாரி வில் லூயிஸும் தனது பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பல்வேறு சர்ச்சைகளையும், வருவாய் இழப்பையும் சந்தித்து வந்த நிலையில், ஊழியர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அவர் வெளியேறியுள்ளதை அடுத்து, அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி ஜெஃப் டோனோஃப்ரியோ இடைக்காலத் தலைமைச் செயல் அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

பிரிட்டனில் பிறந்த வில் லூயிஸ் (56) 2024 ஆம் ஆண்டு ஜனவரியில் தி வாஷிங்டன் போஸ்டின் வெளியீட்டாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு தி வால் ஸ்ட்ரீட் ஜர்னலில் உயர் நிர்வாகியாகப் பணியாற்றியிருந்தார்.

இதுகுறித்து வில் லூயிஸ் தனது ராஜிநாமா கடிதத்தில், "வாஷிங்டன் போஸ்ட்டில் இருந்து விலகுவதற்கு இதுவே சரியான நேரம் என்று கருதுகிறேன். தலைமைச் செயல் அதிகாரியாகவும் வெளியீட்டாளராகவும் எனது பதவிக்காலம் முழுவதும் எனக்கு ஆதரவளித்த ஜெஃப் பெசோஸுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிறுவனத்திற்கு இவரைவிடச் சிறந்த உரிமையாளர் இருக்க முடியாது. எனது பதவிக்காலத்தில் இந்தப் பத்திரிகையின் எதிர்காலத்தை உறுதி செய்ய பல கடினமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முடிவுகளால், பல ஆண்டுகளுக்கு லட்சக்கணக்கான வாசகர்களுக்கு உயர்தரமான செய்திகளை வெளியிட முடியும். நன்றியுடன் வில்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு அமோக வெற்றி! - கருத்துக்கணிப்பு முடிவுகள்

**டோக்கியோ, பிப்.10:**

ஜப்பான் நாடாளுமன்ற கீழவைக்கான தேர்தலில் ஆளுங்கட்சி அமோக முன்னிலை பெற்று பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெறும் என்று கருத்துக்கணிப்பு முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையில் உள்ள 465 இடங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (பிப். 8) வாக்குப்பதிவு நடைபெற்றது. ஜப்பானில் இப்போது வரலாறு காணாத பனிப்பொழிவு நிலவிய போதும், வாக்காளர்கள் ஆர்வமுடன் சென்று ஜனநாயகக் கடமையாற்றினர்.

இந்த நிலையில் கருத்துக்கணிப்புகளின்படி, ஜப்பான் பிரதமராக கடந்த அக்டோபரில் பொறுப்பேற்று அந்நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையுடன் வரலாற்றில் இடம்பிடித்துள்ள சனே தகாய்ச்சியின் ஆளும் விடுதலை ஜனநாயகக் கட்சி (எல்டிபி) பெரும்பான்மை கிடைக்கும் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## 2-ஆம் உலகப்போரில் சிங்கப்பூருக்காகப் போராடி வீரமரணமடைந்த சீக்கியர்களுக்கு நினைவஞ்சலி!

**மலேசியா, பிப்.10:**




இரண்டாம் உலகப் போரில் சிங்கப்பூர் - மலாயாவைப் பாதுகாக்கப் போராடி வீரமரணம் அடைந்த சீக்கிய வீரர்களுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி சிங்கப்பூரில் ஞாயிற்றுக்கிழமை(பிப். 8) நடைபெற்றது. கிராஞ்சி போர் நினைவிடத்தில் நடைபெற்ற நினைவேந்தலில், இரண்டாம் உலகப்போரில் ஜப்பானிய படைகளை எதிர்த்துப் போராடி மரித்த 3,318 சீக்கிய வீரர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நினைவேந்தலில், சிங்கப்பூர் அமைச்சர் முரளி பிள்ளையுடன், இந்தியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, மலேசியா, நியூஸிலாந்து, கனடா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் உயர் ஆணையர்களும் கலந்துகொண்டு வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். அவர்களுடன் சுமார் 400க்கும் மேற்பட்ட சீக்கிய சமூகத்தைச் சார்ந்த மக்கள் போர் நினைவிடத்தில் திரண்டு வீரர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

## பாகிஸ்தானில் எலான் மஸ்க்கின் நிறுவனத்தை அனுமதிப்பதில் தயக்கம் காட்டும் அரசு!

**இஸ்லாமாபாத், பிப்.10:**




உலகின் முன்னணி கோடீஸ்வரர்களுள் ஒருவரான அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க்குக்குச் சொந்தமான 'ஸ்டார்லிங்க்' செயற்கைக்கோள் இணையதள சேவை நிறுவனம், பாகிஸ்தானில் தமது சேவையை வழங்க முனைப்பு காட்டி வருகிறது.

இதற்காக அந்நாட்டு அரசிடம் அனுமதி கோரியிருந்த நிலையில், ஸ்டார்லிங்குக்கு ஒப்புதல் அளிக்க பாகிஸ்தான் அரசு தயக்கம் காட்டுவதாகத் தகவலறிந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் விண்வெளி செயல்பாடுகள் ஒழுங்குமுறை வாரியம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, பாகிஸ்தானில் இணையதள சேவை வழங்க உரிமம் கோரி ஸ்டார்லிங்க் உள்பட மொத்தம் 5 நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

இதனால் அந்நாட்டில் பல லட்சம் டாலர் முதலீடு செய்ய முடியுமென்பதால், உரிமம் பெறுவதில், ஸ்டார்லிங்க், சீனாவைச் சேர்ந்த ஷாங்காய் ஸ்பேஸ்காம் சேட்டிலைட் டெக்னாலஜி லிமிடெட் உள்பட 5 நிறுவனங்களிடையே கடும் போட்டி நிலவுவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடனான எலான் மஸ்க்கின் நட்புறவில் தேய்வைத்தொடர்ந்து, சர்வதேச அரசியலில் நிலவும் அசாதாரணச் சுழல் மற்றும் பாகிஸ்தானின் முக்கிய தரவுகள் வெளியே போகும் அபாயம் இருப்பதாகக் கருதி பாதுகாப்பு காரணங்களைச் சுட்டிக்காட்டி அவரது நிறுவனத்துக்கு ஒப்புதல் அளிப்பதில் இழுபறி நீடிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

## மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த இந்திய வம்சாவளியினரின் கலாசார நடனம்



**கோலாலம்பூர், பிப்.10:**

பிரதமர் மோடி மலேசியாவுக்கு 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக மலேசியாவுக்கு சென்று சேர்ந்த அவரை, மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம் விமான நிலையத்திற்கே நேரில் சென்று வரவேற்றார். இந்நிலையில், கோலாலம்பூரில் பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் இந்திய வம்சாவளியினர் கலாசார நடனம் ஒன்றை ஆடினர்.

ஏறக்குறைய 800-க்கும் மேற்பட்டோர் ஒரே மேடையில், தொடர்ந்து 5 நிமிடங்கள் வரை, வெவ்வேறு வகையான இந்திய பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற நடனங்களை ஆடி காட்டினர். அந்நிய மண்ணில் இந்திய பாரம்பரியத்தின் பாதுகாப்பை வெளிப்படுத்தும் நோக்கிலும் பாரம்பரிய மற்றும் நவீன வம்சாவளியினருக்கு பாலம் ஏற்படுத்தும் நோக்கிலும் அமைந்த இந்த நிகழ்வு மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இதுபற்றி மலேசிய சாதனை புத்தகத்திற்கான உயரதிகாரி கிறிஸ்டோபர் வாங் கூறும்போது, இந்திய பாரம்பரிய நடனங்களை 800 நடன கலைஞர்கள் ஆடுவது என்பது எளிய விசயம் அல்ல. நிறைய ஒருங்கிணைப்பும், குழு வேலையும் தேவைப்படும்.

இதனை ஒன்றிணைத்த இசை இயக்குநருக்கும் நன்றிகள். இந்த சாதனைக்கு சான்றளித்ததற்காக மலேசிய சாதனை புத்தகங்களுக்கான அமைப்பு பெருமிதம் கொள்கிறது என கூறினார். கலாசார நடனம் ஆடி சாதனை படைத்த இந்திய வம்சாவளியினரை பிரதமர் மோடியும் பாராட்டினார்.

## வங்காளதேசம்: சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் மந்திரி திடீர் மரணம்

**டாக்கா, பிப்.10:**

வங்காளதேசத்தில் 2024-ம் ஆண்டு மாணவர் போராட்டம் தொடர்ச்சியாக, அவாமி லீக் கட்சியை சேர்ந்த ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, நாட்டை விட்டு தப்பினார். அவர், பாதுகாப்பாக இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார். அந்நாட்டில், வருகிற 12-ந்தேதி பொது தேர்தல் நடைபெற உள்ளது. எனினும், வங்காளதேச பொது தேர்தலில் போட்டியிட, ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில், வங்காளதேசத்தில் தினாஜ்பூர் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்ட அவாமி லீக்கை சேர்ந்த முன்னாள் மந்திரி மற்றும் மூத்த அரசியல்வாதியான ரமேஷ் சந்திர சென் (வயது 83) திடீர் மரணம் அடைந்துள்ளார்.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் சிறையில் அடைக்கப்பட்ட அவர், அரசியல் காரணங்களுக்காக விடுவிக்கப்படாமல் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டார். இந்நிலையில், சிறையில் இருந்தபோது, அவருக்கு நேற்று காலை உடல்நல குறைவு ஏற்பட்டது. உடனடியாக அவர் தினாஜ்பூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டார் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

## பாகிஸ்தானில் மசூதி தற்கொலைப்படை தாக்குதல் தொடர்பாக 3 பேர் கைது

**இஸ்லாமாபாத், பிப்.10:**

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஷியா மசூதியில் தற்கொலைப்படை பயங்கரவாதி நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினார். அதில் 30-க்கு மேற்பட்டோர் பலியானார்கள். நூற்றுக் கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்நிலையில், இத்தாக்குதல் தொடர்பாக கைபர் பக்துன்க்வா மாகாணம் பெஷாவரில் ஒரு பெண் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். 2 ஆண்களும், தற்கொலைப்படை பயங்கரவாதியின் சகோதரர்கள் ஆவர்.

அவர்களிடம் கைப்பற்றப்பட்ட அடையாள அட்டை மூலம் தற்கொலைப்படை பயங்கரவாதியின் பெயர் யாசிர் என்றும், பெஷாவரை நிரந்தர முகவரியாக கொண்டவர் என்றும் தெரிய வந்தது. மேலும், தாக்குதலுக்கு முன்பு 5 மாதங்கள் யாசிர் ஆப்கானிஸ்தானில் ஆயுதங்கள் கையாள்வதற்கும். தற்கொலைப்படை தாக்குதலுக்கும் முறையான பயிற்சி பெற்றதும் விசாரணையில் தெரிய வந்தது. தாக்குதலுக்கு பின்னணியில் உள்ள கும்பலை பிடிக்க போலீசார் உறுதி பூண்டுள்ளனர்.

## உக்ரைனில் குளிர் காலத்தை ஆயுதமாக்கி அழுத்தம் தரும் ரஷியா! மீண்டும் வான் வழி தாக்குதல்: ஒருவர் பலி!

**கீவ், பிப்.10:**



சுமார் 4 ஆண்டுகளாக நீடிக்கும் ரஷியா-உக்ரைன் போரில் வரும் ஜூன் மாதத்துக்குள் தீர்வுக் காண அமெரிக்கா கெடு விதித்துள்ள நிலையில், ரஷிய படைகளின் வான் வழி தாக்குதல்கள் தொடர்ந்தன.

ஞாயிற்றுக்கிழமை(பிப். 8) அதிகாலையில் டொனெட்ஸ்க் பகுதியில் க்ராமடார்ஸ்க் நகரில், குடியிருப்புப் பகுதிகளைக் குறிவைத்து ரஷிய படைகள் நடத்திய வான் வழி தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்தனர். அந்நகரில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில், 9 மாடி அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பற்றியது. சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற உக்ரேனிய அவசரகால சேவைப் பிரிவினர் தீயைப் போராடி கட்டுக்குள் கொண்டு வந்தனர். போல்டோவா பகுதியில் அமைந்துள்ள எரிசக்தி கட்டுமானம் ஒன்றும் ரஷியாவின் வான் வழி தாக்குதல்கலில் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளிர் காலத்தில் உக்ரேனிய மின் ஆற்றல் நிலையங்களைக் குறிவைத்து தாக்கும் ரஷியாவின் யுக்தி, குளிர் காலத்தை ஆயுதமாக அவர்கள் பயன்படுத்தி, உக்ரைனை அடிபணிய வைக்க முயற்சிப்பதையே காட்டுவதாக உக்ரேனிய அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

டான்பாஸ் பகுதியிலிருந்து வெளியேறுமாறு உக்ரைனுக்கு ரஷியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது. டான்பாஸ் நிலத்தை விட்டுத்தரப்போவதில்லை என்பதில் உக்ரைன் உறுதியாக இருப்பதால் அப்பகுதியில் சண்டை தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில், அமெரிக்காவின் மத்தியஸ்த முன்னெடுப்பை ஏற்றுக்கொண்டு மேற்கண்ட இரு தரப்பும் ஜூனுக்குள் சமரசம் செய்யும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.